செப்டம்பர் 2022

@NewsRotary /RotaryNewsIndia

ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org

Rotary

Vol.5, Issue 4 | Annual Subscription ₹480

FRANCHISOR OF THE YEAR
Franchise Award 2022

BEST EDUCATION BRANDS IN PRE-K CATEGORY
Economic Times
Best Education Brands 2022

Euro Kids™
Right Start, Flying Start!

The Right Start, Flying Start To A Successful Preschool Franchise

Join hands with India's Leading Pre-School Network

Why invest in a preschool franchise?

- Intelligent investment
- Great work-life balance
- A massive untapped market
- Preschools are a rising trend

Get Started With Your Own Preschool Franchise

Investment of 12-15 lakhs*

Investment amount varies depending upon the size (2500 sq. ft.) of the pre-school and the city

Long Term Vision

A business with sustained returns provided one has a long-term vision towards the venture

Connect with us

1800-209-5656 www.eurokidsindia.com

a part of LIGHTHOUSE LEARNING GROUP

Scan the QR code to enquire now

உள்ளே

12
இடைநிற்றலை தவிர்க்க அரசு ஆசிரமப் பள்ளிகள்!

18
களைகளுக்கு தண்ணீர் விடாதீர்கள்: ஜோன்ஸ்

24
தமிழக திட்டங்களைக் கண்டு வியந்த ரோட்டரி தலைவர் ஜோன்ஸ்

32
எழுத்தறிவுத் திட்டங்கள் ஏராளம்!

44
ரோட்டரியில் உறுப்பினர்கள் ஈடுபாடு முக்கியம்

46
உங்களின் வெற்றிக் கதைகளை உலகிற்கு சொல்லுங்கள்: ஜோன்ஸ்

48
நம் கதையின் மூலம் உலகை மாற்றலாம்

52
ஆனெட்களுடன் RI தலைவர் ஜோன்ஸ்

54
வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர் களுக்கு உதவிய RC வல்சாத்

56
அமைதிக்கான முகவரி, தேநீர் கிராண்ட் மாஸ்டர், ரோட்டேரியன்

64
நம் முழங்கால்களை வலுவாக்குவோம்

72
வளம் குன்றாப் பொம்மைக் கதை

ஓர் உயர்ந்த சேவைத் திட்டம்

பேஸ்மேக்கர் அணிந்துகொண்ட இதய நோயாளி ஒருவர் உள்ள அட்டைப் படம் RC ஜாம்ஷெட்பூர் நடத்தும் மனிதத்தன்மை மிக்க செயலைச் சுட்டிக் காட்டுகிறது. Dr விஜயா பரத் அவர்களுடைய வழிகாட்டுதலின் கீழ் தங்களுடைய திட்டத்தின் வழியாக 200க்கும் மேற்பட்ட நோயாளிகளின் இதயங்களைக் காத்துவரும் இச்சங்கத்தின் மிக உயர்ந்த பணியைப் பற்றிப் படித்து நான் மகிழ்ந்தேன். RI தலைவர்கள் இருவரும் சமீபத்தில் சென்னை RNT அலுவலகத்துக்கு வந்தார்கள் என்பதை அறிந்து மகிழ்ந்தேன். நம்முடைய உள்ளூர் ரோட்டரி இதழுக்கு அவர்கள் தரும் முக்கியத்துவத்தை இது காண்பிக்கிறது. தலைவர் ஜோன்ஸ் ரோட்டரி படிநிலையில் DEIன் முக்கியத்துவத்தையும், நம் அமைப்பில் பெண்கள் மற்றும் இளம் ரோட்டரியன்களை இன்னும் கூடுதலாகக் கொண்டுவர வேண்டிய தன் தேவையையும் நன்கு விளக்குகிறார்.

ஃபிலிப் முலப்பொனெ M T, RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211

இரண்டு RI தலைவர்கள் RNT அலுவலகத்துக்கு வந்தார்கள் என்பதைப் படித்து நான் மகிழ்ந்தேன். இரண்டு தலைவர்களும் ஊழியர்களும் இடம்பெற்றிருந்த புகைப்படங்களைப் பார்ப்பது மகிழ்ச்சியாக இருந்தது. ‘உள்ளே’ பக்கத்துக்கான புதிய தளவமைப்பு நேர்த்தியாகத் தோன்றுகிறது. DEIக்குக் கவனம் வழங்கப்படுவது குறிப்பிடவேண்டியது. பாலினச் சமநிலையைக் கொண்டு வருதல், ஒரு வேலைக்கு மிகவும் பொருத்தமான நபரைத் தேர்ந்தெடுத்தல் போன்றவை பின்பற்றப்படவேண்டும் என்று நான் ஏற்றுக்கொள்கிறேன்.

ஹூஸ்டன் மாநாடு பற்றிய தகவல்கள் அருமை. RC கொழும்புவைச் சேர்ந்த ரோட்டரியன்கள் ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் இணைந்தது, ரோட்டரி இந்தியா



தன்னுடைய அண்டை நாடாகிய இலங்கையை ஆதரிப்பதற்காகத் தன்னால் இயன்றதை செய்திருப்பது பாராட்டுக்குரியது.

TRF அறங்காவலர் கீதா மனெக் அவர்களுடனான பேட்டி எனக்கு மிகவும் பிடித்திருந்தது. புனே-யில் தலைவர் ஜோன்ஸ் மற்றும் DGN நிக் கிரயாசிச் ஆகியோருடைய ‘திருமணக் கொண்டாட்டம்’ மிகச்சிறப்பாக இருந்தது. அவர்கள் நம்முடைய உள்ளூர்ப் பண்பாட்டுடன் தங்களை எப்படிப் பொருத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இப் புகைப்படங்கள் காண்பிக்கின்றன.

விவேக் கன்டேல்வால்
RC தியோனர் — D 3141

RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் அவர்களுடைய அட்டைப் படம் (ஜூலை ‘22) மிகச் சிறப்பாக இருந்தது. ஆசிரியர் சுட்டிக் காண்பிப்பது போல், அவருடைய அகன்ற சிரிப்பு, மகிழ்ச்சியான பழகுமுறை, மின்னும் கண்கள் ஆகியவை அவருடைய ஆளுமையைப்பற்றி நிறையச் சொல்கின்றன. ‘காஷ்மீர் மருத்துவ முகாம் 2,500 அறுவைச்சிகிச்சைகளை நடத்தியது’ என்னும் Dr ராஜீவ் பிரதானின் கட்டுரை மிகவும் ஆர்வமூட்டியது.

டேனியல் சிட்டிலப்பிள்ளி
RC கலூர் — D 3201

RC ஜாம்ஷெட்பூரின் பேஸ்மேக்கர் திட்டம், ரோட்டரி தாய்ப்பால் வங்கி பற்றிய கட்டுரை மற்றும் லஷ்யா புகைப்படங்கள் சிறப்பாக உள்ளன.

அஞ்சு ரதோர்
RC சய்பாசா — D 3250

நம்முடைய புதிய ரோட்டரி தலைவர் ஜோன்ஸ் அவர்களை வரவேற்கிறோம். இதுவரை நாம் கண்ட ரோட்டரி ஆண்டுகளில் மிகச் சிறந்த ஒன்றாக அவருடைய ஆண்டு நினைவு கூறப்படும் படி செய்வோம். ஆசிரியர் ரஷீதா பகத் ஜோன்ஸின் ஆளுமையைப் பொருத்தமான சொற்களில் நன்றாகப் பதிவு செய்துள்ளார். ரோட்டரியில் அனைத்துத் தலைமைப் பொறுப்புகளுக்கும் நல்ல தகுதி உள்ள, திறமை உள்ள பெண்கள் தேவை என்கிற அவருடைய சொற்கள் கவனிக்கவேண்டியவை. DEI மந்திரத்தை ஏற்றுக்கொள்வதற்கும், உலகெங்கும் ரோட்டரியின் உறுப்பினர் எண்ணிக்கையை விரிவுபடுத்துவதற்கும் இதுதான் சரியான நேரம்.

S முனியாண்டி, RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

We welcome your feedback.Write to the Editor: **rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.** Mail your project details, along with hi-res photos, to **rotarynewsmagazine@gmail.com.** Messages on your club/district projects, information and links on zoom meetings/webinar should be sent only by e-mail to the Editor at **rushbhagat@gmail.com** or **rotarynewsmagazine@gmail.com.** WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.

Click on **Rotary News Plus** on our website **www.rotarynewsonline.org** to read about more Rotary projects.

அட்டையில்: RID 2981**ன் மியாவாகி காடுகள் திட்டத்திலிருந்து ஒரு காட்சி.**

Rotarians!

Visiting Chennai for business?

Looking for a compact meeting hall?

Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

Tariff:

₹2,500 for 2 hours
₹5,000 for 4 hours
₹1,000 for every additional hour

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org

Rotary at a glance

Rotary clubs	: 36,953
Rotaract clubs	: 11,404
Interact clubs	: 18,507
RCCs	: 12,411
Rotary members	: 1,184,996
Rotaract members	: 206,175
Interact members	: 425,661

As on August 18, 2022

Membership Summary

As on August 1, 2022 (Interim)

RI District	Rotary Clubs	No of Rotarians	Women Rotarians (%)	Rotaract Clubs	Interact Clubs	RCC
2981	135	6,656	7.84	63	55	240
2982	77	3,400	7.03	47	98	73
3000	132	5,257	9.44	99	306	214
3011	119	4,484	27.23	78	121	36
3012	148	3,688	23.18	71	83	61
3020	78	4,548	6.75	33	168	350
3030	98	5,149	15.09	126	358	380
3040	111	2,602	14.41	57	84	183
3053	74	2,931	17.30	36	51	127
3054	169	6,930	20.25	109	195	571
3060	105	4,841	15.04	65	80	151
3070	122	3,155	15.69	48	55	59
3080	107	4,290	12.96	147	207	117
3090	101	2,511	6.77	46	109	162
3100	100	2,129	9.77	14	28	151
3110	148	3,738	11.66	14	24	106
3120	90	3,693	16.76	66	34	55
3131	143	5,457	23.93	120	244	143
3132	90	3,547	11.93	34	126	167
3141	108	5,815	25.90	144	189	107
3142	103	3,753	21.26	84	144	86
3150	110	4,287	13.30	144	149	119
3160	78	2,736	10.01	30	20	82
3170	145	6,370	15.24	99	262	176
3181	87	3,418	9.57	35	198	116
3182	88	3,556	9.28	45	132	105
3190	163	6,585	19.09	204	273	72
3201	164	6,354	9.82	126	104	87
3203	94	4,709	7.88	74	234	37
3204	73	2,484	8.98	23	32	13
3211	155	5,123	8.55	7	28	133
3212	128	4,793	11.60	83	292	153
3231	94	3,414	7.88	34	99	417
3232	172	7,551	18.88	132	233	100
3240	108	3,653	16.64	67	412	226
3250	103	3,895	21.36	66	77	186
3261	93	3,289	19.09	17	25	44
3262	129	4,185	14.96	76	652	273
3291	159	4,029	24.75	137	103	674
India Total	**4,573**	**170,997**		**2,995**	**6,228**	**6,628**
3220	72	1,992	15.56	95	144	76
3271	133	2,895	17.03	152	186	25
3272	161	1,740	18.79	70	22	47
3281	309	8,915	18.38	279	156	207
3282	180	3,649	10.66	202	49	47
3292	153	5,853	17.87	176	140	131
S Asia Total	**5,509**	**194,049**		**3,874**	**6,781**	**7,085**

Source: RI South Asia Office

வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றல்

சமீபத்தில், நிக்கும் நானும் குவாத்தமாலா சென்றிருந்தோம், அங்கு மிகச்சிறந்த சக ரோட்டரி உறுப்பினர்கள், குடும்பங்களைச் சந்தித்தோம், அவர்கள் என்னை ''டியர் ஜெனிஃபர்'' என்று அன்பாக அழைத்தார்கள்.

மலைகள் நிறைந்த மேற்கு உயர் நிலங்களில் பட்ஜுனைப் பார்த்த பிறகு நாங்கள் அடிட்லன் ஏரிக்குக் கிளம்பினோம், அன்று இரவுக்குள் நாங்கள் சென்றடைய வேண்டும். நாங்கள் ஒரு குறுக்கு சாலையைத் தேர்ந்தெடுத்தால் அங்கு இன்னும் விரைவாகச் சென்று சேரலாம். உள்ளூர் மக்கள் அந்தச் சாலை ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளதாகச் சொன்னார்கள்,

குவாத்தமாலா கல்வியறிவு திட்டத்தால் பயனடைந்த மாணவியுடன் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மற்றும் அவர் கணவர் நிக் கிரயசிச். (கீழே) இவர்கள் ஆதரிக்கும் மற்றொரு திட்டத்தின் பயனாளி ரோஸா இக்ஸ்கோய் தன் தாய் மற்றும் குழந்தையுடன்.

"உங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இருக்காது'' என்று உறுதியளித்தார்கள்.

முதலில், எல்லாம் நன்றாக தான் இருந்தது. நாங்கள் மூடுபனி படர்ந்த, பசுமை யான காஃபி, மக்காச்சோள வயல்களின் வழியாக வண்டி ஓட்டிச் சென்றோம். மலைப்பகுதி அழகாக இருந்தது. ஆனால், ஓர் ஆற்றைக் கடக்கும் நேரத்தில், அங்கிருந்த பாலம் அடித்துச் செல்லப் பட்டிருந்தது. தொடர்ந்து செல்ல ஒரே வழி, எங்களுடைய சிறிய பேருந்தில் ஆற்றைக் கடப்பது தான். சில அழுத்தமான கணங்களுக்குப்பின், நாங்கள் அதை முயன்று பார்க்கத் தீர்மானித்தோம். நல்லவேளையாக, நாங்கள் பாதுகாப்பாக ஆற்றைக் கடந்து விட்டோம்.

இந்தத் துணிகரச் செயல், ரோட்டரியின் இரண்டு முக்கிய உண்மைகளை எனக்கு நினைவுபடுத்தியது. முதலில், நாம் உள்ளூரில் உள்ள, களத்தில் உள்ள திறமைகளை நம்புகிறோம், அதன் மூலம் நம் மிகச் சிறந்த செயலைச் செய்கிறோம். இரண்டாவது, முக்கிய இலக்குகளை எட்டு வதற்குச் சில நேரங் களில் நீங்கள் வசதி யற்ற வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு நாளும், நம் ரோட்டரி குடும்பத்திலிருந்து கற்கும் பெருமை எனக்குக் கிடைக்கிறது. ஒவ்வொரு பாடமும் வளர்வதற்கான ஒரு வாய்ப்பு, ஒவ்வொரு கதையும் நம்முடைய ஒட்டுமொத்த ரோட்டரியைக் கற்பனை செய்யுங்கள் ஆண்டில் ஓர் அத்தியாயத்தைச் சேர்க்கிறது.

ஜெனிஃபர் ஜோன்ஸ்
RI தலைவர்

சமத்துவமின்மை, அடக்குமுறையிலிருந்து சுதந்திரம்

கடந்த 75 ஆண்டுகளில் நாம் பலவிதமான முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியை நோக்கி நகர்ந்துள்ளோம். தொழில் உற்பத்தி, அறிவியல் தொழில்நுட்பத்தில் குறிப்பாக தகவல் தொழில்நுட்பத்தில் அபரிமிதமான முன்னேற்றம் கண்டுள்ளோம் என்றாலும் மகாத்மா காந்தியின் தலைமையில் இந்தியத் தலைவர்கள் நடத்திய விடுதலைப் போராட்டம், குறிப்பாக இளைய தலைமுறையினரிடம் பொலிவிழந்து வருகிறது. எனவேதான் ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளில் மூவர்ணக் கொடியை ஏற்றுங்கள் – என்று பிரதமர் விடுத்த வேண்டுகோள் அனைவரது இல்லத்திலும் எதிரொலித்தது. இந்த ஆண்டு லட்சக்கணக்கான இளைஞர்கள் சுதந்திர திருநாட்டில் வாழும் ஆர்வத்துடன், மூவர்ண தேசியக் கொடியை ஏற்றியும் அணிந்துகொண்டும் கொண்டாடியதை சமூக ஊடகங்களில் பார்த்தோம்.

ஆனால், ஒவ்வொரு கொண்டாட்டத்தையும் மதிப்பிடுதலும், சுயபரிசோதனை செய்துகொள்வதும் முக்கியமானது. கடந்த 75 ஆண்டுகளில் இந்தியா முன்னேறியுள்ளதா? நாம் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கிறோமா? என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். ஃபோர்பஸ் பத்திரிகையின் அடுத்த அடுத்த இதழ்களை அலங்கரிக்கும் வகையில் உலகின் பெரிய பணக்காரர்கள் பட்டியலில் பெரும் கோடீஸ்வரர்களை நாம் உருவாக்கியிருக்கலாம். ஆனால், இந்த 75 ஆண்டு களில் வறுமையிலும் ஏழ்மையிலும் உள்ளவர்கள் மற்றும் அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்வதை நாம் பார்க்கவில்லையா? இன்று இந்தியாவில் வாழும் லட்சக் கணக்கான பேர், தினமும் இரண்டுவேளை உணவுக்காக போராடி வருகிறார்கள். குழந்தைத் தொழிலாளர்கள், இளம் பெண்கள் கடத்தப்படுவது, குடும்ப வன்முறையில் ஆயிரக்கணக்கான பெண்கள் சிக்கித் தவிக்கையில் சமபங்கு, பாலின சமத்துவம் என்பது வெறும் கோஷங் களாக இருக்கும் நிலையில் என்ன வகையான சுதந்திர தின கொண்டாட்டத்தை நாம் கற்பனை செய்து பார்க்க முடியும்? நல்ல தரமான கல்வி, மற்றும் வளமான வாழ்க்கையை எதிர்நோக்கியுள்ள குழந்தைகளின் நிலை என்ன? பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு காரணங் களால் பள்ளிப்படிப்பை பாதியில் கைவிடும் பெண்கள், விருப்பம் இல்லாமல் சிறுவயதிலேயே திருமணத்துக்கு தள்ளப்படும் பெண்கள், என பல பிரச்னைகள் உள்ளன.

இந்திய ரோட்டேரியன் என்ற முறையில் மேலே குறிப்பிட்ட விஷயங்களில் சிலவற்றில் உள்ள குறைகளை சரி செய்யும் வாய்ப்பு உங்களுக்கு கிடைத்துள்ளது. ஒவ்வொரு சங்கமும் ஒரு திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்ற முடியும். உங்களில் பலர் அதைத்தான் செய்து வருகிறீர்கள். பெண்களின் மேம்பாட்டுக்காக PRIP சேகர் மேத்தா விடுத்த அழைப்பை நீங்கள் ஆர்வத்துடன் ஏற்றுக் கொண்டீர்கள். பூப்பெய்திய மாணவிகள் பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்திவிடக்கூடாது என்பதற்காக தனி கழிப்பறைகள் கட்டித் தருவது, குழந்தைகளின் இதயச் செயல்பாடுகளை சீர்செய்து அவர்களின் வாழ்வில் ஒளியேற்றுவது, நீர்நிலைகளை சீரமைப்பது, வறண்ட விவசாய நிலங்களை பசுமையாக்குவது, ஆயிரக் கணக்கான ஏழைப் பெண்களுக்கு தையல் பயிற்சி உள்ளிட்ட திறன் வளர்ப்பு பயிற்சி அளித்து அவர்கள் சுயமாக தொழில் செய்து வருமானம் தேடிக்கொள்ளச் செய்வது என பல திட்டங்களை ஆர்வத்துடன் செயல் படுத்தியதற்கு ரோட்டரி நியூஸ் ஒரு சாட்சியாகும். RID 3231ல் மட்டும் கடந்த 10 ஆண்டுகளில் 3 லட்சத்துக்கும் அதிகமான பெண்களுக்கு தையல் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் சுயதொழில் செய்ய தையல் இயந்திரங்களும் வழங்கப்பட உள்ளன. இதுதான் பெரிய மற்றும் நிலையான திட்டங்களின் சக்தியாகும்.

ஒவ்வொரு துளியும் கணக்கிடப்படும். அரசாங்கத்தின் துணை மற்றும் உதவியுடன், நாம் மெதுவாக, ஆனால், நிச்சயமாக வறுமை, சமத்துவமின்மை மற்றும் அநீதி, ஒடுக்குமுறை, மதவெறியின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திரமான இந்தியாவை நோக்கி அணிவகுத்துச் செல்ல முடியும். ஜெய் ஹோ!

இலங்கை ரோட்டரி UNICEF உடன் இணைந்து அந்த நாட்டின் மக்களுக்கு உதவிப்புரிய முன்வந்துள்ளது பாராட்டத்தக்க செயலாகும். நாமும் நம் அண்டை நாட்டுக்கு உதவ இது ஒரு நல்ல வாய்ப்பாகும்.

ரஷீதா பகத்

Governors Council

RID 2981 Selvanathan V
RID 2982 Saravanan P
RID 3000 I Jerald
RID 3011 Ashok Kantoor
RID 3012 Dr Lalit Khanna
RID 3020 Bhaskar Ram V
RID 3030 Dr Anand A Jhunjhunuwala
RID 3040 Jinendra Jain
RID 3053 Rajesh Kumar Chura
RID 3054 Dr Balwant S Chirana
RID 3060 Shrikant Balkrishna Indani
RID 3070 Dr Dushyant Choudhary
RID 3080 Kalta V P
RID 3090 Gulbahar Singh Retole
RID 3100 Dinesh Kumar Sharma
RID 3110 Pawan Agarwal
RID 3120 Anil Agarwal
RID 3131 Dr Anil Lalchand Parmar
RID 3132 Rukmesh Pannalalji Jakhotiya
RID 3141 Sandip Agarwalla
RID 3142 Kailash Jethani
RID 3150 Talla Raja Sekhar Reddy
RID 3160 Vommina Naga Satish Babu
RID 3170 Venkatesh H Deshpande
RID 3181 N Prakash Karanth
RID 3182 Dr Jayagowri Hadigal
RID 3190 Jeetendra Aneja
RID 3201 Rajmohan Nair S
RID 3203 B Elangkumaran
RID 3204 V V Pramod Nayanar
RID 3211 K Babumon
RID 3212 Muthu V R
RID 3231 Palani J K N
RID 3232 Dr. Nandakumar N
RID 3240 Kushanava Pabi
RID 3250 Sanjeev Kumar Thakur
RID 3261 Shashank Rastogi
RID 3262 Pravudutta Subudhi
RID 3291 Ajoy Kumar Law

Printed by P T Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by P T Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or RI. No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions is welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

Website

RI இயக்குனர்

எழுத்தறிவு கனவை நனவாக்குவோம்!

குழந்தைகளின் உண்மையான திறனை உணர்ந்து அவர்களின் கனவுகளை அடைய கல்வி உதவும். ஆனால், கல்வி வாய்ப்புகள் மறுக்கப்படும் போது அவர்களின் கனவுகள் தகர்க்கப்படுகின்றன. கோவிட் தொற்று காரணமாக உலக அளவில் பள்ளிக்குழந்தைகள் 1.8 டிரில்லியன் மணி நேரத்தை இழந்துள்ளதாக “யுனிசெப்” வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

உலகின் சவாலான மனிதாபிமான பிரச்னைகளை கையாள்வதில் ரோட்டரி ஒரு வரலாற்றைக் கொண்டுள்ளது. இதற்கு உதாரணம் ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கம் (RILM). இது தரமான கல்வி மூலம் முழு எழுத்தறிவு அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2021ம் ஆண்டு ஜனவரி முதல் ஆஷா கிரண் திட்டத்தின் கீழ் பள்ளிப்படிப்பை இடைநிறுத்தியவர்கள், பள்ளிக்கே செல்லாதவர்கள் மற்றும் பின்தங்கிய குழந்தைகளை மீட்டெடுக்க CRY அமைப்புடன் RILM கூட்டாண்மை அமைத்துக் கொண்டு செயல்பட்டு வருகிறது. ரோட்டரி 1 முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவர்கள் பயன் பெறும் வகையில் NCERTயின் 12 தொலைக்காட்சி அலைவரிசைகளில் மின் கற்றல் முறைகளை ஒளிபரப்பு செய்து மத்திய அரசுக்கு ஆதரவு அளித்து வருகிறது.

ஆசிரியர்களின் டிஜிட்டல் அறிவாற்றல் திறன்களை வளர்க்க RILM சார்பில் 5 நாள் பயிலரங்கு நடைபெற்றது. மகாராஷ்டிரத்தில் நடைபெற்ற பயிலரங்கில் 70,000 ஆசிரியர்களும், தில்லியில் நடந்த பயிலரங்கில் 5,000 ஆசிரியர்களும் பங்கேற்றனர்.

நாட்டிலுள்ள 287 மில்லியன் எழுத்தறிவு இல்லாத வயது வந்தவர்களிடம் எழுத்தறிவை புகுத்தாமல், முழு எழுத்தறிவு இலக்கை எட்டுவது கடினமாகும். வயதுவந்தோருக்கான கல்வியில் ரோட்டரி முழுக்கவனம் செலுத்தி வருகிறது.

ரோட்டரி சங்கங்கள், மாவட்டங்கள் மூலம் RILM நாடு முழுவதும் 3,112 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளை மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றியமைத்துள்ளது.

குழந்தைகளின் வாழ்க்கையை வளப்படுத்தவும், அவர்களை சமூகம், தேசம் மற்றும் உலக அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் நல்ல தலைவர்களாக உருவாவதற்கான நல்ல சூழ்நிலையையும், நடைமுறையையும் நாம் இணைந்து ஏற்படுத்துவோம்.

Dr மகேஷ் கோட்பாகி
RI இயக்குனர், 2021–23

களின் செய்திகள்

இது நமக்கு கிடைத்த சிறந்த வாய்ப்பு

சமீபகாலத்தில், நமது அமைப்பில் ஏற்பட்ட இரண்டு முன்னேற்றங்கள் வரும் ஆண்டுகளில் நாம் செல்லும் பாதையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். ஒன்று ரோட்டரியின் நிலையில் மாற்றம். இரண்டாவது, சுற்றுச்சூழலை நமது 7வது பகுதியாக வைத்து கவனம் செலுத்துவது.

நமது பிராந்தியத்தில் உள்ள ரோட்டேரியன்கள், ரோட்ராக்ட் பற்றிய நமது கொள்கை மாற்றத்தின் தாக்கத்தை புரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் ரோட்டரியின் முழு நன்மைக்காக இதை பயன்படுத்த முடியும். ரோட்டராக்ட் மற்றொரு உறுப்பினர் வகை என்றாலும், இப்போது அதிக சுயாட்சியுடன், நாம் கூட்டாக சரியான திசையில் நகர்வதை உறுதிசெய்ய இந்த மாற்றத்தை ஒருங்கிணைக்க அவர்களுக்கு உதவ வேண்டும். நிலையான வளர்ச்சியை உறுதி செய்யவும், சர்வதேச மானிய உதவிக்கு விண்ணப்பிக்கவும், அவர்கள் ஏற்கெனவே கையாண்டதைவிட மிகப்பெரிதான சேவைத் திட்டங்களை நிறைவேற்றவும் அவர்களுக்கு நமது உதவி தேவைப்படும். நாம் நினைவில் கொள்ள வேண்டிய விஷயம் என்னவெனில், நமது பிராந்தியத்தில் ரோட்ராக்ட் உறுப்பினர் என்பது பெரும்பாலும் கல்லூரி அடிப்படையாகக் கொண்டது. எனவே இப்போதைய மாற்றத்தை நாம் கவனமாகக் கையாள வேண்டும். ரோட்டேரியன்கள், ரோட்ராக்டர்கள் மீது ஆதிக்கம் செலுத்தாமல் எச்சரிக்கையுடன் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். இதை உறுதிசெய்யும் பொறுப்பு நமது மாவட்டங்களில் உள்ள ரோட்டரி தலைமைக்கு உள்ளது.

இரண்டாவது வளர்ச்சி சுற்றுச்சூழல் பற்றியது. இது ரோட்டேரியன்களின் கற்பனையைப் பெற்றுள்ளது. நான் பல்வேறு மாவட்டங்களுக்கு பயணம் சென்றபோது, தண்ணீர், மண் மற்றும் காற்று போன்ற இயற்கை வளங்களை நியாயமான வகையில் பயன்படுத்துவதை ஆதரிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதை கவனித்தேன். இது இளைய உறுப்பினர்களை ஈர்க்கவும், ஈடுபடுத்தவும் மற்றும் அவர்களை தக்க வைத்துக் கொள்ளவுமான வாய்ப்பை நமக்கு ஏற்படுத்தித் தந்துள்ளது. நாம் திட்டமிட்டு, இளைய உறுப்பினர்களின் முழு ஈடுபாட்டுடன் சேவைத் திட்டங்களை செயல்படுத்தி நிறைவேற்ற வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு காரணிகளும் ரோட்டரியின் எதிர்காலத்துக்கு உத்தரவாதம் அளிக்கும் ஒரு தொடர்பை கொண்டிருப்பதை காணலாம். நாம் செய்ய வேண்டியது ஒரு புதிய ரோட்டரியை கற்பனை செய்வதுதான்!

A S வெங்கடேஷ்
RI இயக்குனர், 2021–23

Board of Trustees

AS Venkatesh **RI Director & Chairman, Rotary News Trust**	RID 3232
Dr Mahesh Kotbagi **RI Director**	RID 3131
Dr Bharat Pandya **TRF Trustee**	RID 3141
Rajendra K Saboo	RID 3080
Kalyan Banerjee	RID 3060
Shekhar Mehta	RID 3291
Panduranga Setty	RID 3190
Ashok Mahajan	RID 3141
PT Prabhakar	RID 3232
Dr Manoj D Desai	RID 3060
C Basker	RID 3000
Kamal Sanghvi	RID 3250
Gulam A Vahanvaty	RID 3141
RI Director-elect	
Anirudha Roy Chowdhury	RID 3291
TN Subramanian	RID 3141

Executive Committee Members (2022–23)

Dr Dushyant Choudhary **Chairman, Governors Council**	RID 3070
Venkatesh H Deshpande **Secretary, Governors Council**	RID 3170
Dr N Nandakumar **Treasurer, Governors Council**	RID 3232
Dinesh Kumar Sharma **Advisor, Governors Council**	RID 3100

Editor
Rasheeda Bhagat

Deputy Editor
Jaishree Padmanabhan

Administration and Advertisement Manager
Vishwanathan K

Rotary News Trust
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone: 044 42145666
rotarynews@rosaonline.org
www.rotarynewsonline.org

Magazine

Advertise in Rotary News



Tariff	
Back cover	₹1,00,000
Inner Front Cover	₹60,000
Inner Back Cover	₹60,000
Inside Full Page	₹30,000
Half Page	₹20,000
Specifications	
17 x 25 cm	Full page
17 x 12 cm	Half page

Advertisements in colour only

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org

FIND A CLUB

ANYWHERE IN THE WORLD!

Use Rotary's free Club Locator and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator

District Wise TRF Contributions as on July 2022–23 (Interim)

(in US Dollars)

District Number	Annual Fund	PolioPlus Fund	Endowment Fund	Other Funds	Total Contribution
India					
2981	4,229	127	0	625	4,981
2982	3,714	987	1,000	1,413	7,114
3000	1,706	1,361	0	0	3,067
3011	3,589	0	0	41,494	45,083
3012	23	0	0	21,715	21,739
3020	1,457	160	0	0	1,617
3030	4,697	30	0	1,050	5,778
3040	1,818	154	0	3,607	5,579
3053	15,254	0	0	0	15,254
3054	1,635	0	0	0	1,635
3060	2,292	25	0	0	2,317
3070	125	100	0	2,350	2,575
3080	2,869	0	0	0	2,869
3090	1,000	0	0	0	1,000
3100	6,751	0	0	0	6,751
3110	38	0	2,025	242,000	244,063
3120	0	0	0	0	0
3131	29,961	205	22,785	72,618	125,569
3132	4,858	300	25,000	0	30,158
3141	141,272	27,200	1,000	1,620	171,092
3142	31,933	1,000	0	25	32,958
3150	3,427	1,109	0	0	4,536
3160	797	1,000	0	0	1,797
3170	3,629	2,308	506	0	6,444
3181	24,862	0	25	0	24,887
3182	622	253	0	0	875
3190	4,808	0	0	735	5,543
3201	13,618	225	0	251,053	264,896
3203	445	348	0	11,522	12,316
3204	1,220	0	0	152	1,372
3211	37,298	0	0	1,049	38,348
3212	6,433	6,358	0	31,646	44,436
3231	31,874	14,217	30,886	525	77,502
3232	12,845	1,454	0	695	14,994
3240	7,063	6,073	1,000	0	14,136
3250	1,699	25	0	0	1,724
3261	290	13	0	0	303
3262	422	0	0	0	422
3291	12,703	0	15,033	0	27,736
India Total	**423,279**	**65,031**	**99,261**	**685,895**	**1,273,466**
3220 Sri Lanka	75	0	0	0	75
3271 Pakistan	25	0	0	250	275
3272 Pakistan	200	0	0	5,000	5,200
3281 Bangladesh	2,306	181	0	3,492	5,980
3282 Bangladesh	325	0	0	2,806	3,131
3292 Nepal	1,984	525	0	4,068	6,577
South Asia Total	**428,194**	**65,737**	**99,261**	**701,512**	**1,294,704**

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

Source: RI South Asia Office.

கல்வியறிவை மேம்படுத்துவோம்



இவ்வுலகில் 773 மில்லியன் வயது வந்தோருக்குப் படிக்கத் தெரியாது (அவர்களில் பெரும்பாலானோர் பெண்கள்) என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களால் இந்தச் சொற்களைப் படிக்கவோ தங்கள் சொந்தப் பெயரை எழுதவோ இயலாது. அவர்களுடைய வாழ்க்கையில் சிரமங்கள் இருப்பதும், அவர்கள் பணி புரியக் குறைந்த வாய்ப்புகள் அமைவதும் தெளிவு. இந்தச் சூழ்நிலை அவர்களுடைய பிழை இல்லை.

ரோட்டரி அவர்களை மறந்துவிடவில்லை. செப்டம்பர் மாதத்தை அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவு மாதமாக நாம் கொண்டாடுவோம், ரோட்டரி மற்றும் ரோட்டரி அறக்கட்டளை செய்யும் தொலைநோக்குத் தாக்கத்தை, இந்த முயற்சிக்குக் கை கொடுக்கும் வழிகளை நாம் எப்படிக் கண்டறிகிறோம் என்பதைப் பார்ப்போம்.

தொடக்கப்புள்ளி விவரங்களின்படி, சென்ற ஆண்டில் மட்டும் ரோட்டரி அறக்கட்டளை அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் திட்டங்களுக்கு மொத்தம் $6.3 மில்லியன் மதிப்புள்ள 104 பன்னாட்டு நல்கைகளை அங்கீகரித்தது. இதுபோல் நம் சங்கங்களும் மாவட்டங்களும் பல பத்தாண்டுகளாக இதற்குப் பணியாற்றிவந்துள்ளன. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த நான் க்வீன்ஸ்லாந்தைச் சேர்ந்த PDG டிக் வால்கருடைய பணியை எண்ணிக் குறிப்பிட்ட பெருமையை உணர்கிறேன். அவர் அறக்கட்டளைப் பொருத்த நல்கை ஒன்றைப் பயன்படுத்திச் செறிவாக்கிய மொழி எதிர்ப்படுதல் முறையை உருவாக்கினார், அதை உலகெங்கும் கல்வித் தலைவர்கள் பின்பற்றிவருகிறார்கள்.

சமூக அளவில், நம் சங்கங்கள் புத்தக நிகழ்ச்சிகளை நடத்தி பல குழந்தைகளின் வாழ்க்கைகளை மாற்றியுள்ளதை அனைவரும் அறிவார்கள். ஆனால், நாம் பல சங்கங்கள், மாவட்டங்களை ஒன்றாகச் சேர்த்துப் பெரிய அளவிலான ரோட்டரி அறக்கட்டளைத் திட்டங்களில் ஈடுபடும்போது, ஒட்டுமொத்தச் சமூகங்களில் பல தலை முறைகளுக்குத் தாக்கம் கொண்டுவரும் சாத்தியம் நம்மிடம் உள்ளது.

எழுத்தறிவில் ரோட்டரி மாற்றம் உண்டாக்கும் வாய்ப்புகள் ஏராளம். அடிப்படைப் படித்தல் மற்றும் எழுதுதலை எட்டியவுடன், அது எண் அறிவு, டிஜிட்டல் அறிவு மற்றும் நிதி அறிவு பிற எழுத்தறிவு வகைகளுக்கு வழியைத் திறந்துவிடுகிறது.

பிரபஞ்சத்தின் நம்முடைய மூலையை மேம்படுத்தும் நம் வாய்ப்பை நாம் வீணாக்க வேண்டாம். எழுத்தறிவு மற்றும் கல்வியைப்பற்றிப் பெரிதாகச் சிந்தித்து உலகை மாற்றும்படி நான் உங்களை ஊக்குவிக்கிறேன், இந்த மாதமும், அதன்பிறகு எப்போதும்.

இயன் ரிஸ்லி
TRF அறங்காவலர் தலைவர்

தாக்கமுள்ள திட்டங்களைச் செயல்படுத்த உதவும் TRF

மக்கள் ஒரு காரணத்துக் காக தான் எதையும் செய் கிறார்கள். நாமெல்லாம் ரோட்டரியில் சேரக் காரணம், ஒத்த சிந்தனை உள்ள மக்களுடன் சேர்ந்து சேவை புரிய, வாழ்க்கை களைத் தொட, சமூகங்களை மாற்றப் பணியாற்றவேண்டும் என்று நாம் விரும்பினோம். அதைச் செய்ய மிகச் சிறந்த வழி, ரோட்டரி அறக்கட்டளை வழி. TRF வழியாக நாம் செய்யும் பணியும் சேவையும் நம் வீட்டு வாசல்களில் தொடங்குகிறது, எல்லைகளைக் கடந்து உலகின் ஒவ்வொரு மூலையையும் எட்டுகிறது. ஏழு கவனப் பகுதிகள் தாக்கமுள்ள பணியைச் செய்ய நமக்கு வாய்ப்பளிக்கின்றன. பல நேரங்களில் நாம் பிற அமைப்புகளுடன் சேர்ந்தும் இவற்றைச் செய்கிறோம்.

அப்படிப்பட்ட கூட்டுப் பணிகளில் ஒன்று, USAID உடனானது. கேட்ஸ் அறக்கட்டளைக் கூட்டுப் பணிக்கு அடுத்தபடியாக, RI மற்றும் TRF கொண்டுள்ள மிகப் பெரிய கூட்டுப் பணி, USAID உடனானது. கானா, உகாண்டா, இத்தாலி, கிழக்கு ஐரோப்பாவில் ரோட்டரி மற்றும் ரோட்டரி அறக்கட்டளை வழியாக USAID பல திட்டங்களில் குறிப்பிடக்கூடிய முதலீடுகளைச் செய்துள்ளது. உலகெங்கும் பல அமைப்புகள் TRF மீது வைத்துள்ள நம்பிக்கை, உயர் மதிப்புக்கான ஒரு சான்று இது. இந்த நம்பிக்கையைக் கட்டமைப்பதும் புதிய கூட்டுப் பணிகளை வலுவாக்குவதும்தான் இன்றைய தேவைகள். வெற்றிகரமான கூட்டுப் பணிக்கு இன்னோர் எடுத்துக்காட்டு, அளவுத் திட்டங்கள். நம்பக்கூடிய கூட்டாளராக நாம் நம் மதிப்பை நிரூபிக்கும் போது, திட்டங்கள் பல மடங்கு வளர்கின்றன. ரோட்டரியின் வழியாகப் பணியாற்றும் போதும் சங்கங்களும் மாவட்டங்களும் இதைக் கவனிக்கவேண்டும்.

TRFக்கு நம் உறுதி மற்றும் ஆதரவின் வழியாக ஒவ்வோர் ஆண்டும் நம் தாக்கம் தொடர்ந்து வளர்கிறது. நல்லெண்ணம், புரிந்துகொள்ளல் மற்றும் அமைதியை நோக்கிப் பணியாற்றுவதற்கான வழி, கருவி இதுதான். நம் சேவை, எண்ணங்கள் மற்றும் யோசனைகளைச் செயல்படுத்த TRF நம்மை அனுமதிக்கிறது. நாம் தனியாகச் செய்யக்கூடியவற்றைவிட, ஒன்றாகச் சேர்ந்து செய்யக்கூடியவை மிகுதி என்பதும் நமக்குத் தெரியும்.

ரோட்டரி அறக்கட்டளையில் முதலீடு செய்வதன்மூலம் பிறருக்கு வழிகாட்டுங்கள். நாம் ஒன்றாகச் சேர்ந்து நம் அறக்கட்டளை வழியாகத் தொடர்ந்து மிகச் சிறந்த பணியை ஆற்றுவோம்.

Dr **பரத் பாண்ட்யா**
அறங்காவலர், TRF

Rotary PEOPLE OF ACTION

இடைநிற்றலை தவிர்க்க அரசு ஆசிரமப் பள்ளிகள்!

ரஷீதா பகத்

சமீபத்தில் பெய்த பலத்த மழையின் காரணமாக பெங்களூரு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல பகுதிகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. நகரைச் சுற்றி 250 கி.மீ. தொலைவில் உள்ள 28 பழங்குடியின குக்கிராமங்களில் வசிக்கும் மக்கள் படும் துன்பங்களை செய்தியாகப் படித்த பெருநகர சங்கங்களைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் வேதனை அடைந்தனர்.

ஹெச்டி கோட்டையில் உள்ள குக்கிராமங்கள் மற்றும் ஹன்ஸூரு தாலுகா மழையால் வெகுவாக சேதமடைந்திருப்பதைக் கண்டோம். மேலும் இங்குள்ள கிராம மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவித்தனர். குழந்தைகளும் பாதிக்கப்பட்டருப்பது தெரியவந்தது என்கிறார் பெங்களூர் லேக்ஸைடு ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் காசிநாத் பிரபு. அவர் இப்போது 3190 மாவட்டத்தின் DLCC ஆக பணியாற்றி வருகிறார்.

மாவட்ட எழுத்தறிவுக்குழு, மாவட்டத்தில் உள்ள வேறு சில சங்கங்கள் மற்றும் நன்கொடை யாளர்களுடன் இணைந்து ரூ.3.5 லட்சம் நிதி திரட்டி சைதன்யா என்னும் திட்டத்தை செயல் படுத்த முன்வந்தனர். இத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள், எழுது பொருள்கள் உள்ளிட்ட கல்வி நிவாரண உதவிகள் மற்றும் 28 குக்கிராமங்களில் மழையால் சேதமடைந்த மாணவர்களின் வீடுகளுக்கு 1,000 தார்ப்பாய்கள் வழங்க முடிவு செய்யப்பட்டது.

உள்ளூர் பிரமுகர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் மாவட்டக் குழு பயனாளிகளைத் தேர்வுசெய்தது. மேலும் அவர்கள் உதவியுடன் கல்வி உதவி நிவாரணப் பொருள்களும், தார்ப்பாய்களும் விநியோகம் செய்யப்பட்டன. இந்த குக்கிராமங்கள் கர்நாடக மாநிலம் மைசூர் எல்லையில் அமைந்துள்ளதால் இவற்றை அணுகுவது கடினமானதாகும் என்கிறார் பிரபு. நாங்கள் மாணவர்களுக்கு 75 தார்ப் பாய்கள், 4,500-க்கும் மேலான நோட்டுப்புத்தகங்கள் மற்றும் 250 வடிவியல் கருவிகள் (ஜியோமெட்ரி கருவிகள்

அடங்கிய பெட்டிகள்) வழங்கப்பட்டன. இவற்றை வழங்க நாங்கள் நெடிய பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. பெங்களூருவிலிருந்து காலை 4.30 மணிக்கு புறப்பட்ட நாங்கள், மறுநாள் அதிகாலை 2 மணிக்குத் தான் திரும்பினோம் என்றார் அவர்.

இங்குள்ள குழந்தைகளின் பள்ளிப்படிப்பு மற்றும் குழந்தைகளின் வாழ்க்கை நிலை மிக மோசமாக உள்ளது. இங்குள்ள குழந்தைகளின் பெற்றோர்கள் நெல் வயல்களிலும், காஃபி தோட்டங்களிலும் தினக்கூலிகளாகப் பணியாற்றி வருகின்றனர். விவசாயம் செய்யும் பருவத்தில்தான் வேலை என்பதால் அவர்கள் தொடர்ந்து ஓரிடத்தில் ஒருவாரம் அல்லது பத்து நாள்கள் தங்கி வேலை செய்ய வேண்டியிருக்கும். இதனால், குழந்தைகளை சரிவர கவனிக்க முடியாமல், அவர்களைக் கூடவே அழைத்துச் சென்று விடுவார்கள். எனவே குடும்பத்தினர் அனைவரும் வாழ்வாதாரம் தரும் இடத்தைத் தேடிச்செல்வார்கள்.

இதன் விளைவு, இந்த கிராமங்களில் அரசு ஆரம்பப் பள்ளிகளை கட்டியிருந்தாலும் குழந்தைகள் பெரும்பாலான நாட்கள் கிராமத்துக்கு வெளியே குடும்பத்தினருடன் சேர்ந்து இருப்பதால் பள்ளிக்குச் செல்லமாட்டார்கள். உள்ளூர் பிரமுகர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் உரையாடியபோது, பருவ காலத்தில் வேலை கிடைக்கும் பெற்றோர்கள் வெளியில் இருப்பதாலும், குழந்தைகளை அழைத்துச் சென்று விடுவதாலும் பள்ளிகள் பெரும்பாலும் காலியாகவே இருக்கும் என்ற சோகமான உண்மையை தெரிந்துகொண்டோம் என்கிறார் இந்த திட்டத்தின் தலைவர் குருநாகேஷ்.

அதிகரிக்கும் இடைநிற்றல் விகிதம்

நீண்ட நாள் பள்ளிக்கு வராததன் விளைவாக, குழந்தைகள் ஐந்தாம் வகுப்பை அடையும் நேரத்தில் அவர்கள் பாடங்களை சமாளிக்க முடியாமல் வகுப்புகளை தவற விடுகிறார்கள். அடுத்து பள்ளிக்குச்

பெங்களூரு அருகே ரோட்டரி திட்டங்கள் நடத்தப்படும் ஒரு கிராமம்.

ஆதிவாசி கிராமம் ஒன்றில் குழந்தைகளுடன் ஸ்ரீநாத் குப்தா, குருநாகேஷ், அனில் டிசௌசா, காசிநாத் பிரபு.

செல் வதை இடையில் நிறுத்தி விடுகிறார்கள். இதனால் இடைநிற்றல் விகிதம் அதிகரிக்கிறது. இதன் தொடர்ச்சியாக குழந்தைகள் வயல் வெளிகளில் பெற்றோருடன் சேர்ந்து வேலை செய்யும் சூழ்நிலை ஏற்படுகிறது. இது குழந்தைத் தொழிலாளர் முறைக்கு வழிவகுக்கிறது.

இந்த திட்டத்தை தயாரித்து, அதை செயல்படுத்தும் போது குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் ஆலோசனை அமர்வுகள் தேவை என்பதை நாங்கள் உணர்ந்து கொண்டோம். இதன் மூலம் பள்ளிக்கு அவர்கள் தவறாமல் செல்வதன் முக்கியத்துவத்தை புரியவைக்க முடியும். இதனால் குழந்தைகள் பள்ளிப்படிப்பை பாதியில் விட்டுவிடாமல், உயர் நிலைப் பள்ளி வரை படிப்பை தொடரமுடியும் என்றார் பிரபு.

வறுமை, போதிய வேலை வாய்ப் பின்மை, சொற்ப வருமானம் மற்றும் அதனால் ஏற்படும் விரக்தி காரணமாக பெற்றோர் குடிப்பழக்கத்துக்கு அடிமையாகிறார்கள். இதனால், குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுகிறது.

இந்த திட்டத்திற்காக நிதி திரட்டிய பெங்களூர் சவுத் ரோட்டரி சங்கங்கள், கொரமங்களா ரோட்டரி சங்கம் மற்றும் பெங்களூர் பாம்வில்லி ரோட்டரி சங்கத்தினர், இந்த கிராம மக்களுக்கு கல்வி உபகரணங்கள், தார்ப்பாய்கள் தவிர வேறு தேவைகளும் இருக்கின்றன என்பதை அறிந்துகொண்டனர்.

நாங்கள் அந்த கிராமங்களுக்குச் சென்று பார்த்த போது, தெரு விளக்குகள் இல்லாததையும், தொடர் மழையால் சூரியசக்தி விளக்கு களால் பயனில்லை என்பதை யும், சூரிய ஒளியே இல்லை என்பதையும் தெரிந்துகொண்டோம். அங்கு அடிப்படை சுகாதாரமே இல்லை. வனப்பகுதி என்பதால் அங்குள்ள வீடுகளில் கழிப்பறைகள் இல்லை. இதனால் மக்கள் திறந்த வெளியிலேயே மலம் கழிக்கும் நிலை. அவர்களுக்கு தூய்மையான குடிநீர் கிடைக்காததால், மக்கள் அடிக்கடி தண்ணீர் தொடர்பான நோய்களுக்கு ஆளாகிறார்கள் என்றார் குருநாகேஷ்.

இந்த கிராமங்களுக்குச் சென்று உள்ளூர் பிரமுகர்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர் களிடம் உரையாடிய பிறகு மேலும் சில வசதிகளுடன் இத்திட்டத்தை விரிவுபடுத்த பிரபுவும் இதர ரோட்டேரியன்களும் திட்டமிட்டுள்ளனர். கிராம மக்களுக்கு சுகாதாரம், நல்ல குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட கூடுதல் வசதி களை செய்து தருவதன் மூலம் குழந்தைகள் பள்ளிப்படிப்பை தொடருவதை உறுதி செய்யமுடியும் என நினைக்கின்றனர். நிச்சயமாக இது ஒரு நாளில் அல்லது ஒரு வாரத்தில் முடியும் வேலை அல்ல. அரசு மற்றும் இதர கூட்டாளிகளுடன் சேர்ந்து நிறைவேற்ற வேண்டிய நீண்டகால திட்டம் என்பதை நாங்கள் உணர்ந்து கொண்டுள்ளோம். குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கி அவர்கள் மனதில் மாற்றத்தை ஏற்படுத்துவதே எங்கள் நோக்கமாகும் என்றார் அவர்.

அரசு ஆசிரம பள்ளிகள்

இதில் சாதகமான அம்சம் என்ன வெனில், கற்றலை மேம்படுத்தும்

நோக்கில் அரசு சில உறைவிடப் பள்ளிகளை ஆசிரம பள்ளி என்ற பெயரில் நிறுவியுள்ளது. இவற்றில் 200 முதல் 300 மாணவர்கள் தங்கி படித்து வருகின்றனர். பெற்றோர்கள் வேலை நிமித்தம் வேறு இடங்களுக்குச் செல்லும்போது குழந்தைகள் பள்ளிப்படிப்பை தவற விட்டுவிடக்கூடாது என்பதற்காக இதுபோன்ற உறைவிடப் பள்ளிகளை நிறுவ வேண்டும் என்று ரோட்டேரியன்கள் நினைக் கிறார்கள். அரசு ஆதரவுடன் இது போன்ற பள்ளிகளை நிறுவமுடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள். தற்போது ஒவ்வொரு தாலுகாவிலும் இதுபோன்று ஒரு பள்ளிதான் செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளிகளில் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குவது, மின் கற்றல் வசதி களை ஏற்படுத்துவது மற்றும் தேவையான வசதிகளை செய்து தர வேண்டும் என்பதில் ரோட்டேரியன்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

ஆசிரமப் பள்ளியில் தங்கிப் படிக்கும் மாணவர் களுக்கு சரியான உணவு கிடைப்பதால் அவர்கள் ஆரோக்கியமாக இருப்பதை எங்களால் காணமுடிகிறது. அவர்கள் நான்கு மாதங்கள் கல்விகற்றுவிட்டு ஒரு வார விடுமுறையில் தங்கள் வீட்டுக்குச் செல்கிறார்கள் என்கிறார் பிரபு.

இத்திட்டம் தொடர்பான நிவாரண உதவிப்பணிகளில் A K சுகுணன், ரோஷன் ஜேக்கப், சௌம்யா நாயர், ஸ்ரீநாத் குப்தா, S ராமகிருஷ்ணா, அனில் டிஸௌஸா மற்றும் பாண்டு குமார் ஆகிய ரோட்டேரியன்களும் பங்குகொண்டிருந்தனர். இந்த பழங்குடியின மக்களுக்கு இன்னும் அதிகமான அளவில் உதவும் சாத்தியக் கூறுகள் ஆராயப்படும் என்று அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர். இந்த நிவாரண உதவி எங்களுக்கு முழு திருப்தியை கொடுத்துள்ளது. மேலும் செய்ய வேண்டும் என்கிற எண்ணத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளின் வாழ்க்கை நிலை என்ன என்பதை நாங்கள் தெரிந்துகொண்டோம். அடுத்து அவர்களுக்கு நல்ல வசிப் பிடம், சுகாதாரம், குடிநீர் வசதி செய்து தரும் வாய்ப்புகளையும் எங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

கிராம மக்களுடன் சௌமியா நாயர், A K சுகுணன் மற்றும் ரோஷன் ஜேகப்.

THINK EXCELLENCE. LIVE EXCELLENCE.

Shri Vaishnav Vidyapeeth Vishwavidyalaya

City Office: Shri Vaishnav Vidya Parisar, 177 Jawahar Marg, South Rajmohalla, **INDORE**-2 **Campus:** Indore-Ujjain State Highway, **INDORE**-453111. **Mob.:** 9303700163, 9303700164, 9303700165, 930700166

VALUE BASED. ACTIVITY DRIVEN EDUCATION.

REGISTER NOW!

Scan me

ONLINE REGISTRATION OPEN | Register@www.svvv.edu.in

Scholarships for the Meritorious Students • Relief for the Children of COVID-19 Warriors

Excellent Track Record of Placements.

Approved under Section 2(f) of the UGC Act, 1956

ADVT.

↗ MoU with Hanyang University, South Korea & St. Cloud State University, USA for Student/Faculty Exchange and Joint Research. ↗ MoU with TCS for Technical Collaboration. ↗ MoU with NRDC (Ministry of Science & Technology) for transfer of technology to industry. ↗ MoU with NCSSS (National Cyber Safety and Security Standards) for Technical Collaboration. ↗ MoU with Tata Power Ltd. for Technical Collaboration. ↗ Agreement with CISCO Network Academy. Agreement with Bosch India. ↗ MoU with Microsoft Corporation (India) Pvt. Ltd. for Technical Collaboration. ↗ MoU with IBM for Technical Collaboration. ↗ MoU with Red Hat for Technical Collaboration. ↗ Apple Authorised Training Centre Agreement for Education. ↗ MoU with Mitsubishi Electric India. ↗ MoU with ICT Academy ↗ MoU with Mahatma Gandhi National Council of Rural Education (MGNCRE) Government of India, Ministry of Education. ↗ MoU with Impetus Technology India Pvt. Ltd. for Technical Collaboration. MoU with Manmade Textiles Research Association (MANTRA) for Technical Collaboration ↗ Fees Structure is approved by the Government of Madhya Pradesh. ↗ Ranked jointly by Innovation cell of the Ministry of Education (Government of India) and AICTE in Top 50 Most Preferred Institutions in 2021.

ADMISSIONS 2022-23

ENGINEERING AND TECHNOLOGY

B. Tech. (4 years)
Agricultural Engineering/Automobile Engineering/ AE (Electric Vehicle Engineering)/Civil Engineering/ Electronics and Computer Science Engineering/ Electrical Engineering (Solar Energy-Tata Power)/ Electrical & Electronics Engineering/Electrical Engineering/Electronics and Communication Engineering/EC (Internet of Things) / ME (Artificial Intelligence & Machine Learning)/ CE (Artificial Intelligence & Machine Learning)/ ECE (Artificial Intelligence & IoT)/ Electronics and Instrumentation Engineering/ Instrumentation & Control Engineering/ Mechanical Engineering/ Mechanical Engineering (Plant Engineering-Tata Power)/Mechatronics /Railway Engineering/ Robotics and Automation

M. Tech. (2 years)
Civil (Geotechnical Engineering) /Civil (Structural Engineering)/Civil (Transportation Engineering) / Civil (Water Resources Engineering) / Digital Communication/Digital Instrumentation/ Embedded System & VLSI design/Mechanical (Thermal and Design Engineering)/Power Electronics/Power System /Renewable Energy/ Virtual Instrumentation/ Construction Technology & Management/ Automation & Robotics

Diploma Programs (3 years)
Automobile Engineering /Civil Engineering/ Electrical Engineering /Electronics and Instrumentation Engineering/Electronics Engineering/Mechanical Engineering/ Mechatronics Engineering/ Solar Energy

B. Tech. (4 years)
Computer & Communication Engineering/ Computer Science & Business Systems- (TCS)/ Computer Science Engineering/CSE (Mobile Applications)-Apple (AATCE)/ CSE (Artificial Intelligence - IBM)/ CSE (Big Data Analytics-IBM)/ CSE (Big Data and Cloud Engineering- Impetus)/ CSE (Cloud and Mobile Computing - IBM)/ CSE (Data Science - IBM)/ CSE (Enterprise System-red hat) /CSE (FullStack Development & Blockchain- IBM)/CSE (Information and Cyber Security - NCSSS)/ CSE (Artificial Intelligence and Machine Learning-Microsoft)/ Information Technology/IT (Data Science-IBM)/IT (FullStack Development & Blockchain-IBM)/CSE (Internet of Things-IBM)

M. Tech. (2 years)
Computer Science Engineering /Computer Science Engineering (Big Data Analytics)

Dual Degree Programs

B. Tech. + M. Tech. (4+2 years)
Computer Science Engineering/Computer Science Engineering (Big Data Analytics)

B. Tech. + MBA (4+2 years)
Computer Science Engineering/ Information Technology

Diploma Program
One-Year Post Graduate Diploma in Computer Applications (PGDCA)
Six-Months Diploma in Computer Hardware and Networking (DCHN)

B. Tech. (4 years)
Garment & Fashion Technology/ Textile Engineering

M. Tech. (2 years) Textile Engineering

B. Sc. (3 years) Fashion Design

Diploma Program (3 years)
Textile Engineering

FORENSIC SCIENCE

B.Sc. (Hons.) (4 years)
Digital & Cyber Forensics

B.Sc. (3 years)
Forensic Science/ Forensic Psychology

M.Sc. (2 years) Forensic Science/ Forensic Psychology/ Cyber Forensics

M.A./ M.Sc. (2 years) Criminology

Dual Degree Program

B.Sc.+ M.Sc. (3+2 years)
Forensic Science/ Forensic Psychology

ARCHITECTURE

B.Arch. (5 years)

B.Des. (4 years) Interior Design/ Product Design/Graphics & Animation

M.Des. (2 years) Interior Design

B.Plan. (4 years)

M.Plan. (2 years) (Urban Planning)

Dual Degree Program

B.Des.+ M.Des. (4+2 years)
Interior Design/ Product Design/ Graphics & Animation

MANAGEMENT

MBA (2 years)
Engineering Management/ Family Business & Entrepreneurship/ International Business/ Media Management/Agri-business/Business Analytics/ Advertising and Public Relations/Tourism/ Rural Management-MGNCRE/ Hospital & Healthcare Management/ Marketing/ Human Resource/ Finance

BBA (Hons.) (4 years)

BBA (3 years)

BBA (Fintech) (3 years)

BBA (Rural) (3 years)

Dual Degree Programs

BBA + MBA (3+2 years)
Marketing/HR/Finance/Operations/ Fintech/Rural Management-MGNCRE

MBA (2 years) (Industrial Management)
Open to Engineering Graduates only.

JOURNALISM AND MASS COMMUNICATION

M.A. (2 years)
Journalism and Mass Communication/ Hindi Journalism

Dual Degree Program

B.A. + M.A. (3+2 years)
Journalism and Mass Communication

FINE ARTS

BFA (4 years) Painting/ Animation

MFA (2 years) Painting/ Animation

AGRICULTURE

B.Sc. (Hons.) (4 years) Agriculture

M.Sc. (2 years)
Agriculture
Genetics and Plant Breeding / Entomology /Plant Pathology/ Soil Science & Agricultural Chemistry/ Agronomy/ Horticulture (Fruit Science)/ Horticulture (Vegetable Science)

SCIENCE

B.Sc. (3 years)
Physics/ Chemistry/ Maths/ Life Science/ Computer Science/ Biotechnology/ Electronics/ Instrumentation/ Statistics/ Economics

B.Sc. (Hons.) (4 years)
Physics/ Chemistry/ Maths

M.Sc. (2 years)
Physics/ Chemistry/ Maths/ Environmental Science/ Analytical Chemistry/Biotechnology

Dual Degree Program

B.Sc. + M.Sc. (3+2 years)
Physics/ Chemistry/ Maths/ Statistics

COMPUTER APPLICATIONS

BCA (3 years) Big Data Analytics-IBM

M.Sc. (2 years) Computer Science

MCA (2 years) Banking Technology

MCA (2 years)

Dual Degree Programs

BCA + MCA (3+2 years)

BCA + MCA (3+2 years)
Banking Technology

SOCIAL SCIENCES, HUMANITIES AND ARTS

B.A. (3 years)

B.A. (Hons.) (4 years)
Psychology/ Economics/ English Literature/ Sociology/ Political Science/ Anthropology/ History

M.A./ M.Sc. (2 years)
Psychology/ Applied Psychology/ Clinical Psychology/ Counselling Psychology/ English Literature/ Sociology/ Economics/ Education/ Anthropology/ History/Political Science

Dual Degree Program

B.Lib & I.Sc. + M.Lib & I.Sc. (1+1 year)

One- Year Advanced Diploma in French

COMMERCE

B.Com (Hons.) (4 years)

B.Com (3 years)
Banking & Finance/ Entrepreneurship/ Tax Procedure/ Computer Applications/ Plain

M.Com (2 years)

Dual Degree Programs

B.Com+ M.Com (3+2 years)

B.Com + MBA (3+2 years)

LAW

LL.B (Hons.) (3 years)

LL.M (2 years)
Business Law/ Criminal Law

LL.M (1 year)
(Business Law, Criminal Law, Human Rights)

Integrated Programs (5 years)

B.A.LL.B (Hons.)

B.B.A.LL.B (Hons.)

B.Com. LL.B (Hons.)

HOME SCIENCE

M.Sc. (2 years) Food & Nutrition

Dual Degree Program

B.Sc.+ M.Sc. (3+2 years) Food & Nutrition

PARAMEDICAL SCIENCES*

Bachelor Medical Lab. Technician (3 years)

DIPLOMA PROGRAMS (2 years)
X ray Radiographer Technician/ Medical Lab. Technician/ Cath. Lab. Technician/ Dialysis Technician/ Optrometric Refraction/ Optometrist Contact Lens/ Anesthesia Technician/ Yoga/ Naturopathy

FACULTY OF DOCTORAL STUDIES & RESEARCH (3 years)

All Seats of Ph. D program have been filled up.

Teaching Assistanceship (TA) of ₹12,400 (Rupees Twelve Thousand Four Hundred Only) for all GATE Qualified Candidates admitted in 02 years full time M.Tech Program, subject to MHRD/UGC/AICTE Guidelines

Note : (1) Lateral Entry seats are available in B.Tech. (2) SVET (Shri Vaishnav Entrance Test) will be held on September 11, 18, 2022. The seats in various programs will be filled on the basis of prescribed Tests/SVET-2022.

***Subject to approval of concerned Regulatory Authority**

Toll Free: 1800 233 9111
Helpline: 1800 102 9191

For details, visit: www.svvv.edu.in admission@svvv.edu.in

Imagine
Impact tour

களைகளுக்கு தண்ணீர் விடாதீர்கள்: ஜோன்ஸ்

ரஷீதா பகத்

RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மற்றும் அவர் கணவர் DGN நிக் கிரயாசிச் அவர்களுடன் RI இயக்குனர் A S வெங்கடேஷ் மற்றும் அவர் மனைவி வினிதா.

புனேயில் நடைபெற்ற உள்வரும் மாவட்டத் தலைவர்களுக்கான இலக்கு நிர்ணயித்தல் லட்சியா கருத்தரங்கில் ரோட்டரி தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் வழங்கிய விலைமதிப்பற்ற அறிவுரை இதுதான்: களை களுக்கு தண்ணீர் விடாதீர்கள், பூக்களை வளர்ப்பதில் கவனம் செலுத்துங்கள்.

RID 3262, DGE ஜெய்ஸ்ரீ மொஹந்தியின் கேள்விக்கு பதிலளித்த ஜோன்ஸ், தொடர்ந்து குறை கூறுபவர்களுடன் நேரத்தை செலவழித்தால் உங்களால் ரோட்டரியை மலரச் செய்ய முடியாது. அவர் மேலும் கூறுகையில், எனது இன்பாக்ஸில் (செய்திப் பெட்டியில்) வரும் எதிர் மறையான விஷயங்களை நான் பொருட்படுத்துவதில்லை என்றார்.

2022–23ம் ஆண்டில் TRF நிதிப் பங்களிப்புக்கான இந்தியாவின் இலக்கு $36.84 மில்லியன் டாலர் என்று குறிப்பிட்ட ஜோன்ஸ், உங்கள் மண்டலங்களில் நீங்கள் நிர்ணயித்துள்ள இலக்கு மிகப்பெரியது என்பது எனக்குத் தெரியும். ஆனால், உங்களால் அது முடியும் என்பதும் எனக்குத் தெரியும். நமது ரோட்டரி அறக்கட்டளை என்னும் என்ஜின், நம்பமுடியாத அளவுக்கு திட்டங்களை செயல்படுத்த அனுமதிக்கிறது. பெரிய திட்டங்கள் மூலம் ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றி வருகிறோம். அதனால் தான் நிதி திரட்டு கிறோம் என்றார்.

தமது தலைமைப் பதவி காலத்தில் உலகெங்கிலும் தமது சுற்றுப் பயணங்களை கட்டமைத்துள்ளதை ஜோன்ஸ் விளக்கினார். உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சென்று அங்குள்ள மக்களுடன் தொடர்பு கொள்ள இருப்பதாகவும் அவர் கூறினார். என்னைப் பற்றி தெரிந்தவர்களுக்கு நான் ஒரு நல்ல கதையை விரும்புபவள் என்று தெரியும். மேலும் நமது கதையைச் சொல்லுவதன் மூலம் நமது அமைப்பின் வளர்ச்சியை நாம் உறுதிப்படுத்த முடியும். மேலும் நிலைத்தன்மையையும் ஏற்படுத்த முடியும். நாம் செய்யும் நல்ல பணிகளை, திட்டங்களை, சேவைகளை உலகிற்கு தெரிவித்தால்தான் மற்றவர்கள் நமது அமைப்பில் சேர முன்வருவார்கள் என்றார்.

இதைச் செய்யவே, அவர், Imagine Impact சுற்றுப் பயணத்தை உருவாக்கி யுள்ளார். இந்த பயிற்சி கருத் தரங்கில் கடந்த சில நாள்களாக நீங்கள் கவனம் செலுத்திய தனிப்பட்ட பொறுப்புணர்வு மற்றும் பங்கு பணிகளை இது தொட்டுச் செல்கிறது. நீங்கள் தேசிய, பிராந்திய மற்றும் உள்ளூர் அளவில் செய்வதைத்தான் நான் சர்வதேச அளவில் செய்து வருகிறேன் என்றும் ஜோன்ஸ் குறிப்பிட்டார்.

ஏழு வெவ்வேறு பகுதிகளில் கவனம் செலுத்தி மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திவரும் ரோட்டரியின் பணிகளையே நான் விவரிக்கப் போகிறேன். அதுதான் எனது நோக்கம். எட்டாவது போலியோவாகும். 2023க்குள் தீவிர போலியோ வைரஸ் பரவலை தடுத்து நிறுத்திவிட முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். 2026க்குள் போலியோ இல்லாத உலகை உருவாக்குவதில் நாம் நிச்சயம் வெற்றிபெறுவோம் என்று நம்புகிறோம். அப்போது நாம் எழுந்து நின்று மற்றவர்களைவிட சிறப்பாகக் கொண்டாடுவோம்.

சமூக ஊடகங்கள் மற்றும் இதர ஊடகங்கள் மூலம் நமது கதைகளை தேசிய அளவில் எடுத்துச் சொல்ல வேண்டும். அப்போதுதான் நம்மை பற்றித் தெரியாதவர்களுக்கும் நாம் செய்யும் சேவைகள் முழுமையாகத் தெரியவரும். எனவே Imagine Impact சுற்றுப் பயணத்தில் ஊடகங்கள் மற்றும் பொது ஜனத் தொடர்பு அம்சங்களும் இடம் பெற்றிருக்கும். அவர்கள் TRF மற்றும் ரோட்டேரியன்கள் அடிமட்ட அளவிலிருந்து செய்து வரும் பெரிய அளவிலான திட்டங்கள் ஏற்படுத்தி வரும் தாக்கங்கள் குறித்தும் பேசுவார்கள்.

நாம் நமது செயல் பாடுகளை வெளிப்படுத்து வதன் மூலம் உறுப்பினர்கள் சேர்க்கையை அதிகரிக்க முடியும். இந்தியாவுக்கு பிறகு, அடுத்து பாகிஸ்தான் செல்கிறோம். அங்கு பெண் சுகாதார ஊழியர்களிடம் போலியோ கதையைக் கூறுவோம். அவர்கள் வீடு வீடாகச் சென்று தாய்மார்களிடம் போலியோ நோய் ஒழிப்பு மற்றும் போலியோ தடுப்பூசி குறித்தும் எடுத்துக்கூறி அவர்களின் நம்பிக்கையை பெறுவார்கள். இவர்களின் பணி எளிதானதல்ல என்றார்.

உலகளாவிய போலியோ ஒழிப்பு முயற்சியில் ரோட்டரியின் கூட்டாளர் களை, குறிப்பாக உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர்களையும் சந்திக்க இருப்பதாக ஜோன்ஸ் கூறினார். கூட்டாண்மையின் பலம் என்ன என்பது எங்களுக்குத் தெரியும். உலக சுகாதார நிறுவனம், யுனிசெப், கேட்ஸ் அறக்கட்டளை ஆகியவை மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியவை. நாம் மட்டும் ஒரு காரியத்தை தனியாகச் செய்துவிட முடியாது. போலியோ ஒழிப்பில் ரோட்டரி மற்றும் கூட்டாளர்களின் பங்கு பணிகள் பற்றி ஒரு ஆவணப்படம் எடுத்து அதை சமூக வலைத்தளத்தில் பதிவிட உள்ளோம்.

அடுத்த சுற்றுப்பயணம் ஜாம்பியாவுக்கு. அங்கு முதல்

உலகில் **1,500** *அமைதிக்கான நண்பர்களை ரோட்டரி உருவாக்கி யுள்ளது.*

TRF-யிற்கான இந்தியாவின் 2022–23 ஆண்டிற்கான இலக்கு **$36.84** *மில்லியன்.*

கட்டமாக மலேரியாவை ஒழிப்பதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ளப் போகிறோம். இதற்காக ரோட்டரி 2 மில்லியன் டாலர், கேட்ஸ் அறக்கட்டளை 2 மில்லியன் டாலர் மற்றும் வேர்ல்டு விஷன் 2 மில்லியன் டாலர் செலவிட உள்ளது.

எங்களது அடுத்த நிறுத்தம் உகாண்டாவில். அங்குதான் ஆப்பிரிக்காவின் முதல் ரோட்டரி அமைதி மையம் உருவாகி வருகிறது. அமைதிக்கான நண்பர்களின் (Peace fellows) பயணத்தை பற்றி தெரிந்துகொள்ளவும், அவர்களின் கதைகளைச் சொல்ல உதவவும் நாங்கள் அங்கு செல்கிறோம். எங்களிடம் 1,500க்கும் மேலான அமைதி நண்பர்கள் உள்ளனர். அவர்களிடமும் நமது DNA தான் ஓடிக்கொண்டிருக்கிறது. அவர்கள் அரசு அலுவலகங்கள் மற்றும் பிற இடங்களுக்குச் செல்வார்கள். இந்த சுற்றுப் பயணத்தின் முக்கிய அம்சமாக அமைதிக்கான நண்பர் ஒருவர், அகதிகள் முகாமில் ரோட்டரி சங்கத்தை ஏற்படுத்தியிருப்பது தான். அவர், தென் பஸிபிக் தீவுகளுக்கும் பயணம் சென்று தாய்-சேய் நலம் மற்றும் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவது குறித்து பேசுவார். அங்கு மிகப்பெரிய தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது. ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து நாடுகளைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் இம்முகாமில் 1,00,000 குழந்தை களுக்கு பல்வேறு நோய்த் தடுப் பூசிகளை செலுத்த உள்ளனர். ரோட்டரியின் 100வது ஆண்டை கொண்டாடுவதற்கு இது மிகப்பெரிய சிந்தனையாக இருக்கும்.

*ஆஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்து ரோட்டரியினர் தென் பசிஃபிக் தீவுகளில் **1** லட்ச குழந்தைகளுக்கு தடுப்பூசி அளிக்க உள்ளனர்.*

பின்னர் கௌதமாலாவுக்குச் சென்று ஆடவர் மற்றும் மகளிரின் அடிப்படை கல்வியில் கவனம் செலுத்த உள்ளோம். இதற்கான திட்டம் 600 ரோட்டரி சங்கங்கள் மூலம் செயல் படுத்தப்படும். கல்வியின் முக்கியத்துவம் குறித்து சிறுவர், சிறுமியரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். அமெரிக்காவுக்கு பலரும் ஆபத்தான வழியில் இடம் பெயர்வதால் இத்திட்டம் அவர்களுக்கு மிகவும் அவசியமானது. கல்வி கற்பதன் மூலம் இளைஞர்கள் தங்கள் நாட்டிலேயே தங்கியிருக்கச் செய்ய முடியும். பெண்களை பொருத்த வரையில் அவர்கள் இளம் வயதிலேயே திருமணமாகி குழந்தை பெற்றுக்கொள்வதை தடுக்க முடியும். மேலும் கல்வி அறிவு பெறுவதன் மூலம் இருபாலரும் வேலைவாய்ப்பு பெறவும், தொழில் முனைவோராகி தொழில் தொடங்கவும் முடியும் என்றார்.

ஹைட்டி நாட்டுக்கும் செல்ல ஜோன்ஸ் திட்ட மிட்டுள்ளார். அங்குள்ள ரோட்டரி குழுவினர் ஒவ்வொரு ஆண், பெண் மற்றும் குழந்தைகளுக்கு குடிநீர் வழங்க திட்டமிட்டுள்ளனர். இத்திட்டத்தைச் செயல்படுத்த பத்தாண்டு காலங்கள் பிடிக்கலாம் மற்றும் பில்லியன் கணக்கில் டாலர்கள் செலவாகலாம். ஆனால், இதற்கான முன்னோடித்

திட்டம் தயாராக உள்ளது. நாங்கள் இந்த திட்டத்தை பார்வையிட உள்ளோம். இந்த திட்டத்தை நிச்சய மாகச் செயல்படுத்த முடியும் என்று நம்புகிறோம். இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப் பட்டால், பிற இடங்களிலும் இதை செயல்படுத்த முடியும். பெரிய அளவிலான, நிலைத்தன்மையுடைய திட்டங்களை செயல்படுத்துவதன் நோக்கமே அவற்றை உலகின் வேறு பகுதிகளிலும் செயல்படுத்தும் சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்று ஆராய்வதற்குத்தான் என்று ஜோன்ஸ் மேலும் கூறினார்.

சுற்றுப்பயணத்தின் கடைசி பகுதியாக அவர் மெக்ஸிகோ செல்கிறார். அங்கு சுற்றுச்சூழலை மேம்படுத்தும் வகையில் மாடித் தோட்டங்கள் அமைத்து தேனீக்கள் மற்றும் பட்டாம்பூச்சிகளை வளர்த்து இனப்பெருக்கம் செய்வதில் கவனம் செலுத்துவது தான். நாம் செயல், நோக்கம் மற்றும் செல்வாக்கு உடையவர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு வித்தியாசமான முறையில் அறையின் கதவைத் திறந்து சேவை செய்யலாம், உறுப் பினர்களை கொண்டு வரலாம், நிதி திரட்டலாம். ரோட்ராக்டர்களுக்கு தாம் முக்கியத்துவம் கொடுத்து வருவதை அவர் விளக்கினார். சர்வதேச குழு, மாநாட்டுக்குழு உள்ளிட்ட முக்கிய குழுக்களில் ரோட்ராக்டர்கள் இடம்பெற வேண்டும் என்பதிலும், அவர்கள் சிறந்த தலைமைப் பண்புடன் விளங்க வேண்டும் என்பதில் தாம் சிறப்பு கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். இன்னும் சொல்லப் போனால் RI தலைவரின் பிரதிநிதிகளாக மாவட்ட பிரதிநிதிகளாக அவர்கள் பங்கேற்க வேண்டும் என்பதில் ஆர்வமாக இருப் பதாகவும் ஜோன்ஸ் கூறினார். மற்றவர்களைப் போலவே அவர்களுக்கும் எதையும் தெரிந்து கொள்ளும் ஆர்வமும், மக்களை ஈர்க்கும் திறனும் உள்ளது என்பதை நாங்கள் அறிவோம் என்றும் ஜோன்ஸ் குறிப்பிட்டார்.

ரோட்ராக்டர்களுக்கான வயது வரம்பு நீக்கப்பட்டு விட்டது. ரோட்ராக்டிலிருந்து ரோட்டரிக்கு மாறுவது குறித்து அவர்களின் கவலையையும் அவர் புரிந்து கொண்டபோது, ரோட்ராக்டர்களுக்கான வருடாந்திர தொகையை அறிமுகப்படுத்திய பிறகு அவர்கள் தங்கியிருப்பார்களா அல்லது வெளியேறுவார்களா என்பதை அறிந்துகொள்வது சுவாரஸ்யமாக இருக்கும். ரோட்ராக்டர் என்ற நிலையிலிருந்து ரோட்டரிக்கு மாறுபவர்கள் 5 சதவீதம் பேர்தான். அது ஏன் இவ்வளவு குறைவாக இருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள இயலவில்லை. ஆனால், அந்த சமயத்தில் இளைஞர்கள் குடும்ப வாழ்க்கை, தொழிலை கட்டியெழுப்புதல் போன்ற பிரச்னைகளை எதிர்கொள்ள நேரிடலாம் என்றார்.

ரோட்டரி குடும்பத்துக்குள் ரோட்ராக்டர்களை தக்கவைத்துக் கொள்வதே முக்கிய நோக்கமாக இருந்தது. தற்செயலாக ஒரு ரோட்ராக் சங்கம், ரோட்டரி சங்கமாக உருவானால் அது ஒரு வெற்றி இல்லையா? எப்படியிருந்தாலும் ஒரு நாள் அவர்கள் ரோட்டேரியனாக வர இருப்பவர்கள்தானே! இதனிடையே அவர்கள் ரோட்ராக்டராகவே தொடர் தாலும், அவர்களை ரோட்டரியில் வைத்து, அவர்களுக்கு அர்த்தமுள்ள அனுபவத்தை கொடுக்க நமக்கு வாய்ப்பு கிடைக்கிறது. அது எப்படி இருக்கும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளில் 1.2 மில்லியன் பேர் இணைந்துள்ளனர் - வெளியேறியுள்ளனர்

ரோட்டரி தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், ரோட்டரி உலகில், பல ஆப்பிரிக்க நாடுகளுடன் சேர்ந்து இந்திய பிராந்தியமும் வேகமாக வளர்ந்து வருவதாகக்கூறி அங்கீகரித்து பாராட்டும் தெரிவித்தார். அதே நேரத்தில் உறுப்பினர்கள் விலகும் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த 10 ஆண்டுகளில் 1.2 மில்லியன் உறுப்பினர்கள் புதிதாக ரோட்டரியில் சேர்ந்துள்ளனர். அதே நேரத்தில் 1.2 மில்லியன் பேர் ரோட்டரியிலிருந்து விலகியுள்ளனர் என்பதை ரோட்டேரியன்களாகிய நாம் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது மக்கள் ரோட்டரியில் சேர விரும்புகிறார்கள். ஆனால், பிரச்னை என்னவென்றால் ரோட்டரியில் சேருபவர்கள் நீண்ட காலம் தங்குவதில்லை. இதற்கு நமது நடவடிக்கை என்ன? நாம் நமது உறுப்பினர்களிடம் இன்னும் சிறப்பாக நடந்துகொள்ள வேண்டும். நல்ல முறையில் அவர்களை அணுக வேண்டும். அவர்களை நன்றாக கவனித்துக் கொள்ள வேண்டும். நமது அமைப்பில் ஒருவர் வந்து சேருகிறார் என்றால், அவரிடம் என்ன வேண்டும் என்று கேட்டு அதை நிறைவேற்ற வேண்டும். அது சேவையாகவோ அல்லது நட்புறவாகவோ, நிகழ்வுகளாகவோ இருக்கலாம். அப்படிச் செய்தால்தான் நாம் வளர முடியும். நமக்கு பொறுப்புள்ள உறுப்பினர்கள் தேவையென்றால், அவர்களிடம் பொறுப்புகளை கொடுக்க வேண்டும். அவர்களை எப்போதும் முழு ஈடுபாட்டில் வைத்திருப்பது முக்கியமானது என்றார் ஜோன்ஸ்.

பெண்கள் அதிகாரம் பெறுவது உறுதி

முன்னாள் RI தலைவர் சேகர் மேத்தாவின் பெண்கள் மேம்பாடு திட்டம் தொடரும் என்று ஜெனிஃபர் மீண்டும் உறுதிப்படுத்தினார். மேலும் பாலின சமத்துவம் தொடர்பாக உலகின் ஒவ்வொரு பகுதியிலும் பல்வேறு வகையான சவால்கள் இருக்கின்றன. ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். மேம்படுத்தப்பட்ட பெண்கள் நிச்சயம் அதிகாரம் பெற்ற பெண்களாவது உறுதி என்று அவர் குறிப்பிட்டார்.

ரோட்டரியில் அதிக அளவில் பெண்களை ஈர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றி ஜோன்ஸ்

இடதிலிருந்து: RID வெங்கடேஷ், PDG ISAK நாசர், RI தலைவர் ஜோன்ஸ், RID மகேஷ் கோட்பாகி மற்றும் லட்சியா தலைவர் PDG ஆஷிஷ் அஜ்மேரா.

கூறுகையில், பெரும்பாலான ரோட்டேரியன்கள் தொழில் வல்லுநர்கள். உங்கள் சொந்த நிறுவனத்தில் நீங்கள் குறைவான சந்தைப்பங்கை கொண்டிருந்தால் என்ன செய்வீர்கள்? புதிய உத்திகளை வகுத்துச் செயல்படுவீர்கள் அல்லவா?. நம்முடைய சந்தைப் பங்கும் குறைவாகவே உள்ளது. உலக மக்கள் தொகையில் 50 சதவீதம் பெண்களாக இருந்த போதிலும், அவர்களில் பலர் தரமான தொழில்முனைவோராக இருந்தபோதிலும், நாம் அவர்களை சரிவர பயன்படுத்திக் கொள்ளவில்லை. எனவே அவர்களை எவ்வாறு ஈர்ப்பது என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

RI நிர்வாகக் குழு, 2023க்குள் ரோட்டரியின் தலைமைத்துவ பொறுப்பில் 30 சதவீத பெண்கள் இடம் பெற வேண்டும் என்று தெள்ளத் தெளிவாக இலக்கு நிர்ணயித்துள்ளது. அதை அடைவதற்கு நாம் ஓர் குறிக்கோளுடன் செயல்பட வேண்டும். நிர்வாகக் குழுவில் எத்தனை பெண் இயக்குநர்கள், அறங்காவலர்கள் இருக்கிறார்கள். மாவட்ட ஆளுநர்களாக நாம் எத்தனைப் பெண்களைத் தேர்ந் தெடுத்திருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். இந்த எண்ணிக்கையை நாம் தொடர்ந்து கண்காணித்து வர வேண்டும். இந்த ஆண்டு உங்கள் பிராந்தியத்தில் ஒரு பெண் ஆளுநர் இருக்கிறார். ஆனால், அடுத்த ஆண்டு 7 பேர் இருக்கப் போகிறார்கள். இது உங்களுக்கு ஆச்சரியம் அளிக்க வில்லையா?

DGEகளுடன் உரையாற்றிய RI இயக்குநர் A S வெங்கடேஷ், ஒவ்வொருவரும் தங்களுக்கான இலக்குகளை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். ஒரு ஆண்டு கழித்து நீங்கள் எங்கே இருக்க வேண்டும் என்பதை நீங்களே பார்த்து முடிவு செய்யுங்கள்.

RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி, அரங்கத்தில் கூடியிருந்த தலைவர்களுடன் பேசுகையில், ரோட்டரியில் நமது பிராந்தியம் அதிவேகமாக வளர்ந்து வருகிறது. நம்மிடம் 1,50,000-த்துக்கும் மேலான உறுப்பினர்கள் உள்ளனர். நீங்கள் எல்லோரும் செயல்வீரர்கள் என்பதையே இது காட்டுகிறது என்றார்.

DGE-க்களின் TRF இலக்கு 36.84 மில்லியன் டாலர்

RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் தலைமையில் புனேயில் நடைபெற்ற லட்சியா இலக்கு நிர்ணயிக்கும் கருத்தரங்கின் நிறைவு நாளில் பேசிய TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா, DGக்கள் 2022–2023ம் ஆண்டுக்கு TRF. மொத்த பங்களிப்புத் தொகையாக 36.84 மில்லியன் டாலரை இலக்காக நிர்ணயித்துள்ளதாக அறிவித்தார்.

இதில் ஆண்டு நிதியாக 10.88 மில்லியன் டாலர், போலியோ நிதியாக 2.02 மில்லியன் டாலர் மற்றும் எண்டௌவ்மெண்ட் நிதியாக 4.87 மில்லியன் டாலரும் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட 36.84 மில்லியன் டாலர் இலக்கை நாம் எட்டி விட்டால், இந்தியாவும் நேபாளமும் சேர்ந்து எழுப்பிய அதிகபட்ச தொகை இதுவாகத்தான் இருக்கும்.■

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

ADVT.

IMAGINE ROTARY
ஆகஸ்ட் 19, 2022
உலகப் புகைப்பட மற்றும் மனிதநேய
நாளை முன்னிட்டு
முதல் பரிசு
₹1
லட்சம்
ரோட்டரி
புகைப்பட
போட்டி
நீங்கள் எடுக்கும் புகைப்படம் மனிதநேய சேவையின் எண்ணங்களையும், உணர்வுகளையும்
பிரதிபலிக்க வேண்டும் அல்லது ஒரு கதையை சித்தரிக்க வேண்டும்
உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 2 புகைப்படங்களை (JPEG - MIN 2 MB) அக்டோபர் 23, 2022 அன்று அல்லது
அதற்கு முன்னதாக கீழே கொடுக்கப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.
மேலும் விவரங்களுக்கு
@ photography.rotary@gmail.com
நுழைவுக் கட்டணம் ரூ 500. மனிதநேய சேவைக்கான உங்களின் பங்களிப்பு.
தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த முதல் 3 போட்டியாளர்களுக்கு, ரோட்டரி மாவட்டம்,
மண்டலம் மற்றும் அகில இந்திய அளவில் பரிசுத்தொகை மற்றும் விருது வழங்கப்படும்.
ஜெனிபர் E. ஜோன்ஸ்
RI PRESIDENT
A.S. வெங்கடேஷ்
RI DIRECTOR
Dr. மகேஷ் கோட்பாகி
RI DIRECTOR
MD. B. இளங்குமரன்
DISTRICT GOVERNOR
RID 3203
PDG. Dr. E.K. சகாதேவன்
CHAIRMAN
Rtn. M.D. ஈஸ்வரன்
PRESIDENT
RC ERODE CENTRAL
ORGANIZED BY
ROTARY FREEDOM INDIA TRUST, ROTARY CLUB OF ERODE CENTRAL - RID 3203.
CONTACT: +91 9994 477 725, +91 9944 115 000

Imagine Impact tour

தமிழக திட்டங்களைக் கண்டு வியந்த ரோட்டரி தலைவர் ஜோன்ஸ்

ரஷீதா பகத்

நாங்கள் சென்னையில் சுமார் 90 நிமிடங்களே இருந்தோம். இன்று இரவு நம்பமுடியாத பல்வேறு திட்டங்கள் தொடங்கி வைக்கப்படுவதை காண்கிறேன். நீங்கள் செயல்படுத்தும் ஒவ்வொரு திட்டமும் நீங்கள் செலவிடும் ஒவ்வொரு டாலரும் உலகில் அமைதியையும் கருத் தொற்றுமையையும் ஏற்படுத்தும் என்பது எனக்குத் தெரியும். உங்கள் சமூகங்களில் உள்ள தேவைகளையும் பிரச்னைகளையும் நீங்கள் புத்தி சாலித்தனமாக கையாளுகிறீர்கள்.

இத்தகைய பாராட்டுகளுடன், RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், சென்னைக்கு வந்திறங்கிய சில மணி நேரங்களில் ரோட்டரி மாவட்டங்கள் 2981, 2982, 3000, 3231, மற்றும் 3232 ஆகியவற்றின் மிகப்பெரிய, திட்டங்களைத் தொடங்கிவைத்தார்.

தென்னிந்தியாவில் பழமை வாய்ந்த மெட்ராஸ் ரோட்டரி சங்கம் அன்று மாலை பெண்கள் மற்றும் குழந்தைகளின் உடல்நலனில் கவனம் செலுத்துவது உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தியது. சுகாதாரத் திட்டங்களின் தலைவரும், சங்கத்தின் உறுப்பினருமான பாபி பாலகிருஷ்ணா கூறுகையில், இந்தியாவில் கிராமப்புற பகுதிகளில் வசிக்கும் பெண்கள், தங்கள் குடும்பத்தை நன்கு கவனித்துக் கொண்டாலும், தங்களின் உடல் நலம் மற்றும் நல்வாழ்வை புறக் கணித்தே வந்துள்ளனர். இதை கருத்தில் கொண்டு எங்கள் சங்கம் சென்னையைச் சுற்றி 70 கி.மீ. தொலைவில் உள்ள 5 கிராமங்களை தத்தெடுத்துள்ளது. அங்கு நாங்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளின் உடல்நலன் மற்றும் ஆரோக்கி யத்தில் கவனம் செலுத்துவோம். அவர்களுக்கு வழக்கமான மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்வோம்.

அன்று மாலை மயிலாடுதுறையில் உள்ள அரசு பெரியார் மருத்துவ மனைக்கு அல்ட்ராசவுண்ட் கருவி

RID 2981 DG V செல்வநாதன் மற்றும் குழுவினரின் மியாவாகி காடுகள் திட்டத்தை RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் துவக்கி வைத்தார்.

நன்கொடையாக வழங்கப்பட்டது. ரூ.24 லட்சம் மதிப்புள்ள இந்த கருவியை மேக்டெர்மிட் ஆல்பா என்ற நிறுவனம் நன்கொடையாக வழங்கியிருந்து. மேலும் கோவிட் தொற்று காலத்திலும் மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்த இந்த நிறுவனம் கூடுதலாக நிதியுதவி வழங்கியுள்ளது. இது மாவட்ட தலைமை மருத்துவமனை. இங்கு 612 படுக்கைகள் உள்ளன. மேலும் இங்கு ஏறக்குறையை 10 லட்சம் பேருக்கு மருத்துவ சேவை அளிக்கப்பட்டு வருகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அண்மையில் எங்கள் சங்கம் ரூ.75 லட்சம் மதிப்புள்ள மார்பக புற்று நோய் கண்டறியும் மம்மோகிராபி கருவியை சென்னையில் உள்ள ACS மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு வழங்கியுள்ளது. தேவக்கோட்டை மருத்துவமனைக்கு இதேபோல $120,000 மதிப்புள்ள மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவியை நன்கொடையாக வழங்க திட்டமிட்டுள்ளோம் என்றார் சங்கத்தின் செயலர் ஜெயஸ்ரீ ஸ்ரீதர். சுமார் 10,000 பெண்களுக்கு மார்பக புற்றுநோய் கண்டறியும் மருத்துவ முகாம் நடத்தப்பட உள்ளது. மேலும் சென்னை மாநகராட்சிக்கு நடமாடும் மருத்துவப் பரிசோதனை வாகனம் நன்கொடையாக வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சங்கத்தின் மூன்றாவது திட்டம் தொடங்கி வைக்கப்பட்ட விவரங்களை சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சுந்தரேசன் ரவி விவரித்தார். இத்திட்டத்தின் கீழ் ஐந்து பள்ளிகளில் மொத்தம் 165 கழிப்பறைகள், கை கழுவும் நிலையங்களும் அமைக்கப்பட உள்ளன. மாணவிகளுக்கு சானிடரி நாப்கின் வழங்கும் இயந்திரம் நிறுவப்பட்டு, நாப்கின் மாற்றும் அறைகளும் கட்டித் தரப்படும். இத் திட்டம் ரூ.1 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இதன் மூலம் 9,600 குழந்தைகள் பயன்பெறுவார்கள் என்றார்.

சங்கத்தின் முன்னாள் தலைவர் P N மோகன் கூறுகையில், தமது பதவிக் காலத்தில் (2017–18) “நிதி ஆயோக்” அறிக்கையை படித்தபோது, இந்தியாவில் தில்லி, மும்பை, ஹைதராபாத், சென்னை உள்ளிட்ட 21 நகரங்கள் வறண்ட நிலையில் இருப்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்ததாகக் குறிப்பிட்டார். இதைத் தொடர்ந்து எங்கள் சங்கம் சென்னையில் உள்ள ஏரிகளை புனரமைக்கத் தொடங்கியது. இது வரை ரூ.4 கோடி செலவில் ஏழு ஏரிகள் தூர்வாரப்பட்டுள்ளன. இதன் மூலம் 1,000 ஏக்கர் விவசாய நிலங்கள் உள்பட 8 லட்சம் பேர் பயன்பெற முடியும் என்றார். 7வதாக சித்தாலப்பாக்கம் ஏரியை அண்மையில் புனரமைத்துள்ளோம். 200 ஏக்கர் பரப்பளவுள்ள இந்த ஏரியின் மூலம் 500 ஏக்கர் விவசாய நிலங்கள் மற்றும் 2 லட்சம் பேர் பயனடைவார்கள். இவற்றை ரோட்டரி தலைவர் ஜோன்ஸ் இன்று திறந்துவைத்துள்ளார் என்றார்.

சென்னையில் 40 ஆண்டுகளுக்கு மேலாக, 200 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வரும், லாப நோக்கமற்ற காஞ்சி காமகோடி சைல்டு டிரஸ்ட் மருத்துவமனையில் சங்கத்தின் சார்பில் செயல்படுத்தப்பட உள்ள C-Arm திட்டம் குறித்து டாக்டர் பாலா ராமச்சந்திரன் கூறுகையில், சைல்டு டிரஸ்ட் மருத்துவமனையில் இமேஜ் இன்டன்ஸிஃபயர் அல்லது C-Arm எனப்படும், கருவி, அதாவது அறுவைச்சிகிச்சைக்கு முன்பும், பின்பும் எக்ஸ்ரே படம் எடுக்கும் கருவி நிறுவப்பட்டுள்ளது. பொது மருத்துவம், நரம்பியல், குழந்தைகள் மருத்துவம், முடநீக்கியல் மற்றும் இதர அறுவைச் சிகிச்சைகளின் போது இவை பயன்படுத்தப்படும். இது அறுவைச்சிகிச்சை நிபுணர்களுக்கு சிகிச்சை அளிக்க உதவியாக இருக்கும். அத்துடன் குழந்தைகளுக் கான அவசர சிகிச்சை பிரிவில் நோயாளிகளை கண்காணிக்கும் கருவிகளும் நன்கொடையாக வழங்கப்பட்டன. இந்த திட்டம் ரூ.67 லட்சம் அல்லது 78,000 டாலர் மதிப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

கோவிட் தொற்றுக்காலத்தில் மெட்ராஸ் ரோட்டரி சங்கம், கோவிட் தடுப்பூசிகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்ல சிறப்பு வாகனங்களுக்கு ஏற்பாடு செய்திருந்தது. இதன் மூலம் லட்சக்கணக்கான பேர் தடுப்பூசி செலுத்திக் கொள்ள முடிந்தது. கோவிட் தொற்று மற்றும் தடுப்பூசி போடும் பணிகள் நிறைவுக்கு வந்த நிலையில் இப்போது இந்த வாகனங்கள் மகளிர்க்கு மருத்துவ சிகிச்சை அளிக்கும் நடமாடும் வாகனமாக கிராமப் புறங்களில் வலம் வரும் என்றார் தலைவர் ஜெயஸ்ரீ.

கடந்த ஆண்டு சங்கத்தின் சார்பில் TRF நிதிப் பங்களிப்பாக 5,40,000 டாலர் வழங்கப்பட்டதாக முன்னாள் தலைவர் மோகன் ராம் தெரிவித்தார். கடந்த சில ஆண்டுகளில் இச்சங்கம் 2 மில்லியன் டாலருக்கு மேல் TRF நிதியாக வழங்கியுள்ளது. மேலும் 10 மில்லியன் டாலர்களை நான்கு திட்டங்களுக்காக பெற்றுள்ளது. ஆனால், சர்வதேச மானிய உதவி பெறுவதில் சில சிக்கல்கள் உள்ளன. இது குறித்து பின்னர் RI தலைமையிடம் தெரிவிக்கப்படும். இந்த பிரச்னைகள் தீர்க்கப்பட்டு விட்டால் 5 லட்சம் டாலர் என்பது 10 லட்சம் டாலராக உயர வாய்ப்புள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மூன்று கிராமங்களை திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமமாக

RI *தலைவர் ஜோன்ஸ்,* RC *மெட்ராஸ் தலைவர் -தேர்வு சுந்தரேசன் ரவி, சங்கத் தலைவர் ஜெயஸ்ரீ ஸ்ரீதர், செயலாளர் ஆஷா மதன்,* DG N *நந்தகுமார் மற்றும்* RI *இயக்குனர்* A S *வெங்கடேஷ்.*

மாற்றும் வகையிலான குடிநீர், சுகாதாரத் திட்டத்தின் மீது 2014ம் ஆண்டு கவனம் செலுத்தப் பட்டு வருவதாக தலைவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள செல்லகிருஷ்ணா தெரிவிதார். 14 கிராமங் களில் 10,000 குடியிருப்பு வாசிகள் பயன்படுத்தும் வகையில் 1,680 கழிப்பறைகள் கட்டப்படும். மேற்குறிப்பிட்ட மூன்று கிராமங்களில் 180 கழிப்பறைகள் கட்டப்படும். இதன் மூலம் 1,000 பேர் பலனடைவர். மேலும் நாளந்தா என்னும் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் கிராம மக்கள் கழிப்பறையை பயன்படுத்துவது மற்றும் கைகழுவும் நடைமுறையை பின்பற்றுவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப் படும். இத்திட்டம் ரூ.50 லட்சம் செலவில் 6 மாதங் களில் பூர்த்தி செய்யப்படும் என்றார்.

மெட்ராஸ் ஈஸ்ட் ரோட்டரியின் சக்தி திட்டம்

மெட்ராஸ் ஈஸ்ட் ரோட்டரி சங்கத்தின் திட்டங்களை அறிமுகப் படுத்திய அதன் தலைவர் T V ராம்குமார் கூறுகையில், 118 உறுப்பினர்கள் கொண்ட எங்கள் சங்கம், தொடக்கத்திலிருந்தே உறுப்பினர்களை தக்க வைத்தல் மற்றும் அவர்களை திட்டங்களில் ஈடுபடுத்துதலில் முனைப்பு காட்டி வருகிறது. ரூ.14.06 கோடி அல்லது 2 மில்லியன் டாலர் மதிப்பிலான சர்வதேச மானிய உதவி உள்ளிட்ட ரூ.60 கோடி மதிப்பிலான திட்டங் களைச் செயல்படுத்தியுள்ளோம். இதன் மூலம் 1 லட்சத்துக்கும் மேலான மக்களின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளோம் என்றார்.

ஏழைகளுக்கு உணவு அளிப்பது, 200க்கும் மேற்பட்ட பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள் அல்லது மின் கற்றல் வகுப்புகளை ஏற்படுத்துவது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 25 பள்ளிகளில் சீரமைப்பு பணிகளை மேற்கொள்வது என பல நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளோம். *Tiny Hearts* என்னும் இதய அறுவைச் சிகிச்சை திட்டத்தின் மூலம் அப்பல்லோ மருத்துவமனையுடன் கூட்டாண்மை ஏற்படுத்திக் கொண்டு இதுவரை 500 குழந்தைகளுக்கு இலவசமாக இதய அறுவைச்சி கிச்சை செய்துள்ளோம். *Dhristi* என்னும் திட்டத்தின் கீழ் 300 பேருக்கு செயற்கை நுண்ணறிவுடன் கூடிய ஸ்மார்ட் கண் கண்ணாடிகளை வழங்கியுள்ளோம். மேலும் இந்த ஆண்டு 500 பேருக்கு தலா ரூ.30,000 செலவில் கண்புரை அறுவைச் சிகிச்சை நடத்தவும் திட்ட மிட்டுள்ளோம். மேலும் இரத்த தான மற்றும் உறுப்பு தானம் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்துள்ளோம்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, குடிநீர் சேமிப்பு மற்றும் ஏரிகள், ஆலயங்கள் மற்றும் சமுதாயக் குளங்களைச் சீரமைத்தல் மற்றும் நகர்ப் புறங்களில் மியாவாகி காடுகளை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளோம். மெட்ராஸ் ஈஸ்ட் ரோட்டரி சங்கம், தொழில்சார்ந்த சேவை திட்டங்களுக்கு பெயர் போனது. எங்களிடம் இரு சமுதாயக் கல்லூரிகள் உள்ளன. இதன் மூலம் ஏழைகளுக்கு பேக்கரி, நர்சிங் மற்றும் லேப் டெக்னீஷியன்கள் பயிற்சி அளித்து அவர்கள் 100 சதவீத வேலைவாய்ப்பை பெறவும் உதவி வருகிறோம். மேலும் கணக்குப்பதிவியில், பிளம்பிங், தையல் மற்றும் இதர பயிற்சிகள் அளிப்பதுடன் வேலை வாய்ப்புக்கான கண்காட்சிகளையும் நடத்துகிறோம் என்றார் ராம்குமார்.

Wings to fly எங்களது மற்றொரு முதன்மையானத் திட்டம். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கும் 8 முதல் 10 மாணவர்களை வெளிநாடுகளுக்கு கல்விப் பயணமாக அழைத்துச் செல்கிறோம். இதற்கான நிதி சங்கத் திலிருந்து செலவிடப்படுகிறது. இந்த ஆண்டு மாநகராட்சி பள்ளி குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டி தவிர, உறுப்பினர் சேர்க்கை, TRF நிதிப் பங்களிப்பு, கார்ப்பொரேட் நிறுவனங்களின் CSR மூலம் மேலும் பல திட்டங்களை செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

இந்த ஆண்டு சர்வதேச மானிய உதவியுடன் செயல்படுத்தும் இரண்டு திட்டங்களில் ஒன்று சக்தி. பெண்களிடம் அதிகரித்து வரும் புற்று நோயை கண்டறிந்து குணப்படுத்தும் விதமாக சென்னையில் உள்ள VHS மருத்துவமனைக்கு மார்பக புற்றுநோய் கண்டறியும் கதிர்வீச்சு கருவியை நன்கொடையாக வழங்கவுள்ளோம். இக்கருவியை இயக்குவதற்கான பயிற்சியும்

நீங்கள் செய்துவரும் சேவைகளுக்கு நன்றி: ஜோன்ஸ்

ரோட்டேரியன்களிடையே பேசிய தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், சமூகத்தில் நீங்கள் செய்து வரும் சிறப்பான சேவைகளுக்கு நன்றி. மற்றவர்களின் மனதைத் தொடும் வகையில் ஒவ்வொரு நாளும் நீங்கள் செய்துவரும் சேவைகள் பற்றி மக்களிடம் கதை போல் எடுத்துச் சொல்லுங்கள். அப்போதுதான் அவர்கள் ரோட்டரி குடும்பம் செய்யும் வேலைகளை புரிந்துகொள்வார்கள் என்று வலியுறுத்தினார்.

ரோட்டேரியன்கள், தாங்கள் செய்யும் சேவைகளை அல்லது பணிகளை அமைதியாகவும், பிறரின் கவனத்தை தேடாமலும் செய்ய வேண்டும். இது உன்னதமான பணி. எனவே விளம்பரம் வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால், உலகில் ரோட்டரி அமைப்பு பற்றிய விழிப்புணர்வு குறித்து ஆய்வு நடத்தியபோது 10ல் இரண்டு பேர் மட்டும் ரோட்டரியை பற்றி தெரிந்து வைத்திருக்கிறார்கள். உங்களைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், இதை கேட்கும்போது எனது மனம் உடைந்துபோகிறது. உலகிற்கு நன்மை செய்வது என்பது நமது டி.என்.ஏ.வில் ஊறிப்போனது. ஆனால், உலகம் முழுவதும் நமது செயல்பாடுகள் பற்றி தெரிந்திருக்க வேண்டும். நாம் விரும்பும் தரத்தில் உள்ள மக்களை ரோட்டரி உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும். இதன் மூலம் நாம் யார் என்பது அவர்களுக்குத் தெரியும். அப்போது ரோட்டரி என்றால் என்ன கேள்வியே எழாது.

ரோட்டரி நல்லவர்களையோ அல்லது செயல்வீரர்களையோ மட்டும் விரும்பவில்லை. நான் அதற்கு மேலும் இரண்டு சொற்றொடர்களைச் சேர்த்துள்ளேன். நாம் ஒரு நோக்கத்துடன் செயல்படுகிறோம் மற்றும் செல்வாக்கு பெற்றுள்ளோம். நாம் நேர்மையான வழியில் செல்வாக்கு பெற்றவர்கள் என்பதற்கு இன்று இந்த அறையில் நாம் பார்ப்பவையே மிகச் சிறந்த உதாரணம்.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருந்த ரோட்டேரியன்களிடம் அவர்கள் செய்துள்ள பணிகளின் தாக்கத்தை கற்பனை செய்துபார்க்குமாறு ரோட்டரி தலைவர் ஜோன்ஸ் கேட்டுக்கொண்டார். ஒரு சிறுமி மாதவிடாய் சுழற்சி காரணமாக பள்ளியைத் தவறவிடாமல் அவளுக்கு சில வசதிகளை செய்து தரும் போது ஏற்படும் தாக்கத்தை நினைத்துப் பாருங்கள். சுத்தமான குடிநீர் கிடைக்கும் நிலையில், நோய்வாய்ப்படாமல் சிறுவர்கள் பள்ளிக்குச் சென்று கல்வி கற்று வளர்வதை நினைத்துப் பாருங்கள். மார்பக புற்றுநோய் இருப்பதை முன்கூட்டியே அறிந்து கொண்ட பெண், சிகிச்சை பெற்று குடும்பத்துடன் வாழ்வதை நினைத்துப் பாருங்கள். இன்று இரவு நீங்கள் எங்களிடம் சொன்னவை அனைத்தும் வரும் தலைமுறையினரிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். நீங்கள் செய்யும் சேவைகள் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது உங்களுக்குத் தெரியாது. ஆனால், இரவில் தலையணையில் தலைவைத்து படுத்திருக்கும் போது, ஏழைகளின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது, உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன, குடும்பங்கள் சரியாக இருக்கின்றன, சமூகங்கள் வளர்ந்து வருகின்றன. நாம் செய்த சேவையின் காரணமாகவே சமூகம் செழிக்கிறது என்பதை நினைத்துப் பார்ப்பீர்கள் என நான் நம்புகிறேன் என்றார்.■

RI தலைவர் ஜோன்ஸ் உடன் RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி, அவர் மனைவி அமீதா.

அளிக்கப் படும். இக்கருவியின் மதிப்பு 80,000 டாலர்கள் என்றார்.

மியாவாகி காடுகள் (RID 2981)

தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் மாவட்டங்களிலும் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் 16 லட்சம் சதுர அடி பரப்பில் மியாவாகி காடுகள் அமைக்கும் மிகப் பெரிய திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. சுற்றுச் சூழலை பாதுகாக்கும் தனித்துவமான இந்த திட்டம் முன்னாள் மாவட்ட ஆளுநர் S பாலாஜி பாபுவால் (2020–21) உருவாக்கப் பட்டது. 2004ல் ஏற்பட்ட சுனாமி பேரழிவு, குறுகிய காலத்தில் கஜா மற்றும் தானே புயல்களால் இப்பகுதியின் இயற்கை வளங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தன. இதையடுத்தே இந்த பசுமை வளர்ப்புத் திட்டம்.

PDG பாலாஜி பாபுவின் பதவிக் காலத்தில் 73க்கும் மேற்பட்ட ரோட்டரி சங்கங்கள் இத்திட்டத்திற்கு பங்களிப்பு செய்துள்ளன. மேலும் இத்திட்டம் அவரது பதவிக்காலத் துடன் முடிந்துவிடவில்லை. மியாவாக்கி காடுகள் பலவகையான தாவரங்கள், பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு உணவு மற்றும் தங்கு மிடத்தை வழங்குவதுடன், பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்தி அடர்ந்த காடுகளை உருவாக்கி, அதிக ஆக்ஸிஜனை உற்பத்தி செய்து, அதிக மழைப்பொழிவை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் மாசுபடுதலை குறைக் கிறது. எனவே இந்த பசுமைக் காடு களுக்கு வேலி அமைத்து, தண்ணீர் சப்ளை செய்து 33 ஆண்டுகளுக்குப் பராமரிக்க ரோட்டரி சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

RID 2982, கார்ப்பொரேட் நிறுவனங்களின் CSR நிதி மூலம் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் கண்டறியும் கருவி மற்றும் செவிப் புலன் நோய் கண்டறியும் கருவிகளை சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, பேளூர் அரசு மருத்துவமனை களுக்கு வழங்கியுள்ளது. மேலும் மாவட்டத்தில் உள்ள சங்கங்கள், அரசு மருத்துவமனைகளுடன் இணைந்து கிராமங்களில் செவித்திறன் குறைபாடுள்ள மக்களுக்கு சிகிச்சை அளித்துள்ளது.

மகளிர் மேம்பாடு (RID 3231)

ரோட்டரி மாவட்டம் 3231ன் அடிப் படைக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் திட்டத்தை மாவட்ட ஆளுநர் J K N பழனி எடுத்துரைத்தார். அரசுப் பள்ளிகளில் எழுத்தறிவு, சமூகத்தின் பொருளாதார மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மகளிர் மேம் பாட்டுக்காக தமது சங்கம் சேவையாற்றி வருவதாக அவர் குறிப்பிட்டார். பொருளாதார ரீதியில் பெண்களை மேம்படுத்த மாவட்டத்தில் உள்ள 94 சங்கங் களும் இணைந்து மாதம் 30 பெண்களுக்கு தையல் பயிற்சி அளித்து அவர்களுக்கு இலவசமாக தையல் இயந்திரங்களை வழங்கி வருகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு 360 பெண்கள் சுயமாக தொழில் செய்து தங்கள் வருமானத்தை பெருக்கிக் கொள்ள முடியும். இந்த வகையில் மொத்தம் 34,000 பேர் பயனடைய முடியும். 10 வருடத்தில் 3 லட்சம் பெண்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்த இயலும் என்றார். மேலும் ரோட்டேரியன்கள் தங்களின்

RI தலைவர் ஜோன்ஸ் RID 3231-ன் பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் அளிக்கும் திட்டத்தினை DG J K N பழனி, PDG அபிராமி ராமநாதன் முன்னிலையில் துவக்கி வைக்கிறார். உடன் DGN நிக் க்ரயாசிச் மற்றும் RI இயக்குனர் A S வெங்கடேஷ் ஆகியோரும் உள்ளனர்.

RI தலைவர் ஜோன்ஸுடன் RC மெட்ராஸ் ஈஸ்ட் உறுப்பினர் சந்தியா அருண்குமார், சங்கத் தலைவர் T V ராமாகுமார், செயலாளர் ப்ரபுராம் வெங்கட்ரமணி மற்றும் DG N நந்தகுமார்.

தனிப்பட்ட தொடர்புகள் மூலம் கம்பெனிகள் மற்றும் நிறுவனங்களில் இவர்களுக்கு வேலைக்கான ஆர்டர்கள் கிடைக்க உதவி வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

குடிநீர் சேமிப்பு மற்றும் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக மழைநீர் சேகரிப்பு குறித்து சமூகத்தினரிடம் விழிப் புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. நீர் நிலைகளைப் பாதுகாப்பதுடன் 17 லட்சம் மரக்கன்றுகள் நடவும் திட்ட மிட்டுள்ளோம் என்றார் பழனி. பொது மருத்துவ மனைகளில் தாய்-சேய் நலன், சுகாதாரமான உணவு வழங்குதல், யோகா கற்பித்தல், கழிப்பறைகள் கட்டுதல் மற்றும் பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல், மருத்துவ முகாம்கள் நடத்தவும் திட்ட மிட்டுள்ளோம். மேலும் ரோட்ராக்ட் மற்றும் இண்டராக்ட் சங்க உறுப் பினர்களுக்கு வழக்கமான RYLA நிகழ்ச்சிகளும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன என்றார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

பெரிய அளவுத் திட்ட நல்கைக்கு விண்ணப்பிக்கும் நேரங்கள்

ஒவ்வோர் ஆண்டும் பெரிய அளவுத் திட்டங்கள் ஒரு போட்டி நல்கைச் செயல்முறையை ஆதரிக்கும், அதன் நிறைவில் ஒரு சங்கம் அல்லது மாவட்டத்தால் ஆதரிக்கப்படுகிற, இன்னும் பல இடங்களில் இன்னும் பல மக்களுக்கு உதவும் வெற்றியை, தயார் நிலையைக் காண்பிக்கிற ஒரு திட்டத்துக்கு ரோட்டரி அறக்கட்டளைக்கு $2 மில்லியன் நல்கையை 3 முதல் 5 ஆண்டுகளில் வழங்கும்.

பெரிய அளவுத் திட்ட நல்கை விண்ணப்பம்: முக்கிய நாட்கள்

- **ஜூன் 2022:** போட்டி நல்கைச் செயல்முறை தொடக்கம்
- **ஆகஸ்ட் 2022:** கருத்துக் குறிப்புகள்
- **அக்டோபர் 2022:** முன்வைப்புகளைச் சமர்ப்பிக்க அழைப்பிதழ்
- **ஃபிப்ரவரி 2023:** கள வருகைகள் (மெய்நிகர் மற்றும்/ அல்லது நேரில்)
- **ஏப்ரல் 2023:** விருதுத் தீர்மானம்

மேலும் தகவல்களுக்கு, https://my.rotary.org/en/take-action/apply-grants/programs-scale-grantsஐப் பாருங்கள் அல்லது, programsofscale@rotary.orgக்கு எழுதுங்கள்.

கற்றல் மையப் பயிற்சிகள்

Learning Centerன் இணையக்கற்றல் மையம் உங்கள் தலைமைப் பொறுப்பிற்கு உதவ பல பயிற்சிகளை வழங்குகிறது. கொடையாளர்களை அடையாளம் காண, வளர்க்க உதவும் நிதி திரட்டல் அடிப்படைகள் பயிற்சியை எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் சக ஊழியர்கள் பதிவு செய்துள்ள சிற்றேட்டு யோசனைகள், வழிகாட்டிகள், PPTகள், நிதி திரட்டல் வழிகள் ஆகியவற்றை இங்கு காணலாம்.

பங்களிப்பு, அங்கீகார வழிகாட்டுதல்கள்

- RF (I)க்கான பங்களிப்புகள் அனைத்தும் 1961, IT சட்டத்தின் 80G பிரிவின்கீழ் 50% கழிப்புக்குத் தகுதி பெறும்.
- ஒவ்வொரு பங்களிப்புடனும் PAN வழங்கவேண்டும்.
- கொடையாளருடைய தனிப்பட்ட/குடும்பத்தால் கட்டுப்படுத்தப்படுகிற தொழில்/அறக்கட்டளைக் கணக்கிலிருந்து பங்களிப்பு வழங்கப்பட்டால், பெரு நிறுவனக் கடிதம் தேவை.
- RF(I)க்கான இணையப் பங்களிப்புகளை Rotary.orgல் Debit / Credit card அல்லது இணைய வங்கிமூலம் செய்யலாம்.
- போலி ID உருவாக்கத்தைத் தவிர்க்க, My Rotary உள்நுழைவைப் பயன்படுத்துங்கள், அந்தக் கணக்கு இல்லாதோர் ரோட்டரியில் பதிவு செய்த மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி 'As a guest' மூலம் பங்களிக்கலாம்.
- 80G பலனைப் பெற, இணையம் வழியாகப் பணம் செலுத்தும் போது "இந்திய ரூபாய்" (INR) என்று தேர்ந்தெடுங்கள்.
- கொடையாளர் பரிமாற்றக் கோரிக்கைப் படிவத்தின் வழியாக அங்கீகாரப் புள்ளிகளை மாற்றலாம்: 1 PHFயிற்கு குறைந்தது 100 புள்ளிகள்.
- அங்கீகாரங்களை அனுப்ப 4 முதல் 5 வாரங்கள் (சில நேரங்களில் இன்னும் கூடுதலாக) ஆகலாம்.

IMAGINE OPPORTUNITIES

Discover new ways to tackle the world's most pressing challenges at the Rotary International Convention. You'll find the tools, resources, and connections to make an impact at home and around the world.

2023 ROTARY INTERNATIONAL CONVENTION
MELBOURNE, AUSTRALIA
27-31 MAY 2023

Rotary | MELBOURNE 2023

Register today at
convention.rotary.org

2024–25 ரோட்டரி தலைவராக ஸ்டீபனி உர்சிக் தேர்வு

அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் உள்ள மெக்முர்ரே ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ஸ்டீபனி உர்சிக் 2024–25 ஆண்டுக்கான ரோட்டரி தலைவர் பதவி வேட்பாளராக தேர்வுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ரோட்டரிக்கு தலைமை வகிக்கும் இரண்டாவது பெண் மணியாக அவர் இருப்பார். சவாலான வேட்பாளர்கள் யாரும் பரிந்துரைக்கப்படா விட்டால், அவர், தலைவர் பதவி வேட்பாளராக வரும் அக்டோபர் 1ம் தேதி அறிவிக்கப்படுவார்.

கோவிட்-19 தொற்று, பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் பேரழிவு மற்றும் உலகின் பல்வேறு பிராந்தியங்களில் நிலவி வரும் மோதல்கள் என பல்வேறு சவால்களை உலகம் எதிர்கொண்டு வரும் நிலையில், ரோட்டரி தலைவர்கள் ஒரு புதிய கண்ணோட்டத்துடனும் திட்டங்களுடனும் இத்தகைய சவால்களை சமாளிக்க முடியும் என்று உர்சிக் கூறுகிறார்.

ரோட்டேரியன்கள் ஒன்று சேர்ந்து செயல்படும் போது நெருக்கடிக்கு தீர்வுகாண முடிகிறது என்றார் அவர். பிராந்திய மயமாக்கலுக்கு முன்னுரிமை அளிப்பது முக்கியமானது என்கிறார் உர்சிக். ரோட்டரி 200க்கும் மேலான நாடுகளிலும் பிராந்தியங்களிலும் செயல் பட்டு வருகிறது. பிராந்திய வேறுபாடுகள் இருந்தாலும் சேவை செய்தல், ஒருமைப்பாட்டை மேம்படுத்துதல், உலக அளவிலான புரிதல், நல்லெண்ணம் மற்றும் அமைதி ஆகியவற்றுக்காக ரோட்டரி எப்படி ஒன்றிணைந்து சிறப்பாக செயல்படுகிறது என்பதை புரிந்துகொண்டு அதை அங்கீகரிப்பது அவசியமாகும் என்கிறார்.

Doctors at Work LLC என்ற ஆலோசனை மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பங்குதாரர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார் உர்சிக். பென்சில்வேனியாவில் உள்ள இண்டியானா பல்கலைக் கழகத்தில் தலைமைப் பண்பு குறித்தான படிப்பில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். ஸ்டீபனி உர்சிக் 1991ம் ஆண்டு முதல் ரோட்டரியில் உறுப்பினராக உள்ளார். ஒரு தொடக்கப்பள்ளி கட்ட உதவுவதற்காக வியட்நாம், குடிநீர் வடிகட்டிகளை நிறுவுவதற்காக டொமினிக்கன் குடியரசு ஆகிய நாடுகளுக்கு பயணித்துள்ளார். அவர் பல்வேறு ஸ்லாவிக் மொழிகளையும் கற்கிறார். உக்ரைனில் புதிய ரோட்டேரியன்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர். மேலும் போலந்தில் ரோட்டரி அறக்கட்டளை மானியத் திட்டத்தை ஒருங்கிணைத்தவர்.

இயக்குநர், அறக்கட்டளை அறங்காவலர், RI திட்டக் குழு தலைவர், அறக்கட்டளையின் நூற்றாண்டு விழாக்குழு தலைவர் என ரோட்டரியில் பல்வேறு பதவிகளை அவர் வகித்துள்ளார். தற்போது தேர்தல் மறு ஆய்வுக்குழு மற்றும் செயல்திட்ட மறு ஆய்வுக்குழுவில் பணியாற்றுகிறார்.

©Rotary.org

RI இயக்குநர்கள்- மண்டலங்கள் 4,5,6 மற்றும் 7க்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்

T N சுப்பிரமணியன், 4, 7 மண்டல RIDE



T N சுப்பிரமணியன் (ராஜு சுப்பிரமணியன்) 4, 7 மண்டலங்களுக்கு RI இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். RID 3141, RC தியோனர் உறுப்பினரான இவர், 2009–10ல் அப்போது பிரிக்கப்படாத 3140 மாவட்டத்தின் ஆளுநராக சேவையாற்றியவர். அவர் பிராந்திய ரோட்டரி அறக்கட்டளையின் தலைவர். 2019 மண்டல மாநாட்டின் (இந்தூர்) தலைவராக இருந்தார். 2018–19ல் RIன் அரசமைப்பு மற்றும் சட்ட விதிகள் குழுவிலும் பணியாற்றியுள்ளார்.

2022 ஏப்ரலில் CoL துணைத்தலைவராக இருந்தார். அவரும் அவரது மனைவி வித்யாவும் ஆர்ச் க்ளம்ப் மற்றும் பால் ஹாரிஸ் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளனர். சுப்பிரமணியன், பல்வேறு உயர்நீதிமன்றங்களிலும், உச்சநீதி மன்றத்திலும் மூத்த வழக்கறிஞராக உள்ளார். ■

அனிருதா ராய்சௌதுரி 5, 6 மண்டலங்களின் RIDE



அனிருதா ராய் சௌதுரி RC கொல்கத்தா மெகாசிட்டி (RID 3291) உறுப்பினர். மேலும் 2007–08ம் ஆண்டில் பிரிக்கப்படாத 3290 மாவட்ட ஆளுநராகப் பணியாற்றியவர். அவர், தமது பதவிக் காலத்தின் போது 450 உறுப்பினர்களை புதிதாக சேர்த்துள்ளார், 11 புதிய சங்கங்களை உருவாக்கியுள்ளார். மேலும் TRF நிதிக்கு $613,000 பங்களிப்பு செய்து அவரது மாவட்டம் சாதனை படைத்துள்ளது. 2021–22ல் ரோட்டரி பற்றிய நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் ஒருங்கிணைப்பாளராகவும், ரோட்டரி அறக் கட்டளையில் உதவி ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். தற்போது TRFல் தொழில்நுட்ப ஆலோசகர்களில் ஒருவராக இருந்து வருகிறார். RIன் Service above Self மற்றும் Citatation for Meritorious Service விருதுகளை பெற்றுள்ளார். அவரும் அவரது மனைவி ஷிப்ராவும் Major Donor மற்றும் Bequeath Society உறுப்பினர்கள். ■

Imagine Impact tour

எழுத்தறிவுத் திட்டங்கள் ஏராளம்!

ரஷீதா பகத்

சென்னையில், RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், பள்ளிகளுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் முதல் ஸ்மார்ட் வகுப்பறைகள், கணினி மூலமான உரையாடல்கள் மற்றும் கைத்திறன் தொழில் நுட்பத்தை உள்ளடக்கிய மின் கற்றல் திட்டங்கள் வரையிலான கல்வித் திட்டங்களை தொடங்கிவைத்தார்.

ரோட்டரி தலைவரால் தொடங்கி வைக்கப்பட்ட முக்கியமான, அனைவரையும் ஈர்க்கும் திட்டம், கிண்டி ரோட்டரி சங்கத்தின் குருகுல திட்டம். இத்திட்டத்தை விவரித்த சங்கத்தின் தலைவர் ரமேஷ்பாபு தெரிவிக்கையில், இந்தியாவில் அரசு வெளியிட்டுள்ள தகவல்களின் படி 150 மில்லியன் குழந்தைகள் பள்ளிகளை விட்டு வெளியேறியுள்ளனர். இதைவிட கவலை அளிக்கும் விஷயம் என்னவெனில் பெயரைப் பதிவு செய்து கொண்டவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் ஆரம்பப் பள்ளிப் படிப்பை பாதியிலேயே நிறுத்தி விடுகின்றனர் என்பதுதான்! ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்குச் சென்று நிலைத்து நின்று பள்ளிக் கல்வியை முடிக்கும் இந்தியா வைத் தான் நாங்கள் கற்பனை செய்துள்ளோம்.

சங்கத்தின் முன்னாள் தலைவர் நீலகண்டன் லோகநாதனால் கருத்துரு வாக்கம் செய்யப்பட்ட திட்டம் "குருகுலம்". 100க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சங்கத்தால் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் எழுத்தறிவு மற்றும் அடிப்படைக் கல்வி. நாங்கள் TRF நிதிக்கு தாராளமாக பங்களித்துள்ளோம். சர்வதேச நிதியுதவிகள் மூலம் கண்பார்வை பராமரிப்பு, குழந்தைகள் பராமரிப்பு, குழந்தைகளுக்கான தாய்ப்பால் வங்கி, மோரீஷஸில் குழந்தை களுக்கான அண்ணப் பிளவு சிகிச்சை திட்டம், மலேசியாவில் முதியோர் நலன் பராமரிப்பு, கோவிட் தொற்று ஒழிப்பு மற்றும் நிவாரணப் பணிகள் மற்றும் டயாலிஸிஸ் சிகிச்சை மையங்கள் உள்ளிட்ட திட்டங்களைச் செயல் படுத்தியுள்ளோம்.

குருகுல கல்வியின் முக்கிய நோக்கம், கல்வியை சுவாரஸ்ய மாகவும், பயனுள்ளதாகவும் மாற்ற நவீன தொழில்நுட்பங்களைப் பயன் படுத்துவதான். மேலும் பொருளாதாரத்தில் பின் தங்கிய வகுப்பினர் சென்று படிக்கும் பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்புகளை ஏற்படுத்தி வருகிறோம்.

RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் RC கிண்டியின் குருகுலம் திட்டத்தை துவக்கி வைக்கிறார். உடன் சங்கத் தலைவர் ரமேஷ் பாபு, DG N நந்தகுமார், சங்க செயலாளர் ராதா கிருஷ், சமூக திட்டங்கள் இயக்குனர் சுரேஷ் குமார் மற்றும் Dr அனுராதா ஆகியோரும் உள்ளனர்.



RI தலைவர் ஜோன்ஸ், RI இயக்குனர்கள் மகேஷ் கோட்பாகி மற்றும் A S வெங்கடேஷ் ஆகியோருடன் RID 3000 DG I ஜெரால்டு, அவர் மனைவி மார்கரெட், PDG R V N கண்ணன் மற்றும் மாவட்ட உறுப்பினர்கள்.

ஏனெனில் இங்கு படிக்க வரும் குழந்தைகள் முதல் தலைமுறையினராவர். குழந்தைகளுக்கு தரமான கல்வியை அளிப்பதை நோக்கமாகக் கொண்டது இந்த திட்டம். மேலும் மறதியினால் படித்ததை புரிந்துகொள்ள முடியாமல் இருப்பவர்களைக் கண்டறிந்து அவர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண உதவுகிறோம். ஒவ்வொரு வகுப்பறையிலும் செயல்பாட்டு கருவிகளுடன் 65 அங்குல திரைகள் உள்ளன. புரிதலை ஆழப்படுத்த நிஜவாழ்க்கை சூழ்நிலைகளைத் தூண்டும் சுய கட்டுப்பாட்டு திட்டங்களும் உள்ளன என்றார் சங்கத்தின் பெண் செயலாளர் ராதாகிருஷ்.

முதல்கட்டமாக, மூன்று பள்ளிகளில் 75 வகுப் பறைகளை இலக்காகக் கொண்டுள்ளோம். இதற்கான திட்டச் செலவு உத்தேசமாக ரூ.1.25 கோடி அல்லது 1,25,000 டாலர்களாக இருக்கும். ஒவ்வொரு ஆண்டை கடக்கும் போது புதிய பயனாளிகள் இதன் மூலம் பலன் பெறுவர். ஜப்பான், மலேசியா, மோரீஷஸ் ஆகிய நாடுகளில் உள்ள ரோட்டரி சங்கங்கள், இந்திய நிறுவனத்தின் கார்பொரேட் நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு திட்ட நிதி (CSR) மற்றும் சர்வதேச நிதியுதவியுடன் இத்திட்டத்தை மிகப்பெரிய அளவில் செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் கூறினார். இதன் மூலம் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பயன்பெறுவார்கள். பள்ளிக்கே செல்லாத குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி அவர் களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளித்து, அவர்களை மேம்படுத்தி புதிய உலகைக் காணச்செய்வோம்.

RID 3000 மூலம் ரோட்டரி கல்வி மையங்கள்

RID 3000-த்தின் முதன்மை யான திட்டங்களை அறிமுகப் படுத்திய மாவட்ட ஆளுநர் I ஜெரால்டு கூறுகையில், இதில் ரோட்டரி கல்வி மையங்கள், மியாவாகி காடுகள் உருவாக்குவது, நீர் நிலைகள் மற்றும் குளங்களை புனரமைப்பது ஆகியவை அடங்கும் என்று தெரிவித்தார். எங்கள் மாவட்டத்தில் 135 சங்கங்கள் உள்ளன. அவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்த மூன்றிலும் கவனம் செலுத்தி வருகின்றனர். 2 லட்சம் மரக்கன்றுகள் நடவும், 200 ஏக்கர் பரப்பிலான நீர்நிலைகள், குளங்களை புனரமைக்கவும் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

RID 3000

150

ரோட்டரி கல்வி மையங்கள் அமைக்க உள்ளது.

சிறிய நகரங்களைச் சேர்ந்த மக்கள் நல்ல அரசு வேலை பெறும் வகையில் ஒவ்வொரு சங்கமும் ஒரு கல்வி மையம் ஏற்படுத்த கேட்டுக் கொண்டுள்ளேன். உள்ளூர் சமூகத்தில் உள்ள திறன்பெற்ற மக்கள் அரசு நடத்தும் பொதுத்தேர்வுகள் பற்றிய தகவல்களை அறிந்து கொண்டு அதற்கேற்ப தங்கள் அறிவை வளர்த்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டு இந்த கல்வி மையங்கள் செயல்படும். சிறிய நகரங்களிலும் அறிவுசார் மக்கள் இருக்கின்றனர். ஆனால், அவர்களுக்கு சரியான தகவல்கள் சென்றவடை தில்லை. அதனால் அவர்களால் போட்டித் தேர்வுக்கு தங்களை சரிவர தயார்படுத்திக் கொள்ள முடியவில்லை. எனவே

தான் அவர்களின் கனவை நனவாக்கும் வகையில் தகவல் மையங்களை ஏற்படுத்த உள்ளோம் என்றார் அவர்.

அனைத்து சங்கங்களும் ஏதாவது ஒரு கிராமத்தை அடையாளம் கண்டு அங்கு ஒரு தகவல் மையத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது தான் எனது வேண்டுகோள். இந்த மையங்கள் ரூ.3.2 லட்சம் மதிப்பில் அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும் கொண்டதாக இருக்க வேண்டும். சில சங்கங்கள் இரண்டு அல்லது மூன்று மையங்கள் வரை அமைக்க முன்வந்துள்ளன. எங்களது முக்கிய நோக்கம் இதுபோன்று 150 தகவல் மையங்களை ஏற்படுத்துவது தான். அவை மையப்படுத்தப் பட்ட நிர்வாகத்தை கொண்டிருக்கும். வரவிருக்கும் தேர்வுகள், அதற்கு எப்படித் தயார் செய்வது? எப்படி வெற்றிபெறுவது என்பது குறித்த தகவல்கள் அவ்வப் போது வெளியிடப்படும். எங்கள் நோக்கம் என்னவெனில், அவர்கள் கையில் மீன்களை கொடுப்பதைவிட மீன்பிடிக்க கற்றுக்கொடுப்பது தான். இது மதிப்பு மிகுந்தாக இல்லாவிட்டாலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டமாகும். அதாவது உள்ளூர் மக்களுக்கு நல்ல அரசு வேலை கிடைக்கச் செய்யும் திட்டமாகும். இப்படிச் செய் வதன் மூலம் பொதுமக்களிடம் ரோட்டரி பற்றிய நன்மதிப்பு உயரும். இது நீண்டகால நோக்குடைய நிலையான திட்டமாகும். இன்றைய அளவில் 20 சங்கங்கள் தகவல் மையங்களை ஏற்படுத்தி யுள்ளன. அவற்றை RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் தொடங்கிவைத்துள்ளார் என்றார்.

ஜெரால்டு பின்னர் ரோட்டரி செய்திக்குழுவிடம் தெரிவிக்கையில், எங்கள் சங்கங்களுக்கு மூன்று வழிகள் உள்ளன. முதலாவது தகவல் மையம் அமைக்க சொந்த கட்டடம் கட்டுவது. இதற்கு ரூ.15 லட்சம் செலவாகும். ஐந்து சங்கங்கள் இதை ஏற்கெனவே செய்துவிட்டன. மற்றவை அரசு அல்லது தனியார் கட்டடங்களை 10 ஆண்டு காலத்துக்கு குத்தகைக்கு எடுப்பது என்றார் அவர்.

*குருகுலம் திட்டத்தின் முதல் கட்டமாக ரூ.**1.25** கோடியில் **3** பள்ளிகளில் **75** ஸ்மார்ட் வகுப்புகள் அமைக்கப்படும்.*

“ஸ்கூல்ஸ் அண்ட் ஸ்மைல்ஸ்”: மெட்ராஸ் ரோட்டரி சங்கம்

“ஸ்கூல்ஸ் அண்ட் ஸ்மைல்ஸ்” திட்டம் 2004 இல் தொடங்கப்பட்டது. 100 பள்ளிகளை மீட்டெடுப்பது தான் இத்திட்டம். இவற்றில் சிலவற்றை வில்ஃப் வில்கின்ஸன் உள்ளிட்ட முன்னாள் ரோட்டரி தலைவர்கள் தொடங்கி வைத்துள்ளனர். முன்னாள் மாவட்ட ஆளுநர் பெஞ்ச மின் செரியன் கூறுகையில், மெட்ராஸ் ரோட்டரி சங்கம் சர்வதேச நிதியுதவி திட்டத்தின் கீழ் இந்த பள்ளிகளில் இ-கற்றல் வசதியை ஏற்படுத்தியுள்ளனது. இந்த கற்றல் பாடமுறை சுவாரஸ்மாக இருப்பதால் குழந்தைகள் பள்ளிக்கு வர ஊக்குவிக்கப்படுகிறார்கள். மாணவர்களின் வருகையும் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. எனவே இந்த எழுத்தறிவுத் திட்டத்தை மேலும் பல ஆண்டுகளுக்குத் தொடர மெட்ராஸ் ரோட்டரி சங்கம் முடிவு செய்து ள்ளது. மேலும் மீட்கப்பட்ட நான்கு பள்ளிகள் ரோட்டரி தலைவர் ஜெனிஃபரால் தொடங்கிவைக்கப் பட்டன என்றார் அவர்.

45 பள்ளிகளில் மின் கற்றல் வசதி: சென்னை பிரசிடென்சி ரோட்டரி சங்கம்

சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள 45 பள்ளிகளில், சென்னை பிரசிடென்ஸி ரோட்டரி சங்கத்தால் செய்து கொடுக்கப்பட்டுள்ள, 55,000 டாலர் மதிப்புள்ள சர்வதேச மானிய உதவி திட்டமான மின்கற்றல்

RI தலைவர் ஜோன்ஸ், DG நந்தகுமார், PDG பாபு பேரம் மற்றும் RC மெட்ராஸ் பிரெசிடென்சி உறுப்பினர்களுடன்.

வசதியை ரோட்டரி தலைவர் ஜோன்ஸ் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 2,000 மாணவர்கள் பயன்பெறுவர். தொழில்நுட்ப வளர்ச்சியில் முன்னிலையில் உள்ள CTS நிறுவனத்தின் கார்ப்பொரோட் நிறுவன சமூக பொறுப்புணர்வுத் திட்ட நிதியிலிருந்து மின்கற்றலுக் கான வசதி செய்து தரப்பட்டுள்ளது.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

போராளிகளால் தாக்கப்பட்ட காவல்துறையினர்

ரோட்டரி செய்திக் குழு

வட மேற்குப் பாகிஸ்தானில் உள்ள டாங்க் மாவட்டத்தின் கொட் ஆஜாம் பகுதியில் இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து வழங்குவோரைப் பாதுகாத்துக் கொண்டிருந்த காவல்துறையினரைத் தடுப்பு மருந்து வழங்கலுக்கு எதிரான போராளிகள் சுட்டார்கள். தடுப்பு மருந்து வழங்குவோரை இவர்கள் தாக்கவில்லை.

உலகில் பாகிஸ்தானிலும் ஆஃப்கானிஸ்தானிலும் தான் இளம்பிள்ளைவாத நோய் உள்ளது. ஏப்ரல் 2022ல், 15 மாதங்களுக்குப் பிறகு பாகிஸ்தானில் ஒருவருக்கு இளம்பிள்ளைவாதம் வந்துள்ள தாகத் தெரிந்தது, அதன் பிறகு, மேலும் 13 பேருக்கு (அனைவரும் ஆஃப்கானிஸ்தான் எல்லையில் உள்ள வடக்கு வஜிரிஸ்தானைச் சேர்ந்தவர்கள்) இளம்பிள்ளைவாதம் இருப்பது அறிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பு மருந்தில் பன்றிக் கொழுப்பு இருப்பதாகவும், இஸ்லாமியர்களை மலடாக்க மேற்கு நாடுகளுடைய திட்டம்தான் தடுப்பு மருந்து வழங்கல் என்றும் நம்புகிற சிலர் பாகிஸ்தானில் உள்ளார்கள். இதனால் அங்கு பல இளம் பிள்ளை வாதத் தடுப்பு ஊழியர்களும் அவர்களுடைய பாதுகாவலர்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இன்னொரு செய்தி, 2003ல் ஐரோப்பா இளம்பிள்ளைவாதம் இல்லாத கண்டமாக அறிவிக்கப் பட்டிருந்தது. ஆனால், இந்த ஜூன் மாதம் லண்டன் கழிவு நீர் மாதிரிகளில் இளம்பிள்ளைவாத வைரஸ் கண்டறியப்பட்டது. இதையடுத்து, லண்டன் பெருநகர் பகுதியில் ஒன்று முதல் ஒன்பது வயதுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் தடுப்பு மருந்து வழங்குகிற அவசரத் திட்டம் தொடங்கப் பட்டுள்ளது. ■

Imagine
Impact tour

RI தலைவர் ஜோன்ஸை இந்தியா வரவேற்கிறது

புனேயில் PRIP சேகர் மேத்தாவுடன் RI தலைவர் ஜோன்ஸ் மற்றும் க்ரயாசிச்.

RI தலைவர் ஜோன்ஸ் (இடமிருந்து) DGs V R முத்து, S ராஜ்மோகன் நாயர், B இலங்குமரன், V V ப்ரமோத் நயனார் மற்றும் K பாபுமோன் ஆகியோருடன் கொச்சியில்.

வலதில்: RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் கொச்சியில் ஒரு பள்ளி மாணவிக்கு மிதிவண்டி அளிக்கிறார்.
கீழே: கேரள நடன கலைஞர்களுடன் RI தலைவர் ஜோன்ஸ் மற்றும் அவர் கணவர் நிக் க்ரயாசிச்.

RI இயக்குனர் A S வெங்கடேஷுடன்.

சென்னையில் ரோட்டராக்டர்களுடன் RI தலைவர் ஜோன்ஸ் மற்றும் க்ரயாசிச்.

கிரண் ஜெஹூரா

RI தலைவர் ஜோன்ஸ் மற்றும் க்ரயாசிச் தில்லியில் DGs பவன் அகர்வால் (3110), அஷோக் கண்டுர் (3011), Dr பல்வந்த் சிங் சிரானா (3054), Dr லலித் கன்னா (3012), தினேஷ் குமார் ஷர்மா (3100), Dr துஷ்யந்த் சௌதரி (3070), மற்றும் ஷஷாங்க் ரஸ்தோகி (3261) ஆகியோருடன்.

V முத்துகுமரன்

மேலே: RID A S வெங்கடேஷ், PRID P T பிரபாகர், நளினி பிரபாகர் மற்றும் DG N நந்தகுமார் ஆகியோருடன் RI தலைவர் ஜோன்ஸ்.

வலதில்: வாரணாசியில் கங்கை ஆற்றின் மேல் கப்பலில் செல்ல தயாராகும் RI தலைவர் ஜோன்ஸ் மற்றும் க்ரயாசிச். **உடன்:** கவிதா அகர்வால் PDG பிரமோத் குமார் மற்றும் DG அனில் அகர்வால் அவர்களும் உள்ளனர்.

RC வாரனாசி சென்ட்ரல் உறுப்பினர் சஞ்சய் குப்தா தலைவர் ஜோன்ஸ் மற்றும் க்ரயாசிச் அவர்களுக்கு ஒரு பாரம்பரிய பரிசு பொருள் அளிக்கிறார்.

RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி, RI தலைவர் ஜோன்ஸ், க்ரயாசிச் மற்றும் DG கண்டூர், தில்லியில் ரோட்டராக்டர்களுடன்.

கிரண் ஜெஹ்ரா



RI தலைவர் ஜோன்ஸ் மற்றும் க்ரயாசிச் வாரனாசியில் உள்ள காசி விஸ்வநாதர் கோவிலில்.

RIDE T N சுப்பிரமணியனுடன்.

மேலே: RI தலைவர் ஜோன்ஸ் PDGs கிருஷ்ணசாமி மற்றும் J B காம்தார் அவர்களுடன் சென்னையில்.

வலது: வினிதா வெங்கடேஷுடன் DGக்களின் மனைவியர் புனேவில் நடைப்பெற்ற லஷ்யா பயிலரங்கில்.

கீழே: இடமிருந்து PDG ப்ரஷாந்த் தேஷ்முக், PRID கமல் சங்வி, ஷிப்ரா மற்றும் RIDE அனிருதா ராய் சௌதரி மற்றும் TRF முன்னாள் அறங்காவலர் குலாம் வஹன்வதி. PDG சாம் படிபண்டலாவும் உள்ளார்.

சென்னையில் ஆனெட்களுடன்.

சென்னையில் சுமேதா நந்தகுமாரின் பிறந்த நாளை RI தலைவர் ஜோன்ஸ் மற்றும் (இடமிருந்து) RIDE சுப்பிரமணியன், க்ரயாசிச், DG நந்தகுமார், RIDs கோட்பாகி மற்றும் வெங்கடேஷ் ஆகியோர் கொண்டாடுகின்றனர்.

V முத்துகுமரன்

கிரண் ஜெஹரா

மேலே: *RI தலைவர் ஜோன்ஸ் மற்றும் RID வெங்கடேஷ்.*
கீழே: *தில்லியில் RI தலைவர் ஜோன்ஸ் மற்றும் க்ரயாசிச்.*

புகைப்படங்கள்: ரஷீதா பகத், ஜெய்ஸ்ரீ மற்றும் சிறப்பு ஏற்பாடு.

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

ADVERTORIAL

District 3110

Prachi & Pawan Agarwal
District Governor, RID 3110

AKS Announcement of DG Pawan Agarwal & First Lady Prachi Agarwal

Major Donors

PDG Devender Kr. Agarwal
ARRFC

PDG Sharat Chandra
DRFC

Major Donor Level 3

PDG Devendra Kr. Agarwal
& Mrs. Rekha Jindal
RC Kashipur

Major Donor Level 1

Rtn. Akhil Agarwal
& Mrs. Ekta Agarwal
RC Aligarh Pearl

Rtn. Mukta Singh
& Mr. Ravi Singh
RC Kashipur

Rtn. Pankaj Arora
& Mrs. Anjali Arora
RC Kashipur

Rtn. Taufeeq Ahmad
RC Kanpur

Rtn. Rajiv Mittal
& Mrs. (Dr.) Abha Mittal
RC Aligarh

Rtn. Jagdeesh Singh Bisht
& Mrs. Nisha Bisht
RC Rudrapur

Rtn. Sumit Varshney
& Mrs. Akanksha Varshney
RC Aligarh Friends

New Clubs

Rtn. Neerau Nimesh Agarwal
Chair, District Membership Committee



Highest net membership growth of 120 members in Zone 6

Do follow us: @Rotary3110

RI District 3110 in Action

Rtn. Raj Mehrotra
CDS (Admin)

Imagine Impact tour

ரோட்டரியில் உறுப்பினர்கள் ஈடுபாடு முக்கியம்

ஜெய்ஸ்ரீ

RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மற்றும் அவரது கணவர் DGN நிக் கிரயாசிச் மற்றும் RI இயக்குநர்கள் மகேஷ் கோட்பாகி, A S வெங்கடேஷ் ஆகியோர் ரோட்டரி மாவட்டங்கள் 3131, 3132, 3141, 3142, 3170 மற்றும் 3030 புணேயில் ஏற்பாடு செய்திருந்த இரண்டுநாள் நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

ஆறு மாவட்ட ஆளுநர்கள் பங்கேற்ற இந்த நிகழ்ச்சியில் உரை யாற்றிய ஜோன்ஸ், உறுப்பினர்களை தக்க வைத்தலின் அவசியத்தை வலியுறுத்தினார். கடந்த ஆண்டு தலைவர் சேகர் மேத்தா நம்மிடம், ஒவ்வொருவரும் ஒரு புதிய உறுப்பினரைக் கொண்டு வாருங்கள் என்று கேட்டுக் கொண்டார். கடந்த 6 ஆண்டுகளில் முதன் முறையாக நாம் உறுப்பினர் எண்ணிக்கையில் வளர்ச்சி அடைந்துள்ளோம். இப்போது நாம் உறுப்பினர்களை தக்கவைத்துக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. உறுப்பினர்கள் முன்பக்க கதவுகள் வழியாக உள்ளே வந்து பின்பக்க கதவு வழியாக வெளியேறிவிடுகிறார்கள். நாம் ஒரு தசாப்தத்துக்கு மேலாக 1.2 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்டுள்ளோம். நாம் 1 மில்லியன் உறுப்பினர்களை உள்ளே கொண்டுவந்தோம், அதே சமயத்தில் 1 மில்லியன் உறுப்பினர்களை இழந்துவிட்டோம். எனவே அந்த எண்ணிக்கையிலேயே நிற்கிறோம். ரோட்டரியை வளர்ப்பதில் நாம் நன்றாகச் செயல் படுகிறோம், ஆனால், உறுப்பினர் களை தக்கவைத்துக் கொள்வதிலும் அப்படிச் செயல்பட வேண்டும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆஸ்திரேலியாவில் தாம் சந்தித்த இன்டராக்டர் கூறிய வார்த்தைகளை அவர் மேற்கோள்காட்டினார். ஜெனிஃபர், உங்களுக்கு பொறுப்புள்ள குழந்தைகள் வேண்டும் என்றால் அவர்களிடம் பொறுப்புகளைக் கொடுக்க வேண்டும் என்று கூறினார். இப்போது அதையே நான் சொல்கிறேன். நீங்கள் பொறுப்புள்ள உறுப்பினர் களை விரும்பினால், அவர்களிடம் நீங்கள் பொறுப்புகளைக் கொடுக்க வேண்டும். மக்கள் நமது அமைப்பை விரும்பி ஏற்றுக்கொண்டால் அவர்கள் வெளியில் செல்வது பற்றி சிந்திக்கமாட்டார்கள் என்றார்.

நம்மால் தான் உலகத்தை மாற்றியமைக்க முடியும், ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த முடியும். நமது சமூகங்களின் தேவைகளை மதிப்பீடு செய்து அவர்களை பலப்படுத்துவோம் என்றார்.

2007–08ம் ஆண்டில் மாவட்ட ஆளுநராக இருந்த போது அமெரிக்க சுங்க அதிகாரியுடன் நடந்த உரையாடலை குறிப்பிட்டார் ஜோன்ஸ். நான் கனடாவில், ஒன்டோரியோவில் வசித்து வந்த போது, எனது மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த அமெரிக்காவில் உள்ள ரோட்டரி சங்கங்களுக்கு பலமுறை எல்லையைக் கடந்து செல்ல வேண்டியிருந்து. அப்படி ஒரு நாள் செல்லும் போது, சுங்கத் துறை அதிகாரி ஒருவர் என்னிடம், குடியுரிமை உள்ளிட்ட வழக்கமான விவரங்களைக் கேட்டார். நான் அவரிடம், ரோட்டரி கூட்டங் களுக்குச் செல்வதாகக் கூறினேன். அப்போது அவர் ரோட்டரி என்றால் என்ன என்று கேட்டார். நான் அவரிடம், போலியோ, எய்ட்ஸ், மலேரியா மற்றும் காசநோய் ஒழிப்புப் பணிகள் உள்ளிட்ட ரோட்டரியின் பல்வேறு பணிகளை விவரித்தேன். உடனே அவர், உலகில் பலருக்கு இதற்கெல்லாம் நேரம் இருக்கிறது என்று சொல்ல வருகிறீர்களா? என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம், அப்படியில்லை. உலகில் பலருக்கு இவற்றைச் செய்ய நேரம் போதவில்லை என்றேன். அவர், கண்கலங்கியவாறு, நீங்கள் அரிய பணிகளைச் செய்து வருகிறீர்கள் என்றார். எனவே உங்கள் ஒவ்வொருவருக்கும், நீங்கள் செய்யும் பணிக்காக நன்றி கூறுகிறேன். உங்களது பெருந்தன்மைக்கு நன்றி என்றார் ஜோன்ஸ்.

RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ்

மோனிகா மற்றும் DG *ஆனந்த் ஜுன்ஜுனுவாலா* (3030), *மாலினி மற்றும்* DG *சந்திப் அகர்வல்லா* (3141), *சந்த்யா மற்றும்* DG *வெங்கடேஷ் தேஷ்பாண்டே* (3170), DG *அனில் பர்மர்* (3131) *மற்றும்* DG *ருக்மேஷ் ஜகோட்டியா* (3132).

சங்கத் தலைவர்களுடன் உரையாடல்

முன்னதாக RI தலைவர் ஆறு மாவட்டத் தலைவர்களை சந்தித்து உரையாடினார். தாம் சங்கத்தின் தலைவராக இருந்தபோது அமெரிக்காவில் உலக வர்த்தக மையம் அமைந்துள்ள இரட்டை கோபுரம் (9/11) குண்டு வீசி தகர்க்கப் பட்டதை ஜெனிஃபர் நினைவு கூர்ந்தார். அப்போது காலை 9 மணி. நான் தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டிருந்தேன். முதல் விமானம் முதல் கோபுரத்தின் மீது மோதியது. நான் நிலைகுலைந்து போனேன். மன்ஹட்டனில் வசித்து வந்த நான், இரட்டை கோபுரத்தின் உச்சிக்குச் சென்று சூரிய அஸ்தமனத்தை பார்வையிடுவதுண்டு. அடுத்த சில நிமிடங்களில் இரண்டாவது விமானம் கோபுரத்தின் மீது மோதியது. வழக்கம்போல அன்று மதிய உணவுடன் கூட்டம் நடத்த திட்ட மிட்டிருந்தோம். நாங்கள் அனைவரும் ஒன்றுகூடி எங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டதுடன் எங்கள் ஒற்றுமையையும் வெளிப் படுத்தினோம். அமெரிக்க கொடி யுடன் அவர்களின் தேசிய கீதத்தை கண்களில் நீர்மல்க பாடினோம். நமது அமைப்புக்கு எல்லையில்லை. யாருக்கு எங்கு என்ன நடக்கிறதோ அது நமக்கும் நடக்கும் என்பதை உணர்ந்து கொண்டோம். அது தான் எங்கள் அமைப்புக்கு கிடைத்த பரிசு. நாம் மதம், கலாசார ரீதியில் வேறுபட்டிருந்தாலும் இது நம்மை ஒருங்கிணைக்கிறது. நல்லிணக்கத்தை வளர்க்கிறது. உலகின் மிகச் சிறந்ததை நாம் பிரதி நிதித்துவப்படுத்துகிறோம்.

கோவிட் தொற்றுக்காலம் பற்றி ஜோன்ஸ் குறிப்பிடும்போது, உலகமே ஸ்தம்பித்து நின்றபோது நாம் எழுந்து நின்றோம். அரசு உள்பட மற்றவர்கள் செயல்பட முடியாத நிலையில் நாம் சமூகத்தினரை சென்றடைந்து தேவைப்பட்டவர்களுக்கு PPE பாதுகாப்பு உடை, ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் உள்ள உபகரணங் களை வழங்கினோம். அதுமட்டுமல்ல, மெய்நிகர் வழியில் நாம் தொடர்பில் இருந்தோம். ஆனாலும் நேருக்கு நேர் சந்திக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சியை யாராலும் தட்டிப்பறிக்க முடியாது.

அனைத்து உறுப்பினர்களையும் ஈர்க்கும் வகையில் உங்களால் செயல்பட முடியுமா என்று கேட்டு சங்கத் தலைவர்களுக்கு ஜெனிஃபர் சவால் விட்டார். எனது கணவர் நிக் உறுப்பினராக உள்ள சங்கம் மாதத்தில் இரண்டுமுறை கூடுகிறது. அவர்கள் ஒருவாரம் சேவைத் திட்டங்கள் பற்றியும் அடுத்த வாரம் சமூகக் கூட்டத்தையும் நடத்துகிறார்கள். இந்த வகையில் அனைத்து உறுப்பினர்களும் மகிழ்ச்சியாகவும் ஈடுபாட்டுடனும் உள்ளனர். நாம் அனைத்து உறுப்பினர்களையும் அர்த்தமுள்ள வகையில் முழுஈடு பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

PRIP சேகர் மேத்தாவின் மகளிர் மேம்பாட்டில் கவனம் என்ற கோட்பாடு, ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி குறிக்கோளுடன் ஒத்துப்போகிறது. உலகெங்கிலும் உள்ள ரோட்டரி சங்கங்கள் பெண்கள் மேம்பாட்டுக் கான முன்முயற்சிகளில் ஈடுபட்டு வருவதைப் பார்க்கிறோம். அது இந்த ஆண்டு மற்றும் அடுத்த ஆண்டு கோர்டான் (மெக்இனாலி) தலைமையின் கீழும் தொடரும் என்றார்.

DEI பற்றி ஜோன்ஸ் குறிப்பிடு கையில், நாம் அனைத்து பாலினம், கலாசாரம், இனம் மற்றும் பாலியல் நோக்கு நிலையில் பார்க்க வேண்டும் என்றார். இதேபோல ஒரு சங்கத்தில் பார்வையற்ற ஒருவர் இருந்தால் அவருக்கு உதவி தேவைப்படும். இதேபோல ஒருவருக்கு படிகள் ஏறுவதில் சிரமங்கள் இருக்கலாம். எனவே பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் உள்ளடக்கம் பற்றி பேசும்போது நாம் இதுபோன்ற அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

AKS உறுப்பினர்களை ஜோன்ஸ் பாராட்டினார். கோட்பாகி மற்றும் வெங்கடேஷ் இருவரும் திட்டங்களைச் சிறப்பாக செயல் படுத்தியதற்காகவும், உறுப்பினர் சேர்க்கை மற்றும் TRF நிதிப் பங்களிப்புக்காக மாவட்ட ஆளுநர் களுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ

Imagine Impact tour

உங்களின் வெற்றிக் கதைகளை உலகிற்கு சொல்லுங்கள்: ஜோன்ஸ்

V முத்துகுமரன்



RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் ஹெப்பாடிட்டிஸ் தடுப்பூசி திட்டத்தை (இடமிருந்து) *DG N நந்தகுமார், CLF நிறுவனர் Dr R P ஷண்முகம், RI இயக்குனர் A S வெங்கடேஷ் மற்றும் CLF அறங்காவலர் Dr S விவேகானந்தன் முன்னிலையில் துவக்கி வைக்கிறார்.*

உலகின் இந்தப் பகுதியில் ரோட்டரி செய்துவரும் நற்பணிகளை தாக்கத்தை ஏற்படுத்தும் கதைகளை பரந்திருக்கும் பார்வையாளர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். ரோட்டரி நமது இரத்தத்தில் ஊறியது. நாம் செய்யும் சேவைகளையும் நமது பங்களிப்பையும் உலகிற்கு தெரியப் படுத்த வேண்டும்' என்று ரோட்டரி மாவட்டங்கள் 2981, 2982, 3000, 3231, மற்றும் 3232 சார்பில் சென்னையில் நடைபெற்ற சந்திப்பின்போது வலியுறுத்தினார் ரோட்டரித் தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ்.

மருத்துவம், மகளிர் மேம்பாடு, சுற்றுச்சூழல் தொடர்பான ஐந்து சேவைத் திட்டங்களையும் அவர் தொடங்கிவைத்தார். காரைக்காலில் உள்ள விநாயகா மிஷன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.70 லட்சம் மதிப்பிலான நடமாடும் மருத்துவ சேவை வாகனத்தை RID 2981 நன்கொடையாக வழங்கியது.

குறைத்தல், மறுபயன்பாடு மறுசுழற்சி என்ற மூன்றையும் வலியுறுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தும் பேரணியை ரோட்டரி தலைவர் கொடியசைத்து தொடங்கிவைத்தார். இதற்கு RID 2982க்கு உட்பட்ட கிருஷ்ணகிரி, சங்ககிரி, சேலம் விங்க்ஸ் மற்றும் ஒசூர் ரோட்டரி சங்கங்கள் கூட்டாக ஏற்பாடு செய்திருந்தன.

சென்னை ஐ.டி. சிட்டி மற்றும் சென்னை டவர்ஸ் ரோட்டரி சங்கங்கள் இணைந்து 50 மாற்றுத் திறனாளி பெண்களுக்கு ரூ.25 லட்சம் மதிப்பில் க்ரைண்டர்களை வழங்கினர். மகரந்த சேர்க்கை திட்டத்தின் கீழ், ரோட்டரி மாவட்டம் 3232 சார்பில் ரூ.15 லட்சம் செலவில் 200 தேனீக்கள் விடுதி அமைக்கப்படும். இதன் மூலம் பூக்களில் மகரந்தச் சேர்க்கைக்கு தேனிக்கள் ஈர்க்கப்படும். மேலும் மாவட்டம் சார்பில் சென்னையை சுற்றி ரூ.1.75 கோடி மதிப்பில் 100 காற்றின் தரத்தை கணக்கிடும் கருவிகள் நிறுவப்படும் என்றார் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழு தலைவர் S M பாலசுப்பிரமணியம். நான்கு மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவிகள் மூலம் சென்னையில் உள்ள 14,000 பெண்களுக்கு பரிசோதனை நடத்தப்படும். ரூ.40 லட்சம் மதிப்பிலான இத்திட்டத்தை சர்வதேச மானிய உதவியுடன் மெட்ராஸ் சென்னபட்டினம் ரோட்டரி சங்கம், ஒன்டோரியோ, (RID 6400) கட்டராகி கிங்ஸ்டன் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து செயல்படுத்துகிறது.

ரோட்டரியில் பெண்ணாக இருப்பது நன்மையா அல்லது பாதகமா? என்று அவரிடம் அடுத்த கேள்வி எழுப்பப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் RI தலைவர் பதவிக்கான தேர்வில், 17 உறுப்பினர்கள் கொண்ட தேர்வுக் குழுவின் கேள்விகளை கையாண்ட விதத்தை அவர் நினைவுகூர்ந்தார். பெரும்பாலானவர்கள் பாலினப்

பிரச்னையை எழுப்பாமல், தகுதி பற்றியே கேள்வி எழுப்பியதாக ஜோன்ஸ் கூறினார். ரோட்டரி இந்தியாவில் உங்களுக்கு பிடிக்காத விஷயம் என்ன? என்ற வெங்கடேஷின் மற்றொரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், தேர்தலின் போது ரோட்டேரியன் களிடம் இருக்கும் முன்விரோதம் எனக்கு பிடிக்காதது. நேர்மையான உரையாடல் தான் இதற்கு தீர்வு. அனைத்து சர்ச்சைக்குரிய பிரச்னைகளுக்கும் நான்கு வழி பரிசோதனையை பின்பற்றினால் தீர்வு கிடைக்கும் என்றார்.

PDGs J ஸ்ரீதர், S முத்து பழனியப்பன் (RID 3232) பதவிக் காலத்தில் மகத்தான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதாக பாராட்டினார் வெங்கடேஷ். அவர்கள் பதவிக் காலத்தில் கடந்த ஆண்டு சென்னை மருத்துவமனைகளில் 134 டயாலிஸிஸ் மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதற்கும் முன்னதாக நகரம் முழுவதும் 100 கண் பரிசோனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. மற்றொரு RI இயக்குநரான Dr மகேஷ் கோட்பாகி, ஐந்து மாவட்டங்களும் சேவைத் திட்டங்களை சிறப்பாக செயல் படுத்தியற்காக பாராட்டினார்.

PDGs N நந்தகுமார் (RID 3232), J K N பழனி (3231), V செல்வநாதன் (2981), P சரவணன் (2982) மற்றும் I ஜெரால்டு (3000) ஆகியோர் ரோட்டரித் தலைவருக்கு பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்தனர்.

ஹெபடைடிஸ் தடுப்பு மருந்து

“ஒரு மில்லியன் ஹெபடைடிஸ் தடுப்பு மருந்து வழங்கல்” நிகழ்ச்சி யைத் தொடங்கிவைத்த RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், ‘எல்லாரும் வைரல் ஹெபடைடிஸ் பரிசோதனை செய்துகொள்ளவேண்டும்.’ என்றார். இந்தத் தடுப்பு மருந்து வழங்கலை RID 3232 மற்றும் சென்னை கல்லீரல் அறக்கட்டளை (CLF) இணைந்து நடத்துகின்றன.

CLF நிறுவனர் டாக்டர் R P சண்முகம் “10ல் 9 பேருக்கு வைரல் ஹெபடைடிஸ்” பற்றித் தெரிந்திருப்பதில்லை. இந்த வைரஸ் 25 ஆண்டுகளுக்குமேல் நோயாளிக்குத் தெரியாமல் அவருடைய கல்லீரலில் அமர்ந்திருக்கிறது. அதற்குள் 70% கல்லீரல் சேதமடைந்துவிடுகிறது, என்றார்.

பெண் ரோட்டேரியன்களுடன் சந்திப்பு

மாவட்டத்தைச் சேர்ந்த பெண் ரோட்டேரியன்கள் “ஷீரோஸ்” (Sheroes) என்ற தலைப்பில் பிரத்யேக அமர்வில் ஜோன்ஸை சந்தித்தனர். ளஅடுத்த ஐந்து ஆண்டுகளில் 10 லட்சம் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை நடத்தும் “சக்தி” திட்டத்தை தொடங்கிவைத்த ஜோன்ஸ், மார்பக புற்றுநோயிலிருந்து மீண்ட தமது அதிர்ச்சிகரமான அனுபவத்தை நினைவுகூர்ந்தார். 8 முறை கீமோ தெரபி சிகிச்சை மற்றும் 21 முறை கதிர்வீச்சு சிகிச்சைக்குப் பிறகு புற்று நோயிலிருந்து மீண்டு புதிய வாழ்க்கையைத் தொடங்கினேன் என்று அவர் குறிப்பிட்டார். மார்பக புற்றுநோய் இருப்பதை முன்கூட்டியே பரிசோதனை மூலம் அறிந்து கொண்டால், அதிலிருந்து பூரண குணமடைய முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

250 பெண்களுக்கு கார் ஓட்டும் பயிற்சி அளிப்பதற்காக துரை அறக்கட்டளையுடன் இணைந்து “வாஹினி” திட்டம் தொடங்கப் பட்டது. “சுந்தரி” திட்டத்தின் கீழ் அழகுக்கலை பயிற்சி பெற 100 பெண்கள் பதிவு செய்து கொண்டுள்ளனர். நேச்சுரல்ஸ் நிறுவனத்தின் கூட்டு முயற்சி மூலம் இவை செயல்படுத்தப்படும். இனி அவர்கள் சுயமாகவும் தொழில் செய்யலாம் அல்லது பியூட்டி பார்லரிலும் சேர்ந்து பணிபுரியலாம். பயிற்சி பெறுபவர்களில் 20 பேர் பேச்சு மற்றும் செவித்திறன் குறைபாடுகள் உள்ளவர்கள் என்று தெரிவித்தார் திட்ட இயக்குநர் சாரதா சுந்தரம். இவர் மெட்ராஸ் சென்ட்ரல் ஆதித்யா ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவர்.

மாவட்டத்தில் 26 சதவீதம் பேர், அதாவது 1,500 பேர் பெண் உறுப்பினர்கள். இந்த ஆண்டு இறுதிக்குள் கூடுதலாக 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும், ஐந்து அனைத்து பெண்கள் சங்கத்தை ஏற்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம் என்று DRFC B தாட்சாயணி தெரிவித்தார். உலகில் TRF நிதிப் பங்களிப்பில் மாவட்டம் மூன்றாவது இடத்தில் உள்ளது. நடப்பு ஆண்டில் $2.15 மில்லியன் நிதிப் பங்களிப்பு செய்யவும் உறுதிபூண்டுள்ளது.

இடமிருந்து: DGs J K N *பழனி,* V *செல்வநாதன்,* RI *தலைவர் ஜோன்ஸ்,* DGs *நந்தகுமார்,* P *சரவணன் மற்றும்* I *ஜெரால்டு.*

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

Imagine
Impact tour

நம் கதையின் மூலம் உலகை மாற்றலாம்

ஜெய்ஸ்ரீ

“நான் விரும்பும் விஷயங்களில் ஒன்று கதை சொல்லுதல். நாம் ஒரு கதையை சொல்லும் போது அது நமது அமைப்பை எப்படி பாதிக்கிறது என்பதை என்னால் உணர முடிகிறது” என்றார் ரோட்டரி தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ். இந்தியாவில் தனது “கற்பனையின் தாக்கம்” சுற்றுப் பயணத்தின் போது கொச்சியில் ரோட்டேரியன்களிடம் பேசும்போது அவர் இதைத் தெரிவித்தார். இது தொடர்பான மூன்றுநாள் நிகழ்ச்சிக்கு தமிழகம் மற்றும் கேரளத்தைச் சேர்ந்த ரோட்டரி மாவட்டங்கள் 3201, 3203, 3204, 3211 மற்றும் 3212 ஆகியவை ஏற்பாடு செய்திருந்தன.

நாம் அங்கீகாரத்துக்காகவும், பாராட்டுதலுக்காகவும் நமது கதைகளைச் சொல்லுங்கள் என்று கூறவில்லை. ஆனால், நமது கதைகளைக் கேட்பதன் மூலம் மேலும் சிலர் நமது அமைப்பில் சேர வழி பிறக்கும் என்றார்.



RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மற்றும் அவர் கணவர் நிக் கிரயாசிச் கொச்சியில் கேரள பாணி சடங்கு ஒன்றை செய்கின்றனர். உடன் PDG மாதவ் சந்திரன் உள்ளார்.

திறம்பட கதை சொல்வது தொடர்பாக இரண்டு சம்பவங்களை அவர் குறிப்பிட்டார். முதலாவதாக, நான், கணவரும் DGNனுமான நிக் கிரயாசிச் (அவர் ஒரு டாக்டர்) உடன் உள்ளூர் மக்களுக்கு இலவச மருத்துவ ஆலோசனை வழங்குவதற்காக ஒரு தீவுக்குச் சென்றோம். அந்த சமயத்தில் இரண்டு இளைஞர்கள் வந்திருந்தனர். அவர்கள் இருவருக்கும் ஒரே மாதிரியான நோய் அறிகுறி. அவர்கள் இருவரும் வயிற்றில் வலி இருப்பது பற்றி கூறினர். நிக் அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டார். எப்போது வயிற்றில் வலி இருக்கிறது. எப்போது இல்லை என்று கேட்டார். வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை சாப்பிடும் போது மட்டும் வலி இல்லை என்றனர். அவர்களுக்கு நோயறிதல் தேவையில்லை. அவர்களுக்குத் தேவை உணவு தான். எனவே நாங்கள் வீடு திரும்பியவுடன், எங்களின் கதைகளை ரோட்டேரி யன்கள் மற்றும் சிலரிடம் பகிர்ந்து கொண்டோம். அவர்களும் எங்களுடன் இணைந்து கொண்டனர். இப்போது அந்த கிராமத்தில் உள்ள குடும்பத்தினருக்கும், குழந்தைகளும் உணவு கிடைக்கிறது. எங்களின் உணவுத் திட்டத்திற்கு நன்றி. இதுதான் வார்த்தைகளின் சக்தி. நம்முடன் மேலும் சில மக்கள் சேர்ந்து கொண்டால், நமது சமூக மற்றும் உலகின் பிரச்னைகளுக்கு தீர்வுகாண முடியும்.

அடுத்த சம்பவம் கோல்ஃப் தினம் பற்றியது. அன்றைய தினம் மட்டும் போலியோ நிதியாக $5.25 மில்லியன் நிதி திரட்டப்பட்டது. 2016ம் ஆண்டு ரோட்டரி மாநாட்டின்போது ஜோன்ஸ், கிரயாசிச் இருவரும் ஓர் அறையில் ஜாக் நிக்கோலாஸ் என்பவரை நேர்காணல் செய்ய தயாராகிக் கொண்டிருந்தனர். நிக்கோலாஸ் சிறந்த கோல்ஃப் வீரர்

ரூ.100 கோடியில் சேவைத் திட்டங்கள்

இந்த ஆண்டு 3201, 3203, 3204, 3211 மற்றும் 3212 ரோட்டரி மாவட்டங்கள் தங்கள் பகுதியில் செயல்படுத்தவுள்ள ரூ.100 மதிப்பிலான சேவைத் திட்டங்களை ரோட்டரி தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் தொடங்கிவைத்தார். ரூ.30 கோடியில் 500 வீடுகள் கட்டுதல், ரூ.10 கோடியில் ரோட்டரி மாதிரிச் சாலைகள், ரூ.2 கோடியில் குழந்தைகள் மருத்துவ பராமரிப்பு சேவை, ரூ.2 கோடியில் சிவில் சர்வீஸ் மற்றும் மருத்துவ மாணவர்களுக்கான பயிற்சி, ஏழை மக்களின் திருமண உதவிக்கு ரூ.10 கோடி, செல்லப் பிராணிகளுக்கு தகன மையம் அமைக்க ரூ.60 லட்சம், மியாவாகி காடுகள் உருவாக்க ரூ.1 கோடி, மூட்டு மாற்று அறுவைச்சிகிச்சைக்காக ரூ.2 கோடி, இதயம் மற்றும் கண் அறுவைச்சிகிச்சை திட்டத்துக்காக ரூ.60 லட்சம், ரோட்டரி-போலீஸ் திட்டத்துக்கு ரூ.10 லட்சம், டயாலிஸிஸ் மையம் அமைக்க ரூ.80 லட்சம், 200 குழந்தைகளுக்கு இதய அறுவைசிகிச்சை நடத்தும் திட்டத்துக்கு ரூ.1 கோடி, 1,000 சிறுமி களுக்கு சைக்கிள் வழங்க ரூ.80 லட்சம், நடமாடும் இதயநோய் சிகிச்சை வசதிக்கு ரூ.1.1 கோடி மற்றும் ரூ.60 கோடியில் புற்றுநோய் சிகிச்சை மருத்துவமனை திட்டம் ஆகியவை இதில் அடங்கும்.

ரூ.55 மதிப்பிலான அல்கோ ஸ்கேன் வாகனத்தையும் ஜோன்ஸ் தொடங்கி வைத்தார். ஒருவர் குடிபோதையில் இருக்கிறாரா? அல்லது போதைப் பொருள் பயன்படுத்தி இருக்கிறாரா? என்பதை அவரது உமிழ்நீர் மூலம் கண்டு பிடிக்கும் கருவி அந்த வாகனத்தில் பொருத்தப்பட்டிருக்கும். ரோட்டரி மாவட்டம் 3211, ரோட்டரி-போலீஸ் கூட்டு முயற்சியுடன் இதைச் செயல்படுத்தும்.

ஐந்து மாவட்டங்கள் சேர்ந்து 1,000 சிறுமிகளுக்கு சைக்கிள் வழங்கும் "டிரிங் ஸ்மைல்" திட்டத்தையும் ஜோன்ஸ் தொடங்கிவைத்தார். சைக்கிள் பெறுவதற்காக குழுமியிருந்து 100 சிறுமிகளிடையே அவர் பேசினார். கல்வி கற்கும் சிறுமிகள் தான் அதிகாரம் பெற்ற சிறுமிகளாக முடியும் என்று குறிப்பிட்ட அவர், இந்த சைக்கிள் உங்களை பள்ளிக்கு அழைத்துச் செல்லும். அதன் மூலம் நீங்கள் எதிர்காலத்துக்கு கவனம் செலுத்த முடியும் என்றார்.

ரோட்டரி சங்கங்கள் ரூ.30 கோடி மதிப்பிலான அதிநவீன மருத்துவ வசதிகளை செய்துகொடுத்துள்ள எர்ணாகுளம் அரசு மருத்துவமனையை ரோட்டரி தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் பார்வையிட்டார். மருத்துவமனையின் நோயாளிகள் காத்திருப்பு அறையை இந்த ஆண்டு புதுப்பிக்கவும் ரோட்டரி சங்கங்கள் திட்டமிட்டுள்ளன.■

மட்டுமல்ல, போலியோ நோயால் தாக்கப்பட்டு உயிர் பிழைத்தவர். நான்கு கோல்ஃப் வீரர்களுடன் கோல்ஃப் தின விளையாட்டு நடத்தி போலியோவுக்கு 1 மில்லியன் டாலர் நிதி திரட்ட வேண்டும் என்ற தனது கனவை நிக்கோலாஸிடம் கிரயாசிச் தெரிவித்தார். உடனே அவர், நீங்கள் ஏற்பாடு செய்தால் நான் முழுநாளையும் அங்கு செலவிடத்தயார் என்று கிரயாசிச்சிடம் கூறினார். அன்று கலந்துகொண்டது நான்கு கோல்ஃப் வீரர்கள் அல்ல, திரட்டியது 1 மில்லியன் டாலரும் அல்ல. மொத்தம் 8 கோல்ஃப் வீரர்கள் பங்கேற்றனர். ஒரே நாளில் $5.25 மில்லியன் நிதி திரட்டப் பட்டது. பார்வையா ளர்களில் ஒருவராக RID 3132ச் சேர்ந்த முன்னாள் மாவட்ட ஆளுநர் பராக் சேத் இருப்பதை அறிந்து கொண்ட ஜோன்ஸ், அந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற கோல்ஃப் வீரர்களில் பராக் சேத்தும் ஒருவர் என்று அங்கீகரித்தார்.

நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்த ஐந்து மாவட்ட ஆளுநர்களையும் மேடைக்கு அழைத்து, உங்கள் ஆண்டை நீங்கள் எப்படி கற்பனை செய்துள்ளீர்கள் என கேட்டார். இந்த ஆண்டு இறுதிக்குள் தமது மாவட்டத்தில் ரூ.60 கோடியில் நிறுவப்பட்டு வரும் புற்றுநோய் சிகிச்சை மருத்துவமனை பணிகளை பூர்த்தி செய்யவேண்டும் என்று கற்பனை செய்வதாக RID 3204 DG இளங்குமரன் தெரிவித்தார். DG பிரமோத் நாயனார் (3203) போலியோவை முழுமையாக ஒழிப்பதை காண்கிறார். இந்தியாவில் ரோட்டரி உறுப்பினர்கள் எண்ணிக்கையில் அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் TRFக்கு அதிக நிதிப்பங்களிப்புச் செய்ய வேண்டும். அதிக அளவில் சர்வதேச மானிய உதவி பெற வேண்டும் என்பது DG ராஜ்மோகன் நாயர் (3201) கண்ணோட்டம். DG V R முத்து (3212) பெரு நன்கொடையாளர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். மேலும் RYLA மூலம் இளைஞர்களை தொழில் முனை வோராக மேம்படுத்த வேண்டும் என்று கற்பனை செய்கிறார்.

இந்த தலைவர்களின் கனவெல்லாம் ஒன்றல்ல. ரோட்டரி என்பது ஒருவழிப்பாதை அல்ல, அதற்கு பலவழிகள் உள்ளன. இவற்றின் மூலம் நாம் சமூகத்தில் மாற்றத்தை கொண்டுவர முடியும் என்றார் ஜோன்ஸ்.

RI இயக்குநர் A S வெங்கடேஷ் பேசுகையில், ரோட்டரி தலைவரின் ஈடுபாடு மிகுந்த பேச்சை கேட்பதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாகும். இதுவரை எனது பாட்டிதான் உலகின் சிறந்த கதை சொல்லி என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், ரோட்டரி தலைவர் ஜோன்ஸ், அவரையும் வெற்றி கொண்டு விட்டார். ஜோன்ஸின் நிஜவாழ்க்கை கதைகள், நாம் அதிகம் செய்ய வேண்டும் எண்ணத்தை ஏற்படுத்துவதுடன், ரோட்டரியில் சேராதவர்களையும் சேரவைக்கும். தமிழ்நாடு மற்றும் கேரளத்தை உள்ளடக்கிய மண்டலம் 5 இந்தியாவின் மக்கள் தொகையில் 7 சதவீதத்தைக் கொண்டுள்ளது. ஆனால், இது இந்தியாவில் ரோட்டரியின் மக்கள் தொகையில் 34 சதவீதமாகும். 52,000 ரோட்டேரியன்களுடன் அநேகமாக இந்த மண்டலம்தான் ரோட்டரி இன்டர்நேஷனலில் மிகப்பெரியதாக இருக்கும் என்றார்.

உறுப்பினர் சேர்க்கை ஆகட்டும்,

இடமிருந்து: PDG மாதவ் சந்திரன், DG V V ப்ரமோத் நயனார், S ராஜ்மோகன் நாயர், RI இயக்குனர் A S வெங்கடேஷ், RI தலைவர் ஜோன்ஸ், அவர் கணவர் கிராயசிச், RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி, DGs B இளங்குமரன், S பாபுமோன் மற்றும் V R முத்து.

TRF பங்களிப்பாக இருக்கட்டும் அல்லது சேவைத்திட்டங்களாக இருக்கட்டும், அதைவிட முக்கிய மானது அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாடாக இருக்கட்டும் நாம் நமது எதிர்பார்ப்புகளை விட அதிகம் செய்கிறோம். ஒரு நல்ல காரியத்துக்காக நீங்கள் உங்கள் நேரத்தை செலவிடுவதைவிட சிறந்த முதலீடு எதுவும் இல்லை என்றார்.

RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி, RI தலைவர் ஜெனிஃபரை வரவேற்க பிரம்மாண்டமான அளவில் ஏற்பாடு செய்தமைக்காக அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்ட ஐந்து மாவட்ட ஆளுநர்களையும் பாராட்டினார்.

DG முத்து AKSக்கு தனது பங்களிப்பாக ரூ.25 லட்சத்திற்கான காசோலையை ஜோன்ஸிடம் வழங்கினார். நிகழ்ச்சியின் செயலர் DGN சுதி ஜப்பார் நன்றி கூறினார்.

படங்கள்: ஜெய்ஸ்ரீ

வனங்களை அனுபவியுங்கள்

E V A ரெமிஜன்-டோபா

ஆஸ்திரேலியாவில் கோலாக் கரடி முதல் கங்காருவரை மிகச் சிறந்த வன விலங்குகள் நிறைந்துள்ளன. மெல்பர்னும் அப்படிதான். இங்குள்ள நகர்ப்புறப் பகுதியின் வனப்பக்கத்தில் உள்ளூர் அல்லாத சிவப்பு நரிகளும் பெங்குவின்களும் உண்டு. 2023 ரோட்டரி பன்னாட்டு மாநாட்டுக்காக மே 27 முதல் 31வரை நீங்கள் இங்கு வரும்போது, நிகழ்ச்சிகளுக்கு நடுவில் பூங்காக்களின் வழியாக நடந்து சென்று இயற்கையை மேலும் நெருங்கிப் புத்துணர்வு பெறுங்கள்.

1846லிருந்து இந்த நகரத்தின் இதயத்தில் உள்ள சோலை, Royal Botanic Gardens Victoriaவின் ஒரு பகுதியாகிய, 94 ஏக்கர் பரப்பள வுள்ள Melbourne Gardens யர்ரா ஆற்றின் தெற்குக் கரையில், இந்த மாநாடு நடைபெறும் இரண்டு இடங்களுக்கு நடுவில் வசதியாக அமைந்துள்ளது, அமைதியான ஏரிகளைச் சுற்றி நடங்கள்.

காமெல்லியாக்கள், மழைக்காட்டுச் செடிகள், கள்ளி, சதைப்பற்றுள்ளவை, ரோஜாக்கள் உள்ளிட்ட 8,500க்கும் மேற்பட்ட செடி வகைகளை ஆராயுங்கள். மெல்போர்னில் மஞ்சள் கொண்டைக் கிளி உள்படப் பல்வேறு பறவை வகைகள் உள்ளன.

சுமார் ஓர் அடி உயரத்துக்கு வளரும் சிறு பெங்குவின்கள் (நீல அல்லது தேவதைப் பெங்குவின்கள்) பெங்குவின் இனத்தில் மிகச் சிறியவையாகும். அருகிலுள்ள St Kilda Pierல் நாம் இவற்றைப் பார்க்கலாம். ஆனால், அந்த இடம் இப்போது கட்டுமானப் பணியில் உள்ளது. அதனால், தெற்குத் திசையில் இரண்டு மணிநேரம் பயணம் செய்து Phillip Islandல் நீங்கள் அவற்றைப் பார்க்கலாம்.

நீங்கள் இந்த நகரத்திலிருந்து சிறிது தொலைவு வண்டியில் அல்லது ரயிலில் சென்றால் Dandenong Ranges National Parkஐக் காணலாம், மழைக்காட்டில் நடக்கலாம், Olinda Fallsக்கு நடந்து செல்லலாம், அல்லது Kokoda Track Memorial Walk என்று அறியப்படும் 1000 படிகளில் ஏறலாம். இந்தப் பூங்காவின் எரிமலைகளில் மலைச் சாம்பல், உலகின் மிக உயரமான பூக்கும் மரம் ஆகியவை உள்ளன, இங்கு வாலாபிகள், யாழ் பறவைகள், வாம்பேட்கள் உள்ளிட்ட விலங்குகள், பறவைகளையும் காணலாம்.

Phillip Islandல் ஒரு பெங்குவின் பறவை.

மேலும் அறிய, பதிவு செய்ய: convention.rotary.org.

நிஜ வாழ்க்கையில் அமெரிக்க நாடகம்

ராஜேந்திர சாபூ

கோவிட் தொற்றுக் காலத்தில் ஏறக்குறைய இரண்டரை வருடங்கள் வீட்டிலேயே அடைந்திருந்த நானும் உஷாவும் வெளிநாடு செல்ல தயாரானோம். எங்கள் குழந்தைகள் யாஷோ மற்றும் அனு எங்களை நன்றாகப் பார்த்துக் கொண்டதால் கோவிட் தொற்றிலிருந்து தப்பித்தோம். உடல் நலம் நன்றாக இருந்த நிலையில், எங்கள் குடும்பத்தினர் ஜெய், பல்லவி மற்றும் ஷிவானி ஆகியோருடன் நேரத்தை செலவிட எண்ணி கடந்த மே 25ல் வாஷிங்டன் பயணமானோம்.

அங்கு இருக்கும் போது, ஹூஸ்டனில் நடைபெற்ற ரோட்டரி சர்வதேச மாநாட்டிலும் கலந்து கொண்டோம். அது சுவாரஸ்ய மாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது. உலகம் முழுவதிலிருந்தும் சுமார் 12,000 ரோட்டேரியன்கள் மாநாட்டில் பங்கேற்றனர். தவிர, நீண்ட நாள் களுக்குப் பிறகு நண்பர்களை சந்தித்துப் பேசும் வாய்ப்பும் கிடைத்தது. நாங்கள் ஹூஸ்டனை விட்டு வெளியேறுவதற்கு முன்பாக பலருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டதாக அறிந்தோம். நாங்கள் முன்னெச்சரிக்கையாக இருந்த போதிலும் அடுத்த நாளே இருவரும் கோவிட் தொற்றால் பாதிக்கப் பட்டோம். ஜெய் மற்றும் பல்லவி எங்களை நன்றாக கவனித்துக் கொண்டதால் தொற்றிலிருந்து மீண்டோம்.

அப்போது நிஜவாழ்க்கையில் ஒரு நாடகம் நடந்தது. தந்தையர் தினத்தையொட்டி பரிசுப் பொருள் வாங்குவதற்காக பல்லவி என்னை காரில் ஒரு பெரிய வணிக வளாகத்துக்கு அழைத்துச் சென்றாள். நாங்கள் கடைக்குள் இருந்தபோது திடீரென துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து அபாய சங்கு ஒலித்தது. புத்திசாலித் தனமாக நாங்கள் அருகில் இருந்த ஒரு மின்தூக்கிக்கு (லிஃப்ட்) சென்று கதவை மூடிக்கொண்டோம். எங்கும் அமைதி நிலவியது. பல்லவி, எங்களது நிலை குறித்து ஜெய்க்கு ஒரு SMS அனுப்பினாள். இதனிடையே நான் பிரார்த்தனை செய்தவண்ணம் இருந்தேன். என்ன நடந்ததோ தெரியவில்லை சிறிது நேரத்திற்கு பிறகு போலீஸார் வந்து கதவை திறக்கச் சொன்னார்கள். நாங்கள் பாதுகாப்பாக காருக்குச் சென்றோம். விஷயம் இதுதான் இரண்டு கோஷ்டிகளுக்கு இடையே மோதல் ஏற்பட்டு ஒருவர் மீது ஒருவர் சுடத் தொடங்கியுள்ளனர். இதற்கெல்லாம் காரணம் அமெரிக்காவில் துப்பாக்கியை எளிதில் வாங்க முடியும் என்பதுதான்.

அடுத்து நாங்கள் லண்டனுக்குச் சென்றோம். விம்பிள்டனில் நடந்த இறுதிப் போட்டியை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த குளோப் தியேட்டரில், ஷேக்ஸ்பியரின் பிரபலமான “ஜூலியஸ் சீசர்” நாடகத்தை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. சுமார் இரண்டரை மணி நேரம் கையை கட்டிப்போட்டது போல மெய்மறந்து நாடகத்தை ரசித்துக் கொண்டிருந்தோம். ஜூலியஸ் சீசரின், யூ டூ புரூட்டஸ் என்கிற வார்த்தை என் பள்ளி நாட்களை நினைவுபடுத்தியது.

பின்னர் ஓவல் மைதானத்தில் இந்தியா, இங்கிலாந்துக்கும் இடை யிலான முதல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியை கண்டு ரசித்தோம். 1880ம் ஆண்டில் இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட்டை நடத்திய முதல் மைதானம் ஓவலாகும். மகிழ்ச்சி, சாகசம், பயங்கரமான அனுபவம் ஆகியவற்றின் கலவையுடன் நாங்கள் சண்டீகர் திரும்பினோம்.

©The Tribune

இந்த கட்டுரையை எழுதியவர் RI முன்னாள் தலைவர். ■

Imagine Impact tour

ஆனெட்களுடன் RI தலைவர் ஜோன்ஸ்

V முத்துகுமரன்

கனவுகள் நம் வாழ்க்கையின் பகுதி; அந்த மிகச் சிறந்த கனவுகளை உண்மையாக்க நாம் பாடும்படும்போது, உலகில் தலைவர்கள் வளர்கிறார்கள் என்றார் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ். RID 3232ன் மாவட்ட ஆனெட்கள் அவை (DAC) உறுப்பினர்களுடன் அவர் உரையாடிய சுறுசுறுப்பான நிகழ்ச்சியின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். "அதனால், நீங்கள் ரோட்டரியின் வருங்காலத் தலைவர்கள். சேவை புரிவதற்கான மிகச் சிறந்த தகுதியை என்னால் உங்களில் காணமுடிகிறது. உங்கள் வயதுக்கு இது மிகச் சிறந்தது'' என்றார் அவர்.

ஜோன்ஸ் PDG ரேகா ஷெட்டி அவர்களின் பயணத்தை நினைவு கூர்ந்தார். அவர் ஆசியாவின் இரண்டாவது பெண் ஆளுநர் ஆவார், ஆனெட் என்ற நிலையிலிருந்து அவர் வளர்ந்து தன் மாவட்டத்தை வழிநடத்தும் ஆளுநரானார், ரோட்டரி படிநிலையில் அவருடைய வளர்ச்சி ரோட்டரியன்களுடைய குழந்தைகளுக்கு ஓர் ஊக்கம் என்றார் ஜோன்ஸ். 15 வயதுக்குக் குறைவான அனைத்து ஆனெட்களையும் அவர் மேடைக்கு அழைத்தார், அவர்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கை இலக்கைக் கேட்டார். இந்தக் கேள்விக்குச் சிலர் "நான் மருத்துவர் ஆக விரும்புகிறேன்'' என்றார்கள், சிலர் பொறியாளராக, IAS அலுவலராக, தங்கள் பெற்றோருடைய தொழிலை நடத்த, நகரப் பரப்பை வடிவமைக்கும் கட்டமைப்பாளராக, ராணுவத்தில் சேர, விண் பயண வல்லுனராக, IT வல்லுனராக விரும்பினார்கள். ஒரு பையன் மட்டும் மாறுபட்ட பார்வையுடன் தனித்து நின்றான். "நான் அறிவியலாளராகிப் புதிய விஷயங்களைக் கண்டறிந்து உலகை மாற்ற விரும்புகிறேன்'' என்று அவன் சொன்னதும் ஜோன்ஸ் மிகவும் மகிழ்ந்தார், "ரோட்டரியன்கள் இப்போது செய்ய விரும்புவது இதைத்தான்.''

DAR *ஷில்பா போத்ரா* RI *தலைவர் ஜோன்ஸிடம்* Project Stainfree *திட்டம் பற்றி விவரிக்கிறார். வலதில்* RIDE T N *சுப்ரமணியன் உள்ளார்.*

ரோட்டரியன்களாகிய ஆனெட்களுடன் 2019ல் உருவாக்கப்பட்ட RC சென்னை அமெதிஸ்ட் பதிவுத் தலைவர் Rtn ஷ்ரவன் பிரசாந்த் ஆனெட்கள் தலைவர்களாக ஆகவும் வாழ்க்கையில் தங்கள் இலக்கை எட்டவும் ரோட்டரியன்கள் அவர்களைச் சரியான வழியில் வழிநடத்தவேண்டும் என்றார். இவர் RID 3232 DAC தலைவரும் ஆவார்.

PDG ISAK நாசர் பொறுப்புக் காலத்தின்போது 2014ல் தொடங்கப்பட்ட இந்த DAC 365 நாள் அன்னதானம் (பலருக்கு உணவளித்தல்), கடற்கரையைத் தூய்மையாக்கல், நெடுந்தொலைவு நடத்தல் மற்றும் RYLA முகாம்கள் உள்ளிட்ட பல திட்டங்களின் வழியாகத் தன் செயல்பாட்டை

RI *தலைவர் ஜோன்ஸுடன்* RID 3232 *ஆனெட்கள் (ரோட்டரியினரின் குழந்தைகள்).*

விரிவாக்கியது, இதனால் இந்த 200 உறுப்பினர் அவை திட்ட அணுகலில் இன்னும் பெரிய, இன்னும் துணிவான இலக்குகளைக் கொண்டுள்ளது என்றார் அவர். சென்னையில் சுமார் 100 ஆனெட் சங்கங்கள் உள்ளன.

மாவட்ட ஆனெட் பிரதிநிதி ஷில்பா போத்ரா பேசுகையில், “நட்பை வளர்க்க, சேவை செய்ய, பள்ளிகளில் கற்றுத்தரப் படாதவற்றைக் கற்க நாங்கள் பெரிய அளவில் கற்பனை செய்கிறோம்” என்றார். தலைவர் ஜோன்ஸ் பிற பெண்கள் தன்னுடைய வழியில் பின் தொடர்ந்து வர வழி காண்பிக்கும் முன்னோடி என்பதால் அவர் ஒரு சிங்கப் பெண் என்றார் ஷில்பா. பெண்களுக்கு மாதச் சுழற்சித் தூய்மையில் உதவும் (Project Stainfree) திட்டத்தின்கீழ் ஓர் அலமாரியை ஜோன்ஸ் நிறுவினார். சென்னையில் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு இதுபோல் 500 அலமாரிகளைச் சானிட்டரி பேட்களுடன் DAC நன்கொடையளிக்கும். முதன்முறையாக, DAC, சென்னை TRFக்கு ஓர் உறுதியளித்துள்ளது, “ஆனெட்கள் அந்த உறுதியைக் காப்பாற்றுவார்கள்” என்றார் அவர்.

மாற்றம்

RC மெட்ராஸ் கன்னிமாரா-வைச் சேர்ந்த Rtn ராஜேஷ்குமார் “நான் DAC உறுப்பினராகிச் சுறுசுறுப்பாகச் செயல்படத் தொடங்கும்வரை” தான் நாணம் கொண்ட சிறுவராக, பிறருடன் பழகாதவராக இருந்ததாக நினைவுகூர்ந்தார். “2015ல் நான் ரோட்டரியில் சேர்ந்த போது, என் ரோட்டரி சங்கத்தில் மிக இள வயது உறுப்பினர் நான்தான்.”

RC அண்ணா நகர் வெஸ்டைச் சேர்ந்த இன்னொரு ரோட்டரியனான திலீப் குமார் அண்ணா நகர் வெஸ்ட் ஆனெட்கள் சங்கத்தின் பதிவுச் செயலாளரும் ஆவார். அவர் பேசுகையில், “ஆனெட்களுடனான என் பிணைப்பைத் தொடர்ந்து என் தொழில் இப்போது மிகவும் முன்னேறியுள்ளது. மக்களுடன் இணைந்து பழக இது ஓர் எளிய வழி” என்றார். மூன்று ஆண்டுகளாக ரோட்டரியனாகச் செயல்பட்டு வரும் ஐஷ்னா பேசுகையில், மிகச் சிறந்த மக்களுடன் உரையாடு வதற்குத் தனக்கு இப்போது எண்ணற்ற வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிவித்தார், “ஆனெட் அவையில் நான் பெற்ற பயிற்சிக்கு தான் இதற்கு நன்றி சொல்லவேண்டும்.” 27 வயதில் அவர் RC சென்னை அமெதிஸ்ட் தலைவரான போது, 2020–21ல் இந்தியாவின் மிக இளம் சங்கத்தலைவர் ஆனார்.

இந்த உரையாடல் நிகழ்ச்சியில் DG Dr N நந்தகுமார், PDGகள் நாசர், S முத்துப்பழனியப்பன், சந்திரமோகன், ரேகா ஷெட்டி, RIDE T N சுப்ரமணியன், AKS உறுப்பினர் M அம்பலவாணன் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

படங்கள்: V முத்துகுமரன்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிய RC வல்சாத்

கிரண் ஜெஹரா

குஜராத்தில் உள்ள வல்சாத் நகரத்தில் ஔரங்கா ஆற்றில் வெள்ளம் ஏற்பட்ட போது, நூற்றுக்கணக்கான வீடுகள் அழிந்தன. இந்த வெள்ளம் உண்டாகி ஒரு மாதத்துக்குப் பிறகும், RC வல்சாத், RID 3060, பிற ரோட்டரி சங்கங்கள், NGOக்களுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர். ‘‘இது ஒரு சவாலான சூழ்நிலை. நாங்கள் மீட்புப் பணிகளுக்காக உள்ளூர் நிர்வாகத்துடன் நெருங்கிப் பணியாற்றுகிறோம்’’ என்கிறார் சங்கத் தலைவர் சுவாதி ஷா. ஆனால், முழு மீளலுக்கான பாதை உண்மையில் நீளமானது என்பதையும் அவர் ஒப்புக்கொள்கிறார். இந்தச் சங்கம் மீட்புப் பணிகளுக்கு ரூ.12 லட்சம் அளவுக்குச் செலவழித்துள்ளது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 8,000 பேருக்கு உதவியுள்ளது.

தாழ்நிலைப் பகுதிகளில் இருந்து 400க்கும் மேற்பட்ட மக்கள் இடம் மாற்றப்பட்டார்கள்,’’ சங்க உறுப்பினர்கள் அவர்களுக்குத் தங்குவதற்கு ஓர் இடம், உணவு, உதவிப் பொருட்களை வழங்கி உதவினார்கள். சில உறுப்பினர்கள் கட்டுப்படுத்த இயலாதபடி அழுது கொண்டிருந்தவர்களுடன் அமர்ந்து பேசி அவர்களுக்கு ஆறுதல், உணர்வு ஆதரவையும் வழங்கினார்கள் என்கிறார் இவர். பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பை நோக்கிச் செல்லும் அவசரத்தில் விட்டுவிட்டு வந்த மருந்துகள், மூக்குக் கண்ணாடிகள், சக்கர நாற்காலிகள், பிற மருத்துவப் பொருட்களின் பட்டியல் ஒன்றையும் இந்தச் சங்கம் உருவாக்கி, அதை அவர்களுக்கு சேர்த்தது.

ரோட்டரியன்கள் வல்சாதைச் சுற்றி வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட 6 இடங்களில் 6,000 உணவுப் பொட்டலங்கள், 2,000 பிஸ்கட் பொட்டலங்கள், 800 உலர் தின்பண்டப் பொட்டலங்கள், 6000 லிட்டர் குடிநீரை வழங்கினார்கள். ரிலையன்ஸ் அறக்கட்டளை, வல்சாத் ரோட்டராக்ட் சங்கத்துடன் இணைந்து இந்தச் சங்கம் அரிசி, பருப்பு, எண்ணெய், கோதுமை மாவு, தேநீர், சர்க்கரை, மசாலாப் பொருட்களைக் கொண்ட பொதிகளை வழங்கியது.

மழை நீர் வடிந்தப்பின், போர்வைகள், பாய்கள், ஆடைகள் போன்ற பிற பொருட்களுக்கான தேவை பெருகியது. மீண்டும் சங்க உறுப்பினர்கள் களத்தில் இறங்கினார்கள், 300 பாய்கள், 600 போர்வைகள், கொசு வலைகளுக்கு ஆவன செய்தார்கள். 400 பெண்களுக்குப் புடைவைகளை நன்கொடையளிக்க சூரத் டாபி

ரோட்டராக்டர்கள் மழையால் பாதிக்கப் பட்டவர்களுக்கு ஆடைகள் வழங்குகின்றனர்.

மற்றும் வாபி சங்கங்கள் இந்தச் சங்கத்துக்கு உதவின.'' ஒருவர் மிகவும் நெகிழ்ந்து போய் எனக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியாமல் திகைத்தார். ஏனெனில், அவர்களுக்குச் சொந்தமான அனைத்தையும் வெள்ளம் கொண்டு சென்று விட்டது, உடுத்திய ஆடை யோடு அவர் நின்றுகொண்டிருந்தார், 3 நாட்களாகப் புடைவையை மாற்றாமல் திகைத்திருந்தார். இந்த அனுபவம் எனக்குப் பணிவுணர்ச் சியைக் கற்றுத்தந்தது.''

வல்சாத் மாணவர்களுடைய கல்விப் பொருட்களும் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டிருந்தன. அவர்களுக்கு மழை மேலங்கிகள், காம்பஸ் பெட்டிகள், குறிப்பேடுகள், பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. இங்கு காய்ச்சல், ஃப்ளூ, வயிற்றுப் போக்கு, டெங்கு பிரச்சனைகள் பெருகியதால், PDG Dr நிலாக்ஸ் முஃப்தி, ரோட்டரியன் மருத்துவர்கள் தாரா அஷ்ரா, மிதேஷ் மோடி ஆகியோர் வல்சாத் முழுவதும் பல நல முகாம்களை வழிநடத்தினார்கள். இந்த முகாம்களில் 500க்கும் மேற்பட்ட மக்கள் பரிசோதிக்கப் பட்டார்கள், நோயாளிகளுக்கு மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன.

மேலே: *வல்சாத் மாவட்ட ஆட்சியர் ஷிப்ரா அக்ரே ஒரு மாணவியிற்கு மிதிவண்டி அளிக்கிறார். உடன் Rtn சனோபர் ஷரோஃப் மற்றும் சங்க செயலாளர் நிராளி கஜ்ஜார் உள்ளனர்.*

கீழே: *சங்க உறுப்பினர் ராஜேஷ் பட்டேல் மற்றும் Rtr ராஜ் பட்டேல் பாதிக்கப்பட்டோருக்கு உணவு அளிக்கின்றனர்.*

மாணவர்களுக்கு உதவி

தங்களுடைய பள்ளி கட்டணத்தைச் செலுத்த வசதியில்லாத மாணவர் களுடைய நிலுவையில் உள்ள கட்டணங்களை RC வல்சாத் செலுத்தியது.'' இந்த மாணவர்கள் தங்கள் கல்வியைத் தொடர அரசுப்பள்ளிகளில் சேர விரும்பினார்கள். ஆனால், கல்விக் கட்டணம் நிலுவையில் இருந்ததால் அவர்களுக்கு TCகள் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட 9 மாணவர்களை நாங்கள் அடையாளம் கண்டு அவர்களுடைய கட்டணங் களைச் செலுத்தினோம்'' என்கிறார் சங்கச் செயலாளர் நிராலி கஜ்ஜர். இந்த மாணவர்களுக்கு உதவுவதற்கு மொத்தம் ரூ.30,500 செலவிடப்பட்டது. சமீபத்தில் இந்தச் சங்கம் நலிந்த மாணவர்களுக்கு 55 மிதிவண்டிகளை வழங்கியது.■

அமைதிக்கான முகவரி, தேநீர் கிராண்ட் மாஸ்டர், ரோட்டேரியன்

கோ டாமிதாமி மற்றும் வென் ஹுவாங்

கடந்த ஜூலை 2011ல், யூராசென்கே தேயிலை பாரம்பரியத்தின் முன்னாள் கிராண்ட் மாஸ்டரும், ஜப்பானில், கியோடோ ரோட்டரி சங்கத்தின் உறுப்பினருமான ஜென்ஷிட்ஸு, ஹவாய்க்குச் சென்றார். அங்கு 60 ஆண்டுகளுக்கு முன் சாடோ முறையை மேம்படுத்த தனது நாட்டுக்கு வெளியே முதல் யூராசென்கே தேநீர் பாரம்பரியத்தின் கிளையை நிறுவினார். “சாடோ” என்றால் தேநீர் வழியில் அமைதி, நல்லிணக்கம் மற்றும் சகோதரத்து வத்தை பரப்புவது.

அந்த பயணத்தில் சென்னுக்கு ஒரு சிறப்பு பணி காத்திருந்தது. போரில் இறந்த அனைத்து ஆன்மாக்களுக்கும் ஆறுதல் கூறுவதற்காக பேர்ல் ஹார்பரில் உள்ள USS Arizona நினைவிடத்தில் ஆராதனையுடன்கூடிய தேநீர் விருந்து நடத்த அழைக்கப்பட்டிருந்தார். இரண்டாம் உலகப் போரின்போது கசப்பான முன்விரோதம் காரணமாக பேரழிவுகளும், உயிர்ப்பலிகளும் நடந்தன. அந்த வகையில் அமெரிக்கா-ஜப்பான் இடையே பகைமையை மறந்து நட்புறவை பேணும் வகையில் இந்த நிகழ்வு இருந்ததாக ஊடகங்கள் பாராட்டின.

சென்னுக்கு இந்த நிகழ்வு தனிப்பட்டதாகவும் அமைந்திருந்தது

1943ம் ஆண்டில் அவர், இம்பீரியல் ஜப்பானிய கடற்படையில் சேர்க்கப்பட்டு விமானப்படைப் பிரிவில் பைலட்டானார். போரின் கடைசி காலத்தில் ஜப்பான் கடற்படை அதிகாரிகள் அவரை அதிரடி தாக்குதல் படையில் நியமித்தது. அதாவது எதிரிப் படைகளுக்கு எதிரான தற்கொலைப் படை தாக்குதல் அது. ஆனால், அதிர்ஷ்டவசமாக விமானத்தில் விமானியின் அறைக்குள் நுழையும் முன்னதாக அவரை காப்பாற்றும் வகையில் மறைந்திருந்த கை அவரை தடுத்து நிறுத்திவிட்டது. தன்னை தடுத்தது யார் என்று அவர் கண்டுபிடிப்பதற்கு முன்பு போர் முடிவுக்கு வந்துவிட்டது.

அவரது படைப்பிரிவைச் சேர்ந்த பலர் மரணத்தை தழுவினர். ஏறக்குறைய அமெரிக்கா, பிரிட்டிஷ் மற்றும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 7,000த்துக்கும் மேலான கடற்படை வீரர்களும் பலியானார்கள். தாக்குதல் நடத்திய விமானிகள், குழுவினர் 3,800 பேரும் உயிரிழந்தனர்.

யூராசென்கே முறையில் தேநீர் செய்யும் முறையை கென்ஷிட்ஸு சென் விளக்குகிறார்.

போரினால் ஏற்பட்ட விளைவுகளும், போரில் உயிரிழந்த சக வீரர்களின் முகங்களும் இன்றும் அவரது நினைவில் வாழ்கின்றன. போர் முடிந்த பின்னர், உலகில் அமைதி, நல்லிணக்கம் ஆகியவற்றை கட்டமைக்க தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார் சென். அவரது மனதில் ஆழப்பதிந்த லட்சியத்தின் வெளிப்பாடுதான் தேநீர் விருந்து.

2011ம் ஆண்டு ஜூலை மாதம் 19ம் தேதி அதிகாலை பேர்ல் ஹார்பரில் உள்ள ஒளிரும் வெள்ளை நிறத்தில் அமைக்கப்பட்ட திறந்தவெளி நினைவகத்துக்கு வந்தார். 1941ம் ஆண்டு டிசம்பர் 7ம் தேதி நடத்தப்பட்ட ஜப்பானின் அதிரடி தாக்குதலில் கொல்லப் பட்டவர்கள் அரிசோனா குழுவில் இடம் பெற்றிருந்தனர். போர்க் கப்பலில் இருந்த 1,277 வீரர்கள் உயிரிழந்தபோதிலும் கப்பல் குழுவினர் 1,102 பேரின் எச்சங்கள் இன்னமும் சிதைந்த கப்பலில் புதைக் கப்பட்டுள்ளன. சென்னின் வருகை பற்றி பேனர் வைக்கப்பட்டிருந்தது. அவர் கருப்புநிற கிமோனோ (ஜப்பானிய உடை) உடை அணிந்து அடர்ந்த வெள்ளைத் தலைமுடியுடன், கால்களில் ஜப்பானிய பாணியிலான வெள்ளை நிற சாக்ஸ் அணிந்தவாறு காட்சியளித்தார். கருப்பு நிற மேஜையில் தேநீர் விருந்துக்கான பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. ஜப்பான், அமெரிக்க விருந்தினர்கள் உள்பட அரசியல்வாதிகள், போர் வீரர்கள், உள்ளூர் பிரமுகர்கள் என 200க்கும் மேலானவர்கள் அங்கு திரண்டிருந்தனர். யூராசென்கே சாடோ முறையை கடைபிடிப்பவர்களும் ஜப்பானிய சடங்குகளைக் காண அங்கு குழுமியிருந்தனர்.

ஃபுகுசா என்னும் சதுர வடிவலான பட்டுத் துணியை பயன்படுத்துவதற்கு முன்னதாக தேயிலை தயாரிக்கும் பொருள்களை சுத்திகரித்து பின்னர் பச்சைத் தேயிலையின் மீது கெட்டிலில் இருந்த சுடுநீரை ஊற்றினார். அடுத்து ஒரு மூங்கில் குச்சியால் கலக்கி அடர்த்தியான தேநீர் (கொய்சா) மற்றும் அடர்த்தியில்லாத தளர்வான தேநீர் (உஸூஸா) என இருவகையான புனிதமான தேநீரைத் தயாரித்தார்.

பின்னர் அவற்றை தனித்தனி கிண்ணங்களில் எடுத்துக் கொண்டு நினைவிடத்தில் உள்ள புனிதச் சின்னத்துக்கு கொண்டு சென்றார். அங்கு தாக்குதலின் போது உயிரிழந்த அமெரிக்க கப்பற்படை வீரர்களின் பெயர்கள் உயரமான நினைவுச் சுவரில் பொறிக்கப்பட்டிருந்தன. பின்னர் அவர், தனது தலையை நிமிர்த்தி, தேநீர் கிண்ணங்களை உயர்த்தி இறந்த ஆன்மாக்களுக்கு சமர்ப்பணம் செய்தார். பின்னர் அவற்றை ஒரு மரத்தினாலான மேஜையில் வைத்தார். பின்னர் சென், தனது கைகளை ஒன்றாக இணைத்து பிரார்த்தனை செய்தார். பின்னர் அரங்கத்திற்கு வந்து அங்கு கூடியிருந்தவர்களிடம் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை வலியுறுத்தினார். அனைவரும் அவரையே உற்றுநோக்கியபடி இருந்தனர். எங்கும் அமைதி நிலவியது.

நான் 88 ஆண்டுகள் வாழ்ந்துள்ளேன். இன்று இங்கு நடந்துள்ள நிகழ்வு தனிப்பட்ட முறையில் எனக்கு மறக்க முடியாதது என்றார் சென். நிகழ்வின் முடிவில் அவர், முரண்பட்ட காலத்தையும் அதன் படிப்பினைகளையும் எதிர் காலத்துக்கு எடுத்துச் செல்வது இன்று இருக்கும் மக்களின் பொறுப்பாகும் என்றார்.

எட்வின் ஃபியூடா என்ற அமெரிக்க வாழ் ஜப்பானியர், ஹவாயை பூர்வீகமாகக் கொண்டவர். அவருக்கும் சென்னுக்கும் இருபது ஆண்டுகளுக்கு மேலான நட்புறவு உண்டு. பேர்ல் ஹார்பரில் நடந்த தேநீர் விருந்து நிகழ்வில் உலகெங்கிலும் உள்ள ரோட்டரி உறுப்பினர்களிடையே எதிரொலித்தது என்று குறிப்பிடும் ப்யூடா, 2000 முதல் 2011 வரை RIன் பொதுச் செயலாளராக இருந்தவர். அந்த நிகழ்ச்சி 32 நாடுகளில் ஒலிபரப்பப்பட்டது. அதை நான் உள்பட பல ரோட்டேரியன்கள் கேட்டிருக்கிறோம், செய்தியாகவும் படித்திருக்கிறோம். சென்னின் செயல் ரோட்டரியின் நிரந்தர அமைதிக்கான தேடலையும், பிரிவினையை முறியடிப்பதற்கான முயற்சியையும் உள்ளடக்கியது என்றார்.

கியோடோ: அமைதி, சமாதானத்தின் தலைநகரம்

மூன்று பக்கங்களிலும் மலைகளால் சூழப்பட்ட கியோடோ, 794 முதல் 1868 வரை ஏகாதிபத்தியத்தின் மையமாக விளங்கியது. பின்னர் மெய்ஜி மன்னர் காலத்தில் டோக்கியோ அரசியல் மையமாக மாற்றப்பட்டது. கியோடோ நகரம் வரலாற்றுப் புகழ்பெற்றது. இங்கு 1,600 பௌத்த ஆலயங்கள், 400 ஷின்டோ பிரார்த்தனை மையங்கள், அரண்மனைகள், தோட்டங்கள், கலைநயத்துடன்கூடிய கட்டடங்கள் பொக்கிஷங்களாக இருந்தன. இவை தவிர கபுகி, கெய்ஷா மற்றும் இகபனா போன்ற கண்ணைக் கவரும் மலர்கள் செழித்து வளர்ந்தன. சாமுராய் என்னும் தற்காப்பு கலைக்கும் இந்த இடம் புகழ்பெற்றது. இரண்டாம் உலகப்போரின் போது அணுகுண்டுகள் வீசி தாக்கி அழிக்கப்படும் இடங்களின் பட்டியலில் கியோட்டோவும் இடம் பெற்றிருந்தது. எனினும் ஹென்றி L ஸ்டிம்ஸன் என்ற அமெரிக்க போர் தளபதி, ஜப்பானிய மக்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்ற காரணத்தினால், ஜப்பானின் கலாசார நகரமான கியோடோவை தாக்கி அழிக்கும் முடிவை கைவிட்டதாகக் கூறப்படுகிறது. இதை அவர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும் ஸ்டிம்ஸனும் அவரது மனைவியும் 1920ம் ஆண்டில் கியோடோவுக்கு வருகை தந்து நகரின் அழகை கண்டுரசித்துள்ளனர். கியோடோ தாக்கப்படாததற்கு அரசியல் காரணமா அல்லது அவரின் உள்ளுணர்வு காரணமா என்பது தெரியவில்லை. எப்படி இருப்பினும் முதல் அணுகுண்டு ஹிரோஷிமாவையும், நாகசாகியையும் தாக்கி அழிவை ஏற்படுத்தியது உண்மை. இதனால் கியோட்டோ நகரின் பெருமை பாது காக்கப்பட்டது. ஆன்மீகம் மற்றும் கலாசார மையமான கியோடோ இன்று ஜப்பானிய மரபு, கலாசாரத்தை கட்டிக் காக்கும் வாழும் அருங்காட்சியமாகத் திகழ்கிறது. அவற்றில் ஒன்று பண்டைய தேநீர் விருந்து விழா, யூராசென்கே எனப்படும் நிறுவனம்

மற்றும் ஜப்பானின் 3 சாடோ பள்ளிகளின் தாயகமாகவும் கியோடோ உள்ளது.

கொன்னிச்சியன்: இந்த நாள் குடிசை

வளைந்த, நீளமான கூரைகள் கொண்ட கியோடேவின் பாரம் பரியமான மர கட்டடத்தின் மீது வசந்த மழை பொழிகிறது. வளைந்த, நீண்டிருக்கும் மூங்கில் கழிகளின் மேற்கூரையில் பனிப்பொழிவால் சாம்பல் பூத்தது போன்று இருக்கும். இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க யூராசென்கே கொன்னிச்சியன் குடிலில் தேநீர் அறையுடன் சென் வாழ்ந்து வருகிறார். கியோடோவில் உள்ள இந்த எஸ்டேட் 1646ல் உருவாக்கப்பட்டது.

சிடார் மரத்தினாலான கூரையுடன் கூடிய நுழைவு வாயில் சாமுராய் ஹெல்மெட்டை ஒத்திருக்கிறது. பார்வையாளர்கள் நுழைவு வாயிலிலிருந்து கல்பாதையை பின் தொடரவேண்டும். அது பைன் மரங்களுடன் கூடிய பச்சை இலை தோட்டத்தை நோக்கி அழைத்துச் செல்கிறது. தோட்டத்தை கடந்து செல்லும் சாடோ பயிற்சியாளர்கள் தங்களது மன அழுத்தத்திலிருந்து அமைதிக்கு மாறுவதன் அடை யாளமாக தங்கள் எண்ணங்களையும், ஆசைகளையும் அங்கு விட்டுச் செல்கின்றனர். அதைக் கடந்து சென்றபின் ஒரு பிரதான கட்டடம் தென்படும். அங்குள்ள தாழ்வாரத்தில் வெற்று களிமண் சுவர்களால் ஆன பழமையான தேநீர் அறைகள் உள்ளன. அலங்காரமற்ற கட்டட அமைப்பு தேநீர் மாஸ்டர்களின் குடும்ப கண்ணியத்தை விவரிக்கிறது. கட்டடத்தின் ஒட்டுமொத்த அழகியல் ஜப்பானிய சாடோவை பிரதிபலிக்கிறது-எளிமை, நுணுக்கம், இயற்கை மற்றும் மனித கூட்டுறவுக்கான மரியாதை ஆகியவற்றை அவை குறிக்கிறது.

ஒரு சிறிய தேநீர் அறையின் உள்ளே மரத்தாலான வலை பின்னலுடன் கூடிய இழுவை கதவுகள் ஒளி ஊடுருவக்கூடிய ஜப்பானிய காகிதத்தில் மூடப்பட்டிருந்தது. அருகில் உள்ள தோட்டத்திலிருந்து வரும் இயற்கை ஒளியை அது வடிகட்டி உள்ளே அனுப்புகிறது. தரையில் தாழ்வாக வெட்டப்பட்ட கருப்பு நிற மேஜை பின்புறம் நிற்கிறது. அதில் தேநீர் தயாரிக்கும் உபகரணங்கள் வைக்கப்பட்டுள்ளன. அறையின் மையத்தில் இருக்கும் கரி அடுப்பிலிருக்கும் கனல் குளிர்ச்சியான அந்த காலைப் பொழுதில் இதம் கொடுக்கிறது. ஒரே ஒரு விளக்கு மென்மையான ஒளியை அறை முழுவதும் உமிழ்கிறது. இது ஒரு புனிதமான மற்றும் மர்மமான சூழலை உருவாக்குகிறது.

சென், சாம்பல் நிற ஆடையை அணிந்து, அறைக்குள் நுழைந்து, நிமிர்ந்து நின்று பார்வையாளரை நோக்கி உற்சாகமாக சிரிக்கிறார். 5 அடி 10 அங்குல உயரத்தில் நின்று கொண்டு அவர் அறிந்த பாத்திரத்தின் கண்ணியத்தை வெளிப்படுத்துகிறார். அவரது அடர்த்தியான நரைமுடி சீவப்பட்டு முதுகுக்கு பின்னால் சீரமைக்கப்பட்டிருந்தது. அவரது நீண்ட புருவங்கள் பிரதானமாகத் தெரிந்தன. அவரது கண்கள் மென்மையையும் அரவணைப்பையும் வெளிப்படுத்தின. கடந்த ஏப்ரலில் 99 வயதை எட்டிய சென், 20 ஆம் நூற்றாண்டின் பல கொந்தளிப்பான நிகழ்வுகளைக் கண்டுள்ளார் என்பதை ஒருவர் நன்கு அறிவார். அவர் ஒரு வரலாற்று தீர்க்கதரிசி. அவருடைய ஞானம், தொலைநோக்கு, மனித நேயத்திற்கு தலைவணங்காதவர்களே இருக்க முடியாது.

ரோட்டரி மதிப்புகளுக்கு இணையான யூராசென்கே மரபுகள்

உரையாடல் ரோட்டரியில் தொடங்கு கிறது. நான் உங்களுக்குச் சொல்கிறேன். ரோட்டரி எனது வாழ்வின் முக்கிய அங்கமாகும்.

200 ஜப்பானிய மற்றும் அமெரிக்க பார்வையாளர்களுடன் சென்.

இதை அவர் சொல்லும்போது கண்கள் பிரகாசிக்கின்றன. 1954ம் ஆண்டில் எனக்கு 31 வயதாக இருந்தபோது, எனது தந்தை என்னை ரோட்டரிக்கு அறிமுகப்படுத்தினார். ரோட்டரி இல்லாமல் என்னால் வாழமுடியாது என்ற உணர்வு இருந்தது. ரோட்டரி மீதான மதிப்புகள், வா (மனித நேயம்), கீ (மரியாதை), செய் (புனிதத்தன்மை) மற்றும் ஜகு (சமாதானம்) எங்களின் யூராசென்கே சாடோ மரபுகளுக்கு சரியாகப் பொருந்துகிறது. எனவே ரோட்டரியின் தத்துவத்தை பற்றி தந்தை என்னிடம் பேசியபோது, நான் ஏற்கெனவே என்னை உறுப்பினராக கருதினேன். அதன் பிறகு சிறிது காலத்தில் கியோடோ ரோட்டரி சங்கத்தில் உறுப்பினரானேன். ரோட்டரி வெறும் பொழுபோக்குக் கான இடம் இல்லை. நற்பண்புகள், கற்றல் மற்றும் சமூக சேவை ஆகியவற்றை தெரிந்து கொள்ள வேண்டிய இடம் என்பதை மூத்த உறுப்பினர்கள் சொல்லக் கேட் டிருக்கிறேன். இந்த வார்த்தைகள் இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. சேவைக்காக எனது வாழ்க்கையை அர்ப்பணிக் கவும், முன்பின் தெரியாத வர்களை அடையாளம் காணவும், சவால்களை சந்திக்கவும் என்னை தூண்டுகிறது.

கம்போடியாவில் உள்ள அங்கோர் வாட் கோவிலில் சென் உலக அமைதிக்காக ஒரு பாரம்பரிய தேநீர் விருந்து நடத்துகிறார்.

1954ம் ஆண்டு கிடோடோ வில், தெற்கு கியோடோ புதிய சங்கத்தை சாசனம் செய்வதில் நான் உதவினேன். சமூகத்தில் உள்ள பிரபலமான மனிதர்கள் அதில் இணைந்தனர். ரோட்டரியை வளர்க்க வேண்டுமானால், நமது சமூகத்திற்கு உதவுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை உணர்ந்தேன். நமது திறமைகளும் நமது சமூகத்தினரால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது முக்கியமானது. ஜப்பானின் பொருளாதாரம் முன்னேறத் தொடங்கிய நேரத்தில் எங்கள் சங்கம் சாசனப்படுத்தப் பட்டது. பொருளாதார வளர்ச்சியின் கட்டுபாடற்ற வேகம் எங்கள் நகருக்கு அச்சுறுத்தலாக இருந்தது. பல வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் கலாசார தளங்கள் இடிபாடுகளை எதிர்கொண்டன. மேலும் சுற்றுச் சூழலும் வெகுவாக பாதிக்கப்பட்டது என்றார் அவர்.

அரபு நாட்டுத்தலைவர் ஷேக் முகமது பின் ஜயத் அல் நஹ்யன் அவர்களுக்கு சாடோ நிகழ்வைப் பற்றி சென் கூறுகிறார்.

சென் மற்றும் அவரது சக ரோட்டரி உறுப்பினர்கள் வரலாற்று இடங்கள் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் அவசியம் குறித்து பொது மக்களுக்கும் வர்த்தகர்களுக்கு எடுத்துரைக்க ஊடகங்களை அணுகினர். அவரது சங்கம், அரசியல்வாதிகள், வர்த்தகர்கள், உள்ளூர் பிரமுகர்களை வரவழைத்து கொள்கை முடிவுகள் குறித்து கருத்தாய்வுக் கூட்டம் நடத்தியது. இதன் விளைவாக கியோடோவின் வரலாற்று இடங்களை அழித்து அங்கு புதிய கட்டடங்கள் கட்டும் நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட்டன. சமூகத்தின் குரலாக ரோட்டரி ஒலிக்கத் தொடங்கியது. கியோடோ தெற்கு ரோட்டரி சங்கம் மெல்ல மெல்ல மக்களின் நம்பிக்கையைப் பெற்றது மட்டுமல்லாமல் மக்களின் ஆதரவும் கிடைத்தது என்றார் அவர்.

1964ம் ஆண்டு தந்தையின் மரணத்திற்கு பிறகு, சென், யூராசென்கே கிராண்ட்மாஸ்டர் பதவியை ஏற்றுக்கொண்டார். யூராசென்கே தலைமுறையின் 15வது தலைமுறையை பிரதிநிதித்துவப் படுத்தினார். புதிய பொறுப்புகள் வந்த போதிலும் அவர், ரோட்டரியின் ஆற்றல் மிக்க உறுப்பினராகத் தொடர்ந்தார். கியோடோ ரோட்டரி சங்கத்தின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சென்னின் செயல்பாடுகள் அவருக்கு ரோட்டரி உலகில் பெரும் அங்கீகாரத்தை பெற்றுத்தந்தது. அவர் 1988 முதல் 1990 வரை ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநராகவும், 1998 முதல் 2002 வரை TRF அறங்காவலராகவும் இருந்தார். 2003–04 ஆம் ஆண்டில், ஒஸாகா ரோட்டரி சர்வதேச மாநாட்டில், மாநாட்டு குழு தலைவராக செயல்பட்டார். இதில் உலகம் முழுவதிலிருந்தும் 45,000 பேர் கலந்துகொண்டனர். இது ஒரு சாதனையாகும். அமைதியை மேம்படுத்துவது குறித்து மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது. முன்னாள் ரோட்டரி தூதுவ நிபுணரும், ஐக்கிய நாடுகள் சபையில் அகதிகளுக்கான ஹைகமிஷனராக இருந்தவருமான சடாகோ ஒகாடா என்ற பெண்மணி பேசுகையில், ஒரு நிபுணர் என்ற முறையில் தம்மால் மோதல்கள் முரண்பாடுகளின் தன்மைகளையும், விளைவுகளையும் புரிந்து கொள்ள முடிந்ததாக குறிப்பிட்டார்.

இறந்தவர்களைப் போற்றும் வாழ்க்கை

சென்னின் அமைதியை கட்டியெழுப்பும் பணி, இரண்டாம் உலகப்போரில் அவர் பெற்ற அனுபவத்தின் அடிப்படையிலானது. 1943ம் ஆண்டில் அவர் கியோடாவை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் தோஷிஷா பல்கலைக்கழக இரண்டாம் ஆண்டு மாணவர். அப்போது அவர் ஜப்பானின் கடற்படையின் விமானப்படை பிரிவில் சேர்ந்தார். ஓராண்டுக்குப் பின் 1944 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் போரில் ஜப்பான் தோல்விகண்ட நிலையில் கடற்படையில் அதிரடி தாக்குதல் படை உருவாக்கப் பட்டது. வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட விமானங்கள் மூலம் எதிரியின் கப்பல்களை மூழ்கடிக்க வடிவமைக்கப்பட்ட தற்கொலைப் படை பிரிவில் சென், 200 தோழர்களுடன் சேர்ந்தார். ஆனால், தற்கொலைப்படை தாக்குதலுக்கு தயாரான நாளில், சென் மரணத்தை சந்திக்க தயாராக இருந்த நிலையில், உயர் அதிகாரி ஒருவர் தற்கொலைப் படைப் பிரிவின் பட்டியலிலிருந்து சென் பெயரை நீக்கிவிட்டார். அவர் பலமுறை வேண்டுகோள் விடுத்த போதும் அந்த அதிகாரி அவரை தரையில் இருக்குமாறு உத்தரவிட்டார். மேலும் மேற்கு ஜப்பானில் உள்ள ராணுவப் பிரிவுக்கு சென் அனுப்பி வைக்கப்பட்டார். போருக்குப் பின் ஒரு நாள் முன்னாள் அதிகாரியை சந்தித்த சென், ஏன் எனது பெயரை பட்டியலிலிருந்து நீக்கினீர்கள்? என்று கேட்டபோது அந்த அதிகாரி, உங்கள் விதி என்று நினைத்துக் கொள்ளுங்கள் என்று பதில் கூறினார். இதுவே சென் இப்போது கருணையுடன் சுமக்கும் சுமையாகும்.

உயிர் பிழைத்தது ஒரு பயங்கர உணர்வு என்று குறிப்பிடுகிறார் சென். எனது சக அதிகாரிகளும், நண்பர்களும் இறந்துவிட்டனர். என்னை தனியாகவிட்டுவிட்டு எனது மனைவியும் 1999ம் ஆண்டில் இறந்து விட்டார். இதன் காரணமாகவே என் தோழர்கள் வாழ்ந்திருக்க வேண்டிய காலத்தை நான் மரபுரிமையாக பெற்றிருக்கிறேன் என்ற இனம் புரியாத உணர்வு என்னில்

USS Arizona *நினைவிடத்தில் இறந்தவர்களுக்காக சென் பிரார்த்தனை செய்கிறார்.*

மாஸ்டருடன் தேநீர் அருந்துதல்

சென்னின் நீண்ட ஆயுள் ரகசியத்தை பொருத்தவரை அவர் புகைப்பதும் இல்லை, மது அருந்துவதும் இல்லை. இளமையாக இருந்தபோது அவர் ஜூடோ போன்ற தற்காப்புக் கலைகளை கற்றுக்கொண்டார். மேலும் குதிரையேற்ற பயிற்சியும் பெற்றார். 1967ம் ஆண்டில் ஜப்பானின் குதிரையேற்ற அணியில் அவர் ரிசர்வ் வீரராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் ஜப்பானின் குதிரையேற்ற சம்மேளனத்தின் தலைவராகவும் அவர் நீண்டகாலம் பணியாற்றியுள்ளார். 2008ம் ஆண்டு பெய்ஜிங்கில் நடைபெற்ற கோடைக்கால ஒலிம்பிக் போட்டியின் போது ஜப்பானிய குதிரையேற்ற வீரர்கள் அணியுடன் சென்றார்.

யூராசென்கே முறையில் தேநீர் தயாரிப்பது பற்றி விவரித்த சென், அனைத்து முயற்சிகளிலும் தேநீர் குடிப்பது மனதை அமைதிப்படுத்துகிறது. மனம் அமைதியாக இருக்கும்போது நான் புத்தகங்களைப் படிக்கிறேன். அவை எனது அறிவை வளர்ப்பதுடன், எந்த ஒரு விஷயத்திலும் நான் கவனம் செலுத்த உதவுகிறது என்கிறார்.

எங்கள் தேநீர் தயாராகிவிட்டது? சுவை எப்படியிருக்கிறது? என்று கேட்கிறார் சென்.

பளபளக்கும் கலவையானது கீழே உள்ள பச்சை தேயிலைத் தூளின் மீது அடர்த்தியான நுரையைக் கொண்டுள்ளது. துவர்ப்பில் ஓர் இனிப்பும் இருக்கிறது. ஒவ்வொரு முறை அதை சுவைக்கும்போது புதுவிதமான உணர்வு ஏற்படுகிறது. அதன் நுகர்வு தனிச்சுவை கொண்டதாக இருக்கிறது. அதன் பின் பேச்சு உக்ரைன் மீதான ரஷிய படையெடுப்புக்கு திரும்பியது. ஜப்பானிய சங்கங்கள், மாவட்டங்கள் மூலம் மனிதாபிமான முறையிலான நிவாரண உதவிகள் அளிப்பது தொடர்பாக கியோடோவில் ஹோட்டல் ஒகுராவில் 200 ரோட்டரி உறுப்பினர்கள் பங்கேற்கும் கூட்டத்தில் பேசுவதற்கு சென் அழைக்கப்படுகிறார். எனது ஆரம்பக்காலத்தில் ஏற்பட்ட சோகம் மீண்டும் மீண்டும் வருகிறது என்றுகூறி பெருமூச்சு விடுகிறார் சென்.

உக்ரைன் மக்களுக்கு உதவ நன்கொடைகள் முக்கியம் என்றாலும், அந்த நாட்டு மக்களுக்கு தார்மீக மற்றும் ஆன்மிக ஆதரவு சமமாக தேவை என்று சென் நம்புகிறார். போருக்கு எதிராக இளைஞர்கள் குரல் கொடுக்க வேண்டும். இரண்டாம் உலகப் போரின்போது பல உயிர்கள் பலியானதை நாம் மறந்துவிடக்கூடாது. அவர்கள் செய்த தியாகத்தால்தான் நாம் இன்று உயிருடன் வாழ்ந்து கொண்டிக்கிறோம் என்றார் சென்.

காலை மூடுபனி கலைந்து மதிய வேளை நெருங்கு கிறது. இழுவைக் கதவின் ஷோஜி காகிதம் வழியாக சூரிய ஒளிக்கதிர் விழுகிறது. ஈரமான காற்று, புதிய மண்ணின் வாசனை மற்றும் தோட்டத்தில் புதிய வாழ்க்கையை தொடங்கிய தாவரம் அந்த இடத்தை சூழ்ந்திருக்கும் அமைதி உணர்வை வலுப்படுத்துகிறது.

ஏற்படுகிறது. அவர்கள், தங்கள் வாழ்க்கையை எனக்கு கொடுத் துள்ளனர். அவர்களுக்காகவும் என் விதியை நினைத்தும் நான் நீண்ட நாள் வாழவேண்டும். சென் தன் தலையை மேல்நோக்கி சாய்த்து கண்களை மூடிக்கொண்டார். அவரது நகைச்சுவை பேச்சு மறைந்து சோகம் முதுமையின் தனிமைப்படுத்தப்பட்ட உணர்வில் சரணடைகிறது.

சிறிது நேர அமைதிக்குப் பின் மௌனம் கலைகிறது. சென், ஒரு புன்னகையுடன் தனது கைகளை விரித்து ஒரு இளைஞனின் உற்சாகத் துடன் கூறுகிறார், இந்த இழப்பினால், ரோட்டரிதான் என் குடும்பம் என்று உணர்கிறேன். இது என்னை தனிமையிலிருந்து விடுவித்து உற்சாகமாக இருக்க உதவுகிறது. நான் சங்கத்தின் நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் போதெல்லாம் இளம் ரோட்டேரியன் களை சந்திக்கும் போதெல்லாம், வீட்டில் குழந்தைகளுடன் இருப்பது போல நெருக்கமாக உணர்கிறேன். என்னை இளமையாக மாற்றியதற்காகவும், அன்பையும், ஆற்றலையும் கொடுத்ததற்காகவும் ரோட்டரிக்கும் சாடோவுக்கும் நன்றி கூறுகிறேன்.

ஒகூரா டோக்கியோ விடுதியில் 2011ம் வருடம் நடந்த தேநீர் விருந்திலிருந்து சில படங்கள்.

படங்கள்: மின்மின் வூ

©Rotary

ரோட்டரி ஆளுநர்

சந்தீப் அகர்வல்லா

சுரங்கம்/சூரிய ஒளி ஆற்றல், RC பாம்பே, RID 3141

சங்கங்கள் புதிய உறுப்பினர்களுடன் உரையாடவேண்டும்

ஆளுநர்கள் சங்கத் தலைவர்களைச் சரியான வழியில் வழிநடத்தினால் பெரிய மாற்றம் வரும், நாம் பெருமளவு உறுப்பினர்களைத் தக்கவைத்துக்கொள்ளலாம் என்கிறார் சந்தீப் அகர்வல்லா. "நாம் புதிய உறுப்பினர்களுடன் உரையாடவேண்டும், அவர்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவுசெய்யவேண்டும். சங்கங்கள் அவர்களைச் சேர்த்துக்கொள்ளும் முன் ரோட்டரியின் பன்முகத்தன்மை கொண்ட பங்களிப்பு, பன்னாட்டு, தேசிய மற்றும் மாவட்டச் செயல்பாடுகளை அவர்களுக்கு விளக்க வேண்டும்'' என்கிறார் இவர். உறுப்பினர் எண்ணிக்கையை இவர் 10% மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளார். 5,700 ரோட்டரியன்களைக் கொண்ட 108 சங்கங்களில் "நான் இயற்கை வளர்ச்சியை எதிர்பார்க்கிறேன். சில புதிய சங்கங்கள் உருவாக்கப்படும், ஆனால், நாங்கள் உறுப்பினர்களைத் தக்கவைப்பதில் கவனம் செலுத்துவோம்.''

இவருடைய மிகப் பெரிய திட்டங்களில் சில: TCS உடன் இணைந்து பால்கர் மாவட்டத்தில் 25,000 பழங்குடியினப் பெண்களுக்கு வழங்கப்பட்டு வரும் வயது வந்தோர் எழுத்தறிவு, CSR-இந்தியா நல்கையால் பகுதியளவு நிதி பெற்று விக்ரம்கட் வட்டத்தில் மதிய உணவுச் சமையலறை (ரூ.10 கோடி). கட்டுமானப் பணிகளுக்கான நிலம் பெறப் படுகிறது, ISKCON ஊழியர்கள் சமையலறையை இயக்குவார்கள். சுமார் 500 குழந்தைகளுக்கு (இதில் 10% ஆப்பிரிக்கக் குழந்தைகள்) இதய அறுவைச் சிகிச்சைகள் திட்டமிடப்படுகின்றன.

TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, $5 மில்லியன். RID 3141 இந்த ஆண்டு 25 திட்டங்களை நடத்த இலக்கு அமைத்துள்ளது. அகர்வல்லா தன்னுடைய தந்தை (மறைந்த) PDG சந்தோஷ்குமார் அகர்வல்லா-வைப் பார்த்து ஊக்கம் பெற்று 1991ல் ரோட்டரியில் சேர்ந்தார். இவருடைய தாத்தா RC தன்பாத் பதிவுத்தலைவர் ஆவார்.■

K பாபுமோன்

கட்டுமான வல்லுனர், RC ஷெர்தல்லை, RID 3211

சவால்கள் இருந்தாலும் துடிப்பான வளர்ச்சி

தென் கேரளத்தில் உள்ள 158 சங்கங்களைக் கொண்ட இந்த மாவட்டம் சந்தித்த இரட்டைப் பிரச்சனைகள், கோவிட் நோய்ப்பரவலும் திரும்பத் திரும்ப வந்த வெள்ளங்களும். "ஆனால், உறுப்பினர் எண்ணிக்கை இங்கு நன்கு மேம்பட்டுள்ளது. 20 புதிய சங்கங்களைத் தொடங்க இயலும், 200 பெண்கள் உள்பட 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்த்து இந்த மாவட்டத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை 6,200ஆக உயர்த்த இயலும் என்று நம்புகிறேன்'' என்கிறார் பாபுமோன். அத்துடன், 50 புதிய ரோட்டராக்ட் சங்கங்களும் 200 புதிய இன்டராக்ட் சங்கங்களும் தொடங்கப்படும், 1,000 ரோட்டராக்டர்கள், 4,000 இன்டராக்டர்களைச் சேர்க்கும் திட்டம் உள்ளது.

அம்ருதம் (அமுதம்) என்ற திட்டம் அரசு, உதவி பெறாத, தனியார் பள்ளிகளில் படிக்கும் 5 லட்சம் மாணவர்களுக்கு உடல் நல, முகாம்களை நடத்தும். வாத்சல்யம் (அன்பு) என்ற திட்டம் 50 ஏழை MBBS மாணவர்களுக்கு ஐந்து ஆண்டு கல்விக் கட்டணத்தைச் செலுத்து ம், குடிமையியல் சேவைகள் தேர்வுகளுக்கு 100 மாணவர்களுக்கு இலவசப் பயிற்சி (தலா ரூ.60,000) வழங்கும்.

ரூ.1.5 கோடி GG ஒன்றின்மூலம் திருவனந்தபுரம், ஆலப்புழாவில் 2 டயாலிசிஸ் மையங்கள் அமைக்கப்படும், அரசு மருத்துவமனைகளில் 50 இயந்திரங்கள் அமைக்கப்படும். பரினயம் (வளர்ச்சி) மாற்றுத் திறனாளி இணையர்கள் 50 பேருடைய திருமணத்தை ஆதரிக்கும், பாபுமோன் TRFக்கு $1.5 மில்லியன் இலக்கு அமைத்துள்ளார். இவர் 2000ல் தன்னுடைய நண்பர் மறைந்த Rtn V K ஜோய் அவர்களால் ஊக்கம் பெற்று ரோட்டரியில் சேர்ந்தார்.■

களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்

அஜோய் குமார் லா
மருந்தியல், RC கல்கத்தா டல்ஹவுசி, RID 3291

உறுப்பினர்களை தக்கவைத்துக் கொள்ளுதல் முக்கியச் சவால்

இந்த மாவட்டத்தை அச்சுறுத்தும் பணி, உறுப்பினர்களைத் தக்கவைத்துக்கொள்வதுதான் என்கிறார் அஜோய் லா. சென்ற ஆண்டு இங்கு 450 புதிய ரோட்டரியன்களைச் சேர்த்தபோதும் 11 செயல்படாத மற்றும் 6 பணம் செலுத்தாத சங்கங்கள் மூடப்பட்டதால் நிகர வளர்ச்சி 200ஆகக் குறைந்துவிட்டது. இந்த மாவட்டத்தில் உள்ள 160 சங்கங்களில் சுமார் 20%ல் 20க்கும் குறைவான உறுப்பினர்கள்தான் உள்ளார்கள். “அவர்களைச் சுறுசுறுப்பாக வைத்திருப்பது ஒரு சவால்.” இந்த ஆண்டு குறைந்தது 12 புதிய சங்கங்கள் மற்றும், 450 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள். இவற்றுடன் 15 புதிய ரோட்டராக்ட் சங்கங்கள் அமைக்கப்படும், 250 புதிய ரோட்டராக்டர்கள் சேர்க்கப்படுவார்கள்.

இந்த மாவட்டத்தின் பெரிய திட்டங்களில் ஒன்று, எழுத்தறிவு. 40லிருந்து 55 வயதுவரை உள்ளவர்களுக்கு ரோட்டோவிஷன் திட்டத்தின்கீழ் கண் முகாம்கள் நடத்தப்படும். அஜேய்குமார் லா TRFக்கு $3.5 மில்லியன் திரட்ட இலக்கு அமைத்துள்ளார். சுமார் 15–20 சங்கங்கள் GG திட்டங்களுக்கு விண்ணப்பம் செய்துள்ளன. லா 1995ல் ரோட்டரியில் சேர்ந்தார், RC கல்கத்தா ரிவர் பேங்க் பதிவு உறுப்பினர் ஆனார், பின்னர் 2004ல் தன்னுடைய இல்லச் சங்கத்தின் பதிவு உறுப்பினராக மாறினார்.■

N பிரகாஷ் கரந்த்
பண்ணை/ரியல் எஸ்டேட், RC பன்ட்வால், RID 3181

பொதுத் தோற்றத்தை மேம்படுத்துவது முக்கியம்

“மிகுந்த தாக்கம் கொண்ட திட்டங்கள் பொது மக்களுடைய கவனத்தை ஈர்க்கும், உறுப்பினர் எண்ணிக்கையை வளர்க்கும்” என்கிறார் பிரகாஷ் கரந்த். 3,500 ரோட்டரியன்களைக் கொண்ட 87 சங்கங்களைக் கொண்டுள்ள இவர் உறுப்பினர் எண்ணிக்கையை 10% வளர்க்க இலக்கு அமைத்துள்ளார், 10 புதிய சங்கங்களை உருவாக்க விரும்புகிறார்.

இப்போதைய ரோட்டராக்டர்கள் எண்ணிக்கை யாகிய 1,200 உடன் 200 புதிய ரோட்டராக்டர்களைச் சேர்க்க இவர் விரும்புகிறார். இந்த மாவட்டம் புத்தூரில் ஒரு ரோட்டரி கண் மருத்துவமனையையும், பன்வாலில் ஒரு ரத்த வங்கியையும், மைசூரு அரசு மருத்துவமனையில் டயாலிசிஸ் மையத்தையும் அமைக்கத் திட்டமிடுகிறது.

தக்ஷிண கன்னடா, மைசூரு, சாம்ராஜ்நகரில் சுமார் 400 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு ஒரு லட்சம் பேர் பலன் பெறுவார்கள். TRFக்கு $250,000 வழங்கியுள்ளேன், இந்த ஆண்டு மேலும் $250,000 பங்களிப்பேன்” என்கிறார் காரந்த். இவர் 2011ல் ரோட்டரியில் சேர்ந்தார்.■

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

நம் முழங்கால்களை வலுவாக்குவோம்

பரத் — ஷலன் சவூர்

பாலைவனம் போர்வீரர்களை உருவாக்குவது போலவும், கோவில்கள் பக்தர்களை உருவாக்குவது போலவும், நம் முழங்கால்கள் நம்மை விளையாட்டு வீரர்களாக்குகின்றன. வலிமையான முழங்கால்கள், போர் வீரர்களைப் போல முன்னேறும் நம்பிக்கையையும், பக்தர்களை போல பணிவையும் நமக்குத் தருகின்றன. பல காலைகளில் ஜாகர்கள் கொரோனாவிற்கு பிறகு தங்கள் சுறுசுறுப்பான வழக்கத்திற்குத் திரும்ப ஆர்வமாக உள்ளனர். பழையபடி ஓட முடியுமா? கால்கள் தள்ளாடுமா? ஆம், நீங்கள் முன்பு போல் ஓடுவீர்கள். இல்லை, உங்கள் கால்கள் தள்ளாடாது. உங்கள் மனதில் உள்ள தள்ளாட்டத்தால் உங்கள் தொடக்கத்தை நிறுத்த விடாதீர்கள்.

எனவே, நடைப்பயிற்சிக்கு தேவையான பொருட்களை கூட்டி, மெதுவாகவும் எளிதாகவும், நடக்க தொடங்கவும். இதில் வேகம் கூடும் போது, ஓட வேண்டும் என்ற ஆவல் எழுந்தால், ஓடுங்கள்! பிறகு, மீண்டும் நடக்கவும். இது ஒரு சிறந்த மறு அறிமுகம். பழைய வழக்கங்களுக்கு நீங்கள் எவ்வளவு சிரமமின்றி செல்கிறீர்கள், எவ்வளவு பழக்க மானதாக உணர்கிறீர்கள் என்பதை கண்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். கொஞ்சம் எச்சரிக்கையாக இருங்கள்: இது உங்கள் முதல் நாள் என்பதால், ஒரு சுற்று மட்டும் செல்லுங்கள். நீங்கள் நல்ல நிலையில் இருக்கும்போதே நிறுத்துங்கள். உங்கள் தசைகள் பழைய இயக்கங்களின் நினைவு களைத் தக்கவைத்துக்கொள்கின்றன, அதனால் தான் அது மிகவும் பரிச்சயமானது, மிகவும் எளிதானது போல் உணர்கின்றது. ஆனால் அவற்றைக் கஷ்டப்படுத்தாதீர்கள். அவற்றுக்கு ஒரு வாரம் அவகாசம் கொடுங்கள்.

முழங்காலுக்கு உகந்த மேற்பரப்பைத் தேர்வு செய்யவும் – மண் அல்லது புல், கான்கிரீட் அல்ல. இடுப்பு மற்றும் பக்கவாட்டு வலிகள் அனைத்தையும் நீங்கள் இன்னும் தவிர்க்க முடியாமல் போகலாம். உங்கள் முக்கிய தசை களை வலுப்படுத்த க்ரஞ்ச்ஸ் மற்றும் பிளாங்க்கள், அரை குந்துகள் மற்றும் இடமிருந்து வலமாக ஃப்ளோர் ரோல்ஸ் செய்யவும் மற்றும் முதுகு மற்றும் முழங்கால்களை வலுப்படுத்த கால்களை உயர்த்தவும். முக்கிய தசைகள் வலிமைடைந்தால் வலிகள் மறைந்துவிடும்.

நீங்கள் நடக்கும் போது அல்லது ஓடும்போது உங்கள் தோள்களை சமமாக வைத்திருங்கள். இந்த நிலை வலியைத் தவிர்க்க உதவுகிறது.

உங்கள் உணவு உட்கொள்ளலைக் கவனித்து, எடையைக் குறைக்கவும். உடல் பருமன் முழங்கால்கள் மற்றும் இதயத்தில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. உங்கள் ஓட்டத்திற்கு முன் காலை உணவைத் தவிர்க்கவும், இதனால் காலை உணவுக்கு பதிலாக உடல் கொழுப்பு எரிக்கும். நீங்கள் சாப்பிட வேண்டும் என்றால், கார்போஹைட்ரேட்டுகளை சாப்பிடுங்கள் – கஞ்சி அல்லது போஹா – உடல் அவற்றை எளிதில் எரிக்கிறது. ஓட்டத்திற்குப் பிறகு புரதம் – தயிர், முட்டை அல்லது சில பருப்புகளை சாப்பிடுங்கள். உங்கள் ஓட்டத்திற்கு முன்பும், ஓட்டத்தின் போதும், பின்பும் மற்றும் நாள் முழுவதும் தண்ணீரை பருகவும். வெப்ப அலைகள் மற்றும் உயரும் வெப்பநிலை நீரேற்றத்தை இன்னும் இன்றியமையாததாக ஆக்குகிறது.

நீங்கள் ஓடுவதை நிறுத்திய போது உங்களுக்கு 38 வயது, இப்போது 40 வயது; வருத்தப்பட வேண்டாம். உங்கள் மனோபாவம் தடையில்லையெனில் உங்கள் வயது ஒரு தடையில்லை.

முழங்கால் மாற்று உள்ள பெரும்பாலான மக்கள் சுமார் மூன்று மாதங்களுக்குப் பிறகு பல சாதாரண செயல்பாடுகளை மீண்டும் தொடங்கலாம். செயற்கை முழங்கால்கள் இயற்கையான முழங்கால்களைப் பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. எனவே, அவை சரியாகச் செயல்பட உடற்பயிற்சி செய்ய வேண்டும். ஆனால் பயிற்சிகள் மருத்துவர் மற்றும் உடல் சிகிச்சை நிபுணரின் மேற்பார்வையின் கீழ் செய்யப்பட வேண்டும். முழங் கால்களைச் சுற்றியுள்ள தசை களை வலுப்படுத்தி, தாங்கக்கூடிய எடையைப் பராமரிப்பதே இதன் தேவை. பெரும்பாலான மருத்துவ நிபுணர்கள் 20–30 நிமிடங்கள் ஒரு நாளைக்கு இரண்டு முதல் மூன்று முறை உடற்பயிற்சி செய்ய பரிந்துரைக்கின்றனர். நின்று முழங்காலை வளையுங்கள்: ஊன்றுகோல் அல்லது வாக்கர் மூலம் நிமிர்ந்து நிற்கவும்: தொடையைத் தூக்கி முழங்காலை உங்களால் முடிந்த அளவுக்கு வளைக்கவும். 5–10 வினாடிகள் வைத்திருங்கள். முழங்கால் மற்றும் கீழ் காலை நேராக்கவும், முதலில் குதிகாலை தரையில் தொடவும்... அறிவுறுத்தப்பட்டபடி பல முறை செய்யவும்.

ஒரு நாளைக்கு இரண்டு முதல் மூன்று முறை 30 நிமிடங்கள் நடக்கவும். இது முழங்கால்களில் வலிமையை அதிகரிக்கிறது மற்றும் கலோரிகளை எரிக்கிறது. நீச்சல் மற்றும் நிலையான நாற்காலி சைக்கிள் ஓட்டுவதும் நல்லது. குணமடைய ஒரு கால அட்டவணை: வலி குறைய 3 மாதங்கள் ஆகும். மருத்துவர் ஐபிரூஃபென் அல்லது NSAID கிரீம்கள் போன்ற வீக்கம் குறைப்பு மருந்துகளை பரிந்துரைக்கலாம். மூட்டுகளில் வீக்கம் மறைய ஒரு வருடம் ஆகும், முழுமையாக குணமடைய இரண்டு ஆண்டுகள் ஆகும்.

இந்த விஷயங்களைத் தெரிந்து கொள்வது நல்லது, ஏனெனில் இது அடுத்த இரண்டு ஆண்டுகளில் உங்கள் வாழ்க்கையைத் தயாராக்கவும் திட்டமிடவும் உதவும். செய்யக்கூடாத சில விஷயங்கள் உள்ளன: முறுக்குதல் மற்றும் திடீர் அசைவுகள், குதித்தல், அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் உடற்பயிற்சி கள், எடை அதிகரிப்பு, கொழுப்பு நிறைந்த உணவுகள் ஆகியவற்றைத் தவிர்க்கவும்.

நச்சரிக்கும் வலியைத் தணிக்க, உங்கள் உள்ளங்கை மூலம், வலிக்கு அருகில் உள்ள தசையை பல விநாடிகள் அழுத்தவும். பின்னர் விடுவிக்கவும். இதை பல முறை செய்யவும். வலி குறையும் அல்லது போய்விடும்.

அறுவை சிகிச்சை தேவைப் படமால் மூட்டு பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு ஒரு உதவிக்குறிப்பு. சில நேரங்களில், வலி அல்லது எரிச்சல் ஏற்படும்போது, அது உங்கள் மூட்டுகளா அல்லது தசைகளா என்பதை வேறுபடுத்துவது கடினம். பருவமழை, கடுமையான குளிர் மற்றும் வெப்பநிலை பெருமளவில் மாறுபடுவது போன்ற, அதிக ஈரப்பதம் உள்ள சூழ்நிலைகளில் எரிச்சல் ஏற்படலாம் என்பதை அறிவது அவசியம். இது மூட்டுகள் மற்றும் தசைகளை கடினமாகவும் வலியுள்ளதாகவும் மாற்றும். இதன் முக்கிய வேறுபாடு: தசை வலி உடலில் எங்கும் இருக்கலாம், மூட்டுவலி மூட்டுகளில் மட்டுமே இருக்கும்.

தசை வலி மற்றும் விறைப்பை சுலபமாக நீக்கலாம். நீர் தசையின் சிறந்த நண்பன். அர்தரைடீஸ்ஸால் பொதுவாக காலையில் மூட்டு விறைப்பாக உணரப்படுகிறது மற்றும் நாள் முன்னேறும்போது மந்தமான, தொடர்ச்சியான வலியாக மாறுகிறது. கூடுதலாக, மூட்டு நகர்த்தப்படும் போது ஒரு கடுமையான உணர்வு ஏற்படும் மற்றும் தொடும்போது அந்த பகுதி வலிமிகுந்து இருக்கும்.

மூன்று நடைமுறைகள் மூட்டு வலிக்கு நிவாரணம் தருகின்றன; கொழுப்பு இல்லாத உணவு (எண்ணெய், நெய், வெண்ணெய் சேர்க்கக் கூடாது, வேகவைத்தல்,கிரில், ப்ரோயில், பேக் செய்து சாப்பிடுங்கள்). மூட்டுகளில் NSAID கிரீம் தடவவும். நல்ல தூக்கம் எப்போதும் உதவும் மற்றும் குணப்படுத்தும் செயல்முறையை துரிதப்படுத்தும். செயல்பாட்டை மேம்படுத்த உடற்பயிற்சி அவசியம்.

சமநிலையை வளர்த்துக் கொள்ளுங்கள்

அர்தரைடீஸ் உடன் வாழ்வதற்கான சிறந்த வழி புலம்பலை வாழ்வில் இருந்து அகற்றுவதாகும். எனவே உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். சீரான மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். மன அழுத்தத்தை தூரத்தில் வைத்திருங்கள். தினமும் தியானம் செய்யுங்கள், மனதை மிகவும் சுறுசுறுப்பாக வைத்திருங்கள். ஆக்கப்பூர்வமான முயற்சிகளில் ஈடுபடுங்கள்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

On the racks



In the shadow of a legend: Dilip Kumar

Author : **Faisal Farooqui**
Publisher: **Om International**
Pages : **186; ₹439**

As an ardent Dilip Kumar fan, I was extremely excited to know that a book about the "ultimate method actor" as Satyajit Ray called the legend, was out just within a year of his death. I greedily laid my hands on *In the shadow of a legend: Dilip Kumar* written by his long time adoring fan and spokesperson Faisal Farooqui, to get an additional insight into the man... beyond his fascinating biography/autobiography *Dilip Kumar: The Substance and the Shadow*, written by the film journalist Udaya Tara Nayan and published in 2014.

Call it sad or ironic, it is the author's excessive admiration and awe for the man that comes in the way of the narrative being interesting or gripping. And most of the text descends to fawning admiration and mere hero worship of the man. But if as a reader you are willing to set aside these flaws, and are a real fan of that mesmerising charmer, that drop dead gorgeous pathan from Peshawar, you need to have a copy of this book in your library. For Faisal does give us some interesting and intimate anecdotes from the actor's life, which make him come through as the endearing human being that he was… that doting friends like Dharmendra talk about.

Read this book to find out how a great and established actor like Dilip would make time to inaugurate a random dermatologist's clinic, attend a wedding, or any other event, just because he had promised he would do so. "This inspired trust, respect, honour and faith in his word."

There are many gems in this book which talk about the mega star's passion for reading all kinds of books, his love for literature and poetry, the earnest role and hard work he put into developing Jogger's Park in Mumbai, and also his sheer joy in discovering the eternal melody '*Ae mere dil kahi aur chal*' on YouTube on the author's phone.



Samaaj, Sarkaar, Bazaar

Author : **Rohini Nilekani**
Publisher : **Rohini Nilekani**
Pages : **264**
Free download/Private distribution

In this book, the focus is on the 'citizen-first' approach when it comes to either society, government or the markets, as the author sums up her varied experiences in the civic sector over three decades. In this collection of her articles, speeches and experiences, she recalls the setting up of a public charitable trust Nagarik in 1992, for ensuring safe roads. That initiative crashed "because we were unable to sustain a momentum of citizen interest and involvement," she says.

But over the years, her journey as a philanthropist evolved; she joined the board of the Ashoka Trust, a not-for-profit trust for the environment. She went on to co-found one of the best educational ventures for underprivileged children by funding Pratham Books "to democratise the joy of reading". Watching children's eyes light up when a good storybook is put into their hands gave her immense pleasure. A journalist by profession, Rohini Nilekani was now referred to as a "social entrepreneur" and in 2005, when she got "some serious money" through the sale of her Infosys shares, she put it all into Arghyam to support the water sector in India.

As she expresses deep concern on the degradation of the environment, depleting water resources and a plethora of problems faced by citizens, the author says they will have to demand good governance, by coming out of "lackadaisical attitude towards governance practices". Only a strong *samaaj* will be able to get the desired results. A must read for those who believe in self-help through activism, struggle and belief.

Compiled by Rasheeda Bhagat
Designed by Krishnapratheesh S

இலங்கைக்கு உதவுவதற்குக் கை கோர்க்கும் UNICEF, ரோட்டரி

ரஷீதா பகத்

இடமிருந்து: *UNICEFன் இலங்கை துணை பிரதிநிதி எம்மா ப்ரிகம், பிரதிநிதி கிறிஸ்டியன்ஸ் ஸ்கூக், அதன் தெற்காசிய இயக்குனர் ஜார்ஜ் -லார்யா அட்ஜெய், RI இயக்குனர் A S வெங்கடேஷ், DG புபுடு டி ஜோய்ஸா மற்றும் PRIP K R ரவீந்திரன்.*

இலங்கையின் பொருளாதாரம் உடைந்து போனதால், 21 மில்லியன் மக்கள் உணவு, மருந்து இன்றித் தவிக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில், இந்த நாட்டுக்கு உயிர் காக்கும் மருந்துகள், குடிநீர், கல்விப் பொருட்கள், குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கான மற்ற முதன்மைப் பொருட்களை வழங்குவதற்கு UNICEF மற்றும் ரோட்டரி இணைந்து செயல் படவுள்ளன. *Lifeline Sri Lanka* என்ற இந்தத் திட்டம் ரோட்டரியின் பன்னாட்டு வலைப்பின்னல் மற்றும் இலங்கையின் முன்னணிப் பள்ளிகளில் படித்துவிட்டு இப்போது வெளிநாட்டில் வாழ்வோரை அடிப் படையாகக் கொள்ளவுள்ளது.

இதுபற்றி விளக்கிய முன்னாள் PRIP தலைவர் K R ரவீந்திரன், எங்கள் மருத்துவப் பொருட்களில் 80% இறக்குமதி செய்யப்படுவதாலும், பொருளாதார நெருக்கடியால் அந்நியப்பணக் கையிருப்பு தீர்ந்து வருவதாலும், அடிப்படை மருந்துகள் கிடைப்பதில்லை.

அதனால், இலங்கையில் உள்ள ரோட்டரியன்கள் தங்கள் நண்பர்கள், குடும்பத்தினர், இலங்கையின் முன்னாள் மாணவர்களிடமிருந்து நன்கொடைகளைப் பெற்று நிதி திரட்டுவார்கள். இதை பயன்படுத்தி UNICEF தேவையான மருந்துகள், மருத்துவக் கருவிகள், நீர் தூய்மைப் படுத்திகள், பள்ளி எழுதுபொருட்கள் போன்றவற்றைத் திரட்டும்.

கொழும்பு-வில் இந்த முன்னெடுப் பின் தொடக்க நிகழ்ச்சியில் RI இயக்குநர் A S வெங்கடேஷ், UNICEFன் தெற்கு ஆசியப் பகுதி இயக்குநர் ஜார்ஜ் லார்யா-அட்ஜெய், அதன் இலங்கைப் பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக், ரவீந்திரன், RID 3220 DG புபுடு டி ஜோய்ஸா பங்கேற்றார்கள்.

"RI உடன் இணைந்து பணியாற்று வதில் UNICEF மகிழ்கிறது; குடும்பங்கள் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் தவிக்கிற, மருந்துக் கையிருப்புகள் விரைவாகக் குறைந்து வருகிற, பள்ளிகளில் அடிப்படை எழுது பொருட்கள் இல்லாத இந்த நேரத்தில் குடும்பங்களுக்குச் ஆதரவு வழங்க இயலும் என்றார் லார்யா-அட்ஜெய்.

வெங்கடேஷ் பேசுகையில், இந்தத் துன்பமான நேரத்தில், இலங்கையில் உள்ள ரோட்டரியன்கள் தங்கள் நாட்டை ஆதரிப் பதில் முக்கியப் பங்காற்றுவதை எண்ணி நம் RI வாரியம் மகிழ்கிறது என்றார்.

ரோட்டரி மற்றும் UNICEF ஆகிய இரண்டு "மதிப்பு மிக்க அமைப்புகள்'', 1988 முதல் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றிய வரலாறு கொண்ட அமைப்புகள், குறிப்பாக, இளம் பிள்ளைவாதத்தை அகற்றும் முயற்சியில் இணைந்து பணியாற்றி யவர்கள் என்றார் ரவீந்திரன்.

இந்த நன்கொடைகள் UNICEFக்கு நேரடியாக வழங்கப் படும், அவர்கள் மருந்துகள், பொருட்களை நேரடியாக மிகச் சிறந்த விலைகளில் வாங்குவார்கள், அவற்றை நேரடியாக இலங்கைக்கு அனுப்பிவைப்பார்கள். அரசு இந்தப் பொருட்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அனுமதி வழங்கி அவற்றைத் தங்கள் கிடங்குகளில் சேமித்துவைக்கும். ரோட்டரி மற்றும் UNICEF உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஓர் இணைக் கண்காணிப்புக் குழு முறையான வழங்கலை உறுதி செய்யும் என்றார் DG புபுடு.

மொத்த நிதியின் தகவல்களும் இதற்கென்று அர்ப்பணிக்கப்பட்ட இணையத் தளத்தில் காட்சிப்படுத்தப் படும். உங்கள் நன்கொடைகளை *https://lifelinesrilanka.rotary.unicef.org.au.* அனுப்பலாம். ■

ஒரு பெண்ணின் மதிப்பை அங்கீகரித்தல்

டையனா ஷோபெர்க்

ப்ரோகிராம்ஸ் ஆஃப் ஸ்கேல் மானிய-வெற்றியாளர் நைஜீரியாவின் ஆரோக்கியமான குடும்பங்களுக்காக ஒன்றிணைவோம் திட்டங்கள் பெண்களின் அடிப்படைத் தேவைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் குடும்பங்களுக்கு உதவுகின்றன.

மார்ச் 1994ல், அனாஹெய்ம் ஹில்டன் மற்றும் டவர்ஸில், இம்மானுவேல் அடெடோலாபோ லுஃபாடேஜு மற்றும் ராபர்ட் ஜின்சர் ஒரு உரையாடலில் ஈடுபட்டனர். ரோட்டரியின் சர்வ தேச அசெம்பிளிக்காக DGEக்கள் நைஜீரியாவைச் சேர்ந்த லுஃபாடேஜு மற்றும் ஜெர்மனியின் ஜின்சர் இருவரும் கலிபோர்னியாவுக்குச் சென்றிருந்தனர். அவர்கள் பேசுகையில், தங்கள் இருவரின் ஆர்வங்கள் ஒன்றாக இருப்பதை அறிந்தனர். நைஜீரியாவில் உள்ள ஒரு மருத்துவமனை மகப்பேறு வார்டுக்கு தான் சமீபத்தில் சென்றிருந்ததை லுஃபாதேட்ஜீ விவரித்ததை ஜின்சர் கவனமாகக் கேட்டார். அந்நேரத்தில், அந்த நாட்டில் 100 குழந்தைகளில் ஐந்து குழந்தைகள் முதல் 28 நாட்களில் இறந்தன. பிறந்த குழந்தைகளின் இறப்புகளின் அதிக விகிதம், மோசமான மகப்பேறு மற்றும் பராமரிப்பின் விளைவு என்பதை லுஃபாடேஜு அறிந்திருந்தார்.

அதற்கு ஜின்சர் கூறியது, ''என்னால் உதவ முடியும்.''

1995ம் ஆண்டில், நைஜீரியாவின் வடக்கு மாநிலமான கடுனாவில் லுஃபாடேஜு மற்றும் ஜின்சர் ஒரு சிறிய தாய் மற்றும் குழந்தை சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்தைத் தொடங்கினர். இன்று, அவர்களின் தலையீடுகளால் அத்திட்டம் நாடு முழுவதும் பரவி பல லட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்க்கையை மாற்றிக்கொண்டிருக்கின்றன. இவை அனைத்தும் 28 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த தற்செயலான சந்திப்பினால் அமைந்தது. ''எங்கள் திட்டத்தின் கதை ரோட்டரி நட்பின் கதை'' என்கிறார் லுஃபாடேஜு. ஆளுநர் என்ற முறையில் நான் இதை செய்து விட்டுச் செல்வேன் என்று நினைத்தேன். ஆனால் என் வாழ்க்கையின் கணிசமான பகுதியை அது எடுத்துக்கொண்டது.

ஜூன் மாதத்தில், நைஜீரியாவில் ஆரோக்கியமான குடும்பங்களுக்காக ஒன்றிணைவோம் *(Together for healthy families)* என அழைக்கப்படும் இந்த திட்டத்திற்கு அறக்கட்டளையின் இரண்டாவது 2 மில்லியன் டாலர் ப்ரோகிராம்ஸ் ஆஃப் ஸ்கேல் *(Programs of Scale)* மானியத்தைப் பெறுகிறது என்று ரோட்டரி அறக்கட்டளை அறிவித்தது, இது திட்டத்தின் கடந்தகால வெற்றியை கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் இன்னும் பலவற்றைச் சாதிக்க உதவும்.

''இது உண்மையில் சமூகங்களும் சுகாதார அமைப்புகளும் பெண்களின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்யும் விதத்தை மாற்றுவதாகும்'' என்கிறார், இனப்பெருக்கம், தாய்வழி மற்றும் குழந்தை ஆரோக்கியத்திற்கான ரோட்டரி நடவடிக்கை குழுவின் தலைவரும், மக்கள்தொகை கவுன்சிலின் நெறிமுறை மறுஆய்வு வாரியத்தின் தலைவருமான ஜான் டவுன்சென்ட். ''இது முக்கியமானது, ஏனென்றால் பெண்கள் குடும்பம் மற்றும் வளர்ச்சியின் இயக்கிகள். ஒரு பெண் இறந்தாலோ அல்லது உடல் ஊனமுற்றாலோ ஒட்டுமொத்த குடும்பமும் பாதிக்கப்படும்.

இறுதியில், நைஜீரியா வில் ஆரோக்கியமான குடும்பங்களுக்காக

அளவை விரிவுப்படுத்த தயாரா?

ப்ரோகிராம்ஸ் ஆஃப் ஸ்கேல் என்பது ஒரு அறக்கட்டளைத் திட்டமாகும், இது ரோட்டரி, ரோட்ராக்ட் சங்கங்கள் மற்றும் மாவட்டங்கள் கவனம் செலுத்தும் பகுதிகளில் ஆதாரம் சார்ந்த தலையீடுகளை செயல்படுத்தியவர்களுக்கு மானியங்களை வழங்குகிறது. இந்த மானியங்கள் பெரிய அளவிலான, அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களுக்கு நிதியளிக்கின்றன, அவை ரோட்டரி உறுப்பினர்களின் திறன் மற்றும் உற்சாகத்தைத் பெறுவதன் மூலம் கூட்டாளர்களை ஈர்க்கும். ஜாம்பியா மற்றும் அமெரிக்காவில் உள்ள ரோட்டரி உறுப்பினர்கள் தலைமையிலான மலேரியா இல்லாத ஜாம்பியாவுக்கான கூட்டாளர்களுக்கு 2021ம் ஆண்டு முதல் ப்ரோகிராம்ஸ் ஆஃப் ஸ்கேல் மானியம் வழங்கப்பட்டது.

உங்கள் சங்கம் அல்லது மாவட்டம் ஸ்கேல் மானியத்தின் அடுத்த திட்டங்களுக்கு விண்ணப்பிக்க பின்வரும் கேள்விகளைக் கருத்தில் கொண்டு தொடங்கவும்:

- *உங்கள் திட்டம் அளவிடக்கூடிய விளைவுகளை வெற்றி கரமாக அடைகிறதா, மேலும் அந்த மதிப்பீடு வலுவான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டதா?*
- *தேர்தெடுக்கப்பட்ட மக்களுக்கான சிக்கலை இந்தத் திட்டம் தீர்க்குமா மற்றும் திட்ட காலவரையறைக்கு அப்பால் இத்திட்டம் நீடித்திருக்குமா?*
- *திட்டத்தை திறம்பட வளர்ப்பதற்கு தெளிவான மற்றும் தர்க்கரீதியான செயல்படுத்தல் திட்டம் உள்ளதா?*
- *பல ஆண்டு காலங்களாக தொடரும் ஒரு பெரிய திட்டத்தை செயல்படுத்த திறனும் தலைமையும் செயல் படுத்தும் கூட்டாளர்களுக்கு உள்ளதா?*
- *இணை நிதியளிப்பவர்கள் உட்பட அனைத்து பங்குதாரர்களும் முழுமையாக அர்ப்பணிப்புடன் இருக்கிறார்களா?*

மேலும் அறிய, rotary.org/programsofscale பார்வையிடவும்.

முக்கிய தேதிகள்

ஜூன் 2022	:	*கிராண்ட் போட்டி தொடக்கம்*
ஆகஸ்ட்	:	*கருத்துக் குறிப்புகளை சமர்ப்பிக்க கடைசி தினம்*
அக்டோபர்	:	*முழு முன்மொழிவை சமர்ப்பிக்க அழைப்பு அனுப்பப்படும்*
பிப்ரவரி 2023	:	*தள பார்வையிடுதல் (மெய்நிகர் மற்றும் அல்லது நேரில்)*
ஏப்ரல் 2023	:	*விருது முடிவு*

ஒன்றிணைவோம் திட்டத்தின் இலக்கு உள்ளூர் அரசாங்கப் பகுதிகளில் தாய் மற்றும் பிறந்த குழந்தைகளின் இறப்பை 25 சதவீதம் குறைப்பதே. அவ்வாறு செய்ய, தேசிய, மாநில மற்றும் உள்ளூர் சுகாதார அமைப்புகளை வலுப்படுத்துவும் அதே வேளையில் தாய்வழி ஆரோக் கியத்தையும் குடும்பக் கட்டுப்பாடு சேவைகளுக்கான அணுகலையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் சுகாதாரப் பணியாளர்களின் திறன்களை மேம் படுத்துவதற்கும், தாய் மற்றும் பிறந்த குழந்தை இறப்புகள் குறித்த தகவல்களைக் கண்காணிப்பதற்கும் பயிற்சி அளிப்பதால், குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப தலையீடுகள் செய்யப்படலாம்.

இத்திட்டம் ரோட்டரி மாவட்டங்கள் 1860 (ஜெர்மனி), 9110, 9125, 9141, மற்றும் 9142 (நைஜீரியா) ஆகியவற்றால் ஆதரவளிக்கப்படுகிறது. மேலும், இனப்பெருக்க, தாய்வழி மற்றும் குழந்தை சுகாதார நடவடிக்கை குழுவுடன் இணைந்து நிதியுதவி செய்கிறது. நைஜீரியாவில் உள்ள ரோட்டேரியன்கள் மற்றும் ரோட்டராக்டர்கள் திட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, பயிற்சியை மேற்பார்வை செய்து, வாதிடும் முயற்சிகளை வழிநடத்து கிறார்கள் மற்றும் அரசாங்கத்துடன் ஈடுபடுகிறார்கள். ஜெர்மனியில் உள்ள உறுப்பினர்கள் தங்கள் தொழில்நுட்ப மற்றும் நிர்வாக நிபுணத்துவத்தை கொண்டு மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை ஆதரிக்கின்றனர். குழுவானது ஜெர்மனியின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான மத்திய அமைச்ச கத்திடம் இருந்து நிதியுதவிக்கு விண்ணப்பித்துள்ளது, அவர்கள் முதல் திட்டத்தில் இருந்து பங்களித்து வருகின்றனர், இதில் மிக சமீபத்திய உலகளாவிய மானிய திட்டத்திற்கு $1.36 மில்லியன் வழங்கியதும் அடங்கும்.

நைஜீரியா தாய் மற்றும் குழந்தை சுகாதாரப் பணிக்கான முக்கிய இடமாகும். உலகளவில் மகப்பேறு இறப்புகளில் 23 சத விகிதத்திற்கும், பிறந்த குழந்தை இறப்புகளில் 11 சதவிகிதத்திற்கும் நைஜீரியா காரணமாக இருக்கிறது என்று ப்ரோகிராம்ஸ் ஆஃப் ஸ்கேல் மானியத்தின் முன்னணித் தொடர்பாளர் ஜான்-பீட்டர் சாண்டர் கூறுகிறார். நைஜீரியாவில் பெரிய திட்டங்களை இலக்காகக் கொண்ட இனப்பெருக்கம், தாய்வழி மற்றும் குழந்தை ஆரோக்கியத்திற்கான ரோட்டரி நடவடிக்கை குழு, ஜின்சர் மற்றும் லுஃபாடேஜுவின் ஆரம்பகால வேலைகளில் இருந்து வளர்ந்தது.

அவர்கள் தங்கள் போக்கை முன்னோக்கி திட்டமிடும்போது, திட்டமிடுபவர்கள் தங்கள் முந்தைய முன்னேற்றத்திலிருந்து உத்வேகம் பெறலாம். கடுனாவில் அவர்கள் பெற்ற வெற்றிக்கு பிறகு, நைஜீரியா மற்றும் ஜெர்மனியில் உள்ள ரோட்டரி உறுப்பினர்கள் ஒரு பெரிய அறக்கட்டளை மானியத்தில் கூட்டு சேர்ந்தனர், இது ஆறு மாநிலங்களில் கிட்டத்தட்ட 100 உள்ளூர் அரசாங்கப் பகுதிகளுக்கு திட்டத்தை விரிவுபடுத்தியது. “நைஜீரியாவில் பெரும்பான்மையான பிறப்புகள்

HPV தடுப்பூசி

2021–22 மானியத்திற்கான முழு முன்மொழிவைச் சமர்ப்பிக்க நான்காவது திட்டக் குழு அழைக்கப்பட்டது, ஆனால் இறுதியில் உலகளாவிய விநியோகச் சங்கிலி சிக்கல்கள் காரணமாக போட்டியில் இருந்து குழு விலகியது. திட்ட வடிவமைப்பில் அவர்களின் முயற்சிகளையும், அத்துடன் போட்டி காலக்கெடுவிற்குள் செயல்படுத்துவதற்கு அவர்களால் உறுதியளிக்க முடியாது என்பதை ஒப்புக்கொண்டதையும் ரோட்டரி அறக்கட்டளை பாராட்டுகிறது. RC பத்மா ராஜ்ஷாஹி, பங்களாதேஷின் உறுப்பினர்கள், அமெரிக்காவின் ஜார்ஜியாவின் நார்த் கொலம்பஸ் மற்றும் நார்வேயின் கிறிஸ்டியான்சண்ட் ஆகிய ரோட்டரி சங்கங்கள் மற்றும் பங்களாதேஷின் மெட்ரோபாலிட்டன் ராஜ்ஷாஹியின் ரோட்டராக்ட் சங்கம் ஆகியவற்றின் ஆதரவுடன், தங்கள் திட்ட வடிவமைப்பில் தொடர்ந்து முன்னேறி வருகின்றனர் மற்றும் பொருட்கள் கிடைக்கும் போது HPV தடுப்பூசிக்காக ஆதரவளிப்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

வீட்டிலேயே பிரசவிப்பதால், இந்த உள்ளூர் அரசாங்கப் பகுதிகளில் நாங்கள் கவனம் செலுத்தினோம்,'' என்கிறார் லுஃபாடேஜு.

பின்னர், ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு முக்கிய மகளிர் மருத்துவ நிபுணர், மகப்பேறு மருத்துவத்தின் பரந்த துறை முழுவதும் தர உத்தரவாதத்தில் கவனம் செலுத்த பரிந்துரைத்தார்: அதாவது, வசதிகள் மற்றும் உபகரணங்களின் தரம், செயல்முறையின் தரம் மற்றும் முடிவுகளின் தரம். 2008ம் ஆண்டில், ரோட்டரி உறுப்பினர்கள் தாய்வழி இறப்புகள் பற்றிய தகவல்களை சேகரிக்கத் தொடங்கினர், எந்த தலையீடுகள் மிகவும் அர்த்தமுள்ளதாக இருந்தன என்பதைத் தீர்மானிக்க இவை உதவுகின்றன - எத்தனை தாய்மார்கள் இறந்தார்கள் என்பதை மட்டும் பார்க்காமல், எதனால் இறந்தார்கள் என்பதையும் ஆய்வு செய்தனர். 2011ல் வெளியிடப்பட்ட ஒரு அறிவியல் ஆய்வு, இந்தத் திட்டம் தாய் சேய் இறப்பு விகிதத்தை 50 சதவிகிதம் குறைத்துள்ளது என்று தெரிவித்தது.

விரைவில், நைஜீரியாவின் கூட்டாட்சி அரசாங்கம் தாய்வழி மற்றும் பிறப்பு இறப்பு கண்காணிப்பு மற்றும் பதிலளித்தல் குறித்து வேலையை தொடங்கியது. இது உலக சுகாதார அமைப்பால் பரிந்துரைக்கப்பட்ட தாய்வழி இறப்பு தணிக்கை. ரோட்டரி உறுப்பினர்கள் இந்த தணிக்கை தங்களின் தர உறுதிப் பணிக்கு ஒத்ததாக இருப்பதை உணர்ந்து, அந்த வேலையில் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தனர். அவர்கள் ஒரு ஜெர்மன் புள்ளிவிவர நிபுணருடன் தங்கள் தரவை மின்னணு வடிவத்தில் மாற்ற வேலை செய்து கொண்டிருந்தனர், மேலும் 2018 இல் அவர் உருவாக்கிய டிஜிட்டல் தளம் நைஜீரிய சுகாதார அமைப்பில் ஒருங்கிணைக்கப்பட்டது.

நைஜீரிய அரசாங்கத்துடன் இணைந்து, எட்டு-மாநில மின்னணு கண்காணிப்புத் திட்டமாக ஆரம்பித்தது நாடு முழுவதும் பரவியது. ரோட்டரி திட்டம் உள்ளூர், மாநில மற்றும் தேசிய அளவிலான மருத்துவ அதிகாரிகளுக்கு தகவல்களை சேகரித்து மதிப்பாய்வு செய்வதில் பயிற்சி அளித்தது, மேலும் இது நைஜீரிய பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதாவை அறிமுகப்படுத்துவதில் அரசாங்க அதிகாரிகளுக்கு ஆதரவளித்தது, இதற்கு தாய்வழி இறப்பு பற்றிய துல்லியமான அறிக்கை தேவைப்பட்டது. நைஜீரியாவில் தாய்வழி மரணத்தை அறிவிக்கக்கூடிய நிபந்தனையாக மாற்றியுள்ளோம். இனி அதை மறைக்க முடியாது.

நைஜீரியாவில் ஆரோக்கியமான குடும்பங்களுக்காக ஒன்றிணைவோம் திட்டம் முந்தைய கட்டங்களில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்களை எடுத்து, மூன்று நைஜீரிய மாநிலங்கள் மற்றும் கூட்டாட்சி தலைநகர் பிரதேசத்தில் திட்டத்தை சீரமைத்து செயல்படுத்தும்.

"நாட்டில் உள்ள மற்ற மாநிலங்களிலும், ஆப்பிரிக்காவின் பிற பகுதிகளிலும் செயல்படுத்த ஒரு நல்ல மாதிரியை வழங்க நாங்கள் விரும்புகிறோம்,'' என்கிறார் லுஃபாடேஜு. திட்டத்தின் நிலைத்தன்மைக்கு ஒத்துழைப்பு முக்கியமானது. "ஆரம்பத்திலிருந்தே, அரசாங்கத்துடன் இந்த தொடர்பு

இருந்தது, ஏனெனில் நாங்கள் நிலைத்தன்மை மற்றும் எதிர்கால நிதியுதவி பற்றி யோசித்துக் கொண்டிருந்தோம். நீங்கள் ஆப்பிரிக்காவில் ஒரு திட்டத்தைச் செய்ய விரும்பினால், அதை அரசாங்கம், பாரம்பரிய ஆட்சியாளர்கள் அல்லது அரசியல் தலைவர்கள் இல்லாமல் செய்தால், நீங்கள் முடித்தவுடன், திட்டம் இறந்து விடும்.'' என்று அவர் கூறுகிறார்.

நைஜீரியாவில் போலியோவை ஒழிப்பதில் ரோட்டரி செய்த விரிவான பணியை அடித்தளமாக கொண்டு இந்த திட்டம் செயல்படுகிறது.

Tsehai loves learning
(இறுதிப் போட்டியாளர்)
இடம்: எத்தியோப்பியா

முன்மொழிவு: செஹாய் லவ்ஸ் லேர்னிங் என்பது விஸ் கிட்ஸ் ஒர்க்ஷாப் தயாரித்த பிரபலமான தேசிய தொலைக்காட்சி நிகழ்ச்சியாகும், இது செஹாய் என்ற 6 வயது பெண் ஒட்டகச்சிவிங்கி பொம்மையின் உதவியோடு பள்ளி தயார்நிலையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. செஹாய் லவ்ஸ் லேர்னிங் பாடத்திட்டம் அடிஸ் அபாபாவில் உள்ள 40 பொதுப் பள்ளிகளில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் நாட்டின் பிற பகுதிகளுக்கும் பாடத்திட்டத்தை விரிவுபடுத்தும்.

நடுவர்கள் கூறுவது: எத்தியோப்பியாவில் சிறுவயது கல்வியால் சமூகத்தின் மனநிலையை மாற்றுவதில் ரோட்டரியின் ஆற்றல் வலுவானது.

ரோட்டரியின் பங்கு: இந்த திட்டத்திற்கு RC அடிஸ் அபாபா-வெஸ்ட் மற்றும் எத்தியோப்பியாவில் உள்ள மற்ற ஏழு ரோட்டரி மற்றும் ரோட்ராக்ட் சங்கங்கள் நிதியுதவி செய்கின்றன. ரோட்டரி உறுப்பினர்கள் பள்ளிகளில் தன்னார்வலர்களாக செல்கின்றனர்.

முதன்மை பங்காளர்கள்: எத்தியோப்பியாவின் மத்திய கல்வி அமைச்சகம், கல்விக்கான பிராந்திய பணியகங்கள் மற்றும் கல்வி ஊடகம் மற்றும் விளையாட்டு அடிப்படையிலான கற்றலில் கவனம் செலுத்தும் எத்தியோப்பிய சமூக நிறுவனமான விஸ் கிட்ஸ் ஒர்க்ஷாப்.

எதிர்பார்க்கப்படும் முடிவு: 11 நகரங்களில் உள்ள பொதுப் பள்ளிகளில் 88,000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பள்ளி தயார்நிலை மற்றும் கற்றல் விளைவுகளை 80–90 சதவீதம் வரை அதிகரிக்க வேண்டும்.

நிலைத்தன்மை உதவிக்குறிப்பு: பாடத்திட்டம் மற்றும் பாத்திரங்கள் உள்நாட்டில் உருவாக்கப்பட்டு தேசிய குழந்தைப் பருவ மேம்பாடு மற்றும் கல்விக் கொள்கைக்கு ஏற்றார்போல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

டிமென்ஷியா பராமரிப்பு
(இறுதிப் போட்டியாளர்)
இடம்: இத்தாலி

முன்மொழிவு: தரமான பொது மற்றும் தன்னார்வ சேவைகளுடன் ஒரு புதிய மருத்துவப் பாதையை உருவாக்குவதன் மூலமும், டிமென்ஷியாவின் சமூக இழிவைக் குறைப்பதன் மூலமும் அறிவாற்றல் குறைபாடுகள் உள்ள முதியவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

நடுவர்கள் கூறுவது: விரைவாக வயதான மக்கள்தொகை கொண்ட நாட்டில் பாதிக்கப்படக்கூடிய மக்களை ஆதரிப்பதற்காக புதிய பரிமாணத்தை கொண்ட செயல்வீரர்களை இந்த திட்டம் உருவாக்குகிறது. இதில் பயன்பெறும் முக்கிய சமூக உறுப்பினர்கள் முதுமை மறதியுடன் வாழ்பவர்களாக இருந்தாலும், இந்த திட்டம் குடும்ப உறுப்பினர்களையும் ஆதரிக்கிறது.

ரோட்டரியின் பங்கு: RC செசெனா, RAC செசெனா, RCs செசெனா-வல்லே டெல் சாவியோ மற்றும் வாலே டெல் ரூபிகோன் ஆகியவற்றின் உறுப்பினர்களுடன் இணைந்து, அல்சைமர் நோயாளிகளுக்கு ஆதரவளிகின்றனர்.

எதிர்பார்க்கப்படும் விளைவு: முதுமை மறதிக்கான புதிய நோயறிதல்களை 10 சதவிகிதம் மற்றும் மறுவாழ்வு சேவைகளில் பங்கேற்கும் நோயாளிகளை 80 சதவிகிதம் அதிகரிக்க வேண்டும். நெருக்கடியான சூழ்நிலைகளில் டிமென்ஷியா நோயாளிகளின் அவசரக்கால சேர்க்கையை குறைந்த பட்சம் 70 சதவிகிதம் குறைக்க வேண்டும்.

நிலைத்தன்மை உதவிக்குறிப்பு: பிராந்திய சுகாதார ஆணையத்துடன் கூட்டுசேர்வதன் மூலம், இந்த திட்டம் பிராந்திய அரசாங்கத்தின் மூலோபாய திட்டமாக மாறும்.

விளக்கப்படங்கள்: க்வென் கெரவல்

©Rotary

வளம் குன்றாப் பொம்மைக் கதை

ப்ரீதி மேஹரா

குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள் பாதுகாப்பாகவும் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் இருப்பதை உறுதிசெய்ய கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நீங்கள் எந்த ஒரு பொம்மைக் கடைக்கும் செல்லுங்கள், பல சாயல்கள், வடிவங்களில் பிளாஸ்டிக் அங்கு ஆதிக்கம் செலுத்துவதைக் காண்பீர்கள். பொம்மைகளில் தொடங்கிக் கட்டும் தொகுதிகள், சிறுவர்களுக்கான கிரிக்கெட் மட்டைகள், எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய உள் சறுக்கு மரங்கள், பல்லால் கடிக்கும் வளையங்கள், குளியல் பொம்மைகள்… எல்லாம் பிளாஸ்டிக்தான். இதைப் பார்த்தால் பிளாஸ்டிக் இல்லாத உலகத்தில் பொம்மைகளும் இருக்காது என்று தோன்றலாம்.

இந்தப் பொம்மைகளை விற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ள விற்பனைப் பிரதிநிதிகள், ‘இவை பாதுகாப்பான, நச்சு இல்லாத பிளாஸ்டிக்கில் செய்யப்பட்டவை’ என்று உங்களுக்கு உறுதி சொல்வார்கள். ஆனால், அது முழு உண்மையா? எப்படிப் பார்த்தாலும், பெரும்பாலான பிளாஸ்டிக் பொம்மைகளில் அவற்றில் உள்ள வேதிப் பொருட்கள் தெரிவிக்கப்படுவதில்லை. அதனால், வண்ணமயமான ஒரு பொம்மை பாதுகாப்பானதா அல்லது ஒரு குழந்தை அதைத் தன் வாயில் போட்டால் அது தீங்கான வேதிப் பொருட்களைக் கசியவிடுமா என்று உறுதிப்படுத்துவது கடினம்.

2021ல் ஐநா சுற்றுச்சூழல் திட்டத்தின் (UNEP) அறிக்கை ஒன்று குழந்தைகளுக்கான பிளாஸ்டிக் பொம்மைகளில் 25%ல் தீங்கு தரும் வேதிப் பொருட்கள் உள்ளதாகக் கண்டறிந்தது. குழந்தைகளுக்கான பொம்மைகளில் பயன்படுத்தப்படும் கடினமான, மென்மையான, நுரைப் பிளாஸ்டிக் பொருட்களில் காணப்படும் 419 வேதிப் பொருட்களில் 126 குழந்தைகளுடைய நலனுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடும் என்று இந்த ஆய்வு கண்டறிந்தது. இதில் 31 பிளாஸ்டிசைஸர்கள், 18 தீயைத் தடுப்பவை மற்றும் எட்டு நறுமணங்கள் உள்ளன. “இந்தப் பொருட்களைப் பொம்மைகளில் இருந்து படிப்படியாக அகற்றி, இன்னும் பாதுகாப்பான மாற்றுப் பொருட்களைக் கொண்டுவருவதற்கு முக்கியத்துவம் தரவேண்டும்” என்று இந்த ஆய்வு பரிந்துரைத்தது.

ஒருவேளை இந்தப் பிளாஸ்டிக் பொம்மைகள் பாதுகாப்பானவை, நச்சு இல்லாதவை என்றால்கூட, உலக அளவில் சுற்றுச்சூழலுக்கு எதிரான உள்ளார்ந்த இயல்பைக் கொண்டதாக அறியப்பட்டிருக்கும் ஒரு பொருளின் பயன்பாட்டை நீங்கள் ஊக்குவிக்கவேண்டுமா என்ற நெறி சார்ந்த பெரிய கேள்வி இருக்கிறது. உங்கள் குழந்தை வளர்ந்தபிறகு அந்தப் பொம்மைகளும் கட்டுமானச் செங்கல்களும் எங்கு செல்லும்? அவை கண்டிப்பாகக் குப்பைத் தொட்டிக்குதான் செல்லும், அங்கிருந்து, ஊருக்கு வெளியில் உள்ள குப்பை மலைகளுக்குச் செல்லும்.

உண்மையில், கிராமப் புற இந்தியாவில் மிகச்

சிறந்த, ஆர்வ மூட்டுகிற, சுற்றுச் சூழலுக்கு இதமான மாற்றுகள் உள்ளன. தில்லியில் உள்ள இயற்கைச் சந்தையில் நீங்கள் பல நேரங்களில் மிகச் சிறந்த மாற்றுப் பொம்மைகளைக் காணலாம்: நாணலால் செய்யப்பட்ட, இயற்கை விதைகள் நிரப்பப்பட்ட, கிலுகிலுப்பைகள். அல்லது, வீணான துணித் துண்டுகள் மற்றும் கம்பளி எச்சங்களால் உருவாக்கப்பட்ட வண்ண பொம்மைகள் இவை அனைத்தும் பாதுகாப்பானவை, துவைக்கக்கூடியவை.

அதனால், அடுத்த முறை நீங்கள் உங்கள் குழந்தைக்கு ஒரு பரிசு வாங்க விரும்பும் போது இந்த அறிவுறுத்தல்களை நினைவில் கொள்ளுங்கள்: மர வண்டி அல்லது மரத் தொகுதிகள், அட்டைப் பலகை ஜிக்ஸா புதிர்கள், ரப்பர் பந்துகள் அல்லது மரத்தால் ஆன சதுரங்கப் பலகை அல்லது பலகை விளையாட்டுகளை வாங்குவது நல்லது.

இன்று சில உற்பத்தியாளர்கள் கூடப்பாதுகாப்பான, சுற்றுச் சூழலுக்கு இதமான பொம்மைகளை வடிவமைக்க உறுதி கொண்டுள்ளார்கள். எடுத்துக் காட்டாக, லெகோ நிறுவனம் 2030க்குள் தன் செங்கற்களை 100% வளம் குன்றாதவையாக ஆக்க வாக்களித்துள்ளது. ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியிலும் பொம்மைத் தொகுப்பு ஒன்றை உருவாக்கி பொம்மைகளை நன்கொடையாகப் பெற்றால், நம் குழந்தைகளுக்கும் நமக்கும் இன்னும் பசுமையான ஓர் உலகம் கண்டிப்பாகக் கிடைக்கும்.

வருத்தமான விஷயம், மற்ற சில நாடுகளைப்போல் இந்தியாவில் குழந்தைகளுக்கான பொம்மைகளுக்குக் கண்டிப்பான வழிகாட்டுதல்கள் இல்லை. பொம்மை தொடர்பான காயங்களும் பொதுவாகக் காணப்படுகின்றன. பொம்மைகளுக்குப் பரிந்துரைக்கப்படுகிறவை, ஒரு பார்வை:

- துணி பொம்மைகள் தீயை எதிர்ப்பவை அல்லது தடுப்பவை என்று குறிக்கப்படவேண்டும்.
- திணிக்கப்பட்ட பொம்மைகள் துவைக்கக்கூடியவையாக இருக்கவேண்டும்.
- வண்ணம் பூசப்பட்ட பொம்மைகள் ஈயம் இல்லாத வண்ணத்தைப் பயன்படுத்தவேண்டும்.
- கிரேயான்கள் போன்ற கலைப் பொருட்கள் நஞ்சு இல்லாமல் இருக்கவேண்டும்.

மிகச் சிறிய குழந்தைகள் விளையாடும்போது பெற்றோர் அவர்களைக் கண்காணிக்கவேண்டும், எந்த ஒலி எழுப்பும் பொம்மையும் குழந்தைகளின் காதுகளுக்கு கேடு விலைவிக்காதவையாக இருக்கவேண்டும். குழந்தைகளின் பொம்மைகளை அவ்வப்போது கண்காணித்து அவை நல்ல வடிவத்தில் உள்ளனவா என்று பார்க்கவேண்டும். ஏனெனில், உடைந்த பொம்மைகளில் கூரான விளிம்புகள் இருக்கலாம், மரப் பொம்மைகளில் பிளந்த பகுதிகள்

இருக்கலாம். இவை குழந்தைகளைக் காயப்படுத்தலாம்.

எனினும், குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்களை வாங்கும்போது செய்யக்கூடிய மிகச் சிறந்த செயல்கள்: தீவிர ஆராய்ச்சி செய்தல், மிகுந்த பசுமை கொண்ட தீர்வுகளைத் தேர்ந்தெடுத்தல், பிற பெற்றோருடன் பேசுதல், வற்புறுத்தலால் பாதுகாப்பற்ற பொருட்களை வாங்காமல் இருத்தல். குழந்தைகள் முதன்மையானவர்கள், ஆபத்துக்கு ஆளாகக்கூடியவர்கள், அதனால், நீங்கள் வழங்கக்கூடிய மிகச் சிறந்தவைதான் அவர்களுக்குக் கிடைக்கவேண்டும். நினைவிருக் கட்டும், பொம்மைகளை வாங்கும் போது எப்போதும் கை கொடுக்கிற ஒரு முதன்மையான விதிமுறை: ஒரு பொம்மையைப்பற்றி ஐயம் எழுந்தால், அதை வாங்கவேண்டாம்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

Wordsworld

Goan Rhapsody

Sandhya Rao

For all its massive size, the most recently named winner of the International Booker Prize is perfectly offset by its light-weight, quirky writing.

Konkani writer Damodar Mauzo's stories gently lead the reader deep into a world of real experiences — multilingual, multicultural, multireligious — laced with irony.

If you are looking for a quick read that's easy yet mindful, pick up *The Wait and Other Stories* by Damodar Mauzo, translated from Konkani by Xavier Cota. Although the book had been bought a while ago, I studiously avoided reading reviews of it until I had finished reading it myself. I had, many years ago on a week-long visit to Goa, been introduced to Mauzo through his Sahitya Akademi Award-winning novel, *Karmelin*. Hence the excitement of self-discovery.

The path-breaking *Karmelin*, which I read in English translation by Vidya Pai, recounts the story of a woman who takes up a maid's position with a rich family in the Gulf in order to escape from her tribulations at home and for possible financial security. Like a lot of translations, this one too was not 'smooth' reading in the way, for instance, *Tomb of Sand* (see last month's Worldsworld) is. But the storytelling is gripping and the story a glorious examination of truth. When I read *The Wait*, there was an epiphany of sorts regarding translations. It felt like walking on a pebbly beach where the sound of water leaving the shore produces a tinkling sound. The comparison is, of course, with a sandy beach where the sound that dominates is the soft or loud whoosh of the waves.

To clarify: *Tomb of Sand* has been translated brilliantly; you never feel the burden of translation, it reads like an original. Here and there, however, some words and phrases have been used that an Indian speaker/writer of English would almost never use. Since a friend has borrowed my copy of the book, I cannot substantiate this with an example. You may have read or heard the phrase 'in back' in an 'English' book or in conversation with an American. Indians would probably say 'in the back'. Or, to give you a more common example: 'Can I have the check please' as against 'Can I have the bill please'. That is to say, translations, even the truest ones, invariably reflect the language of the translator. Hence the 'English-ness' of *Tomb of Sand* and the 'Konkani-ness' of *Karmelin* and *The Wait*. I will not try to explain further; I leave it to you to observe keenly the next time you read a translated work.



The Wait is a collection of 14 short stories, each quite different from the other, reflecting the pluralistic character of Goan/Indian society.

The Wait is a collection of 14 short stories, each quite different from the other, reflecting the pluralistic character of Goan/Indian society. In it you will meet all kinds of characters in all kinds of situations. You catch a glimpse of what lies beneath the surface and begin to understand the underlying social criticism in a gentle narrative.

There's a taxi driver who calls himself Yasin, Austin, Yatin, depending upon who he is driving at the time. There's a little girl who suffers pangs of conscience because she shared a nonvegetarian burger with her vegetarian friend. There's a 'gentleman' thief, and a man hung up on external beauty who cannot bear the deterioration of those attributes. We see attachment, cowardice, one-sided love, power games, daydreams and night dreams… reading these stories you understand

that Mauzo is a keen observer of life and emotions, and we all know that life and emotions are a pretty complex business. The stories touch upon all of this in a seemingly simple way and leave you reflecting upon them long after the story has ended. In other words, the story in the book has ended, but the story in the life described continues. The references to current events only strengthen this notion.



So, who is Damodar Mauzo? He is the latest winner, the 57th, of India's oldest and highest literary honour, the Jnanpith Award, for 'outstanding contribution towards literature', and only the second Konkani writer after Ravindra Kelekar to earn it. He lives in Majorda village, Goa, and has been writing for about 50 years. He says, 'I think I am a writer because I am a good reader.' Thanks to observations made by Mauzo in an interview with Arti Das published in *Firstpost* recently, I came to know that the Konkani script is mired in controversy. Valerian Rodriguez, in an August 2013 article in *EPW*, writes, 'Konkani is a unique language. It is probably the only language in India which is written in five scripts — Roman, Nagari, Kannada, Persian-Arabic and Malayalam — with credible oral and written literature in each of them.' In this connection, Mauzo says, 'When we are speaking about the script, it usually gets associated with identity and then it gets political. The script is not identity, language is.'

Rodriguez points out that 'For many Konkani lovers emotionally attached to the language, the script controversy endangers the impressive strides the language movement has made in the last fifty years, i.e., a separate political identity for Goa which was achieved in 1967; the recognition of Konkani by the Central Sahitya Akademi in 1975; the recognition of Konkani as the official language of administration for Goa in 1987; and the inclusion of Konkani in the Eighth Schedule of the Constitution, which lists the major national languages, in 1992.' Those interested in this issue, do please look up the article.

In the *Firstpost* interview, Mauzo says of his believable delineations of female characters, 'I believe that within me there are my father and my mother. Also, I was more attached to my mother while growing up. Probably that's why I may be in a better position to understand their situation.' And about creativity and the growing threat to freedom of expression, he says, 'I feel now that the responsibility of the writer is increased. Literature is also a reflection of the times we live in. A writer must ask questions, and raise issues, and for that, there is no need to be aggressive about it. One can do it subtly and more responsibly. I hope that in times to come the people who are opposing such things will realise that was nothing wrong with it.'

Damodar Mauzo

This little extract from 'Burger' reveals much of Mauzo's genius:

'…Daddy returned home for lunch, it being a half-day. Mummy immediately told him, "Ever since she gave beef to her Hindu friend, Irene has been moping."

'Daddy laughed. "Never mind, Irene. Since you have defiled her, now we'll have to find her a nice Catholic boy and marry her off!"

'Irene could not fathom whether her father was serious or just pulling her leg. She thought of asking him directly but got up instead and silently went inside.

'So she had defiled Sharmila. But what she actually done? The word "defile" has a stink to it. To say that she had defiled her meant that she had spoiled her. Daddy said we had to find a Catholic groom and marry her off. As if we can do this! Marriage has to be a question of one's own choice. Daddy himself says that the days of parents searching for partners for their girls are over. And in books, too, we read the same thing. Poor Sharmila! Irene hoped nothing bad would happen to her.'

The world of *The Wait* is multicultural, multireligious, multilingual. It is filled with events and flavoured with a gamut of emotions. It's a real world of sounds, smells, tastes and images. I savoured every one of the stories with delight. I invite you to do the same. You will not be disappointed.

The columnist is a children's writer and senior journalist

RC **சிதம்பரம் சென்ட்ரல்** — RID 2981

செட்டிநாடு சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, பழனி பாபு ஜுவல்லர்ஸ் உடன் இணைந்து நடத்தப்பட்ட இதயப் பரிசோதனை முகாமில் சுமார் 200 நோயாளிகள் பலன் பெற்றனர்.

RC **தில்லி ரெகாலியா** — RID 3011

DG அசோக் கன்டூர் தொடங்கிவைத்த நல முகாமில் 240 நோயாளிகளுக்கு TB, கல்லீரல், ரத்தச் சர்க்கரை, தைராய்டு, எலும்பு அடர்த்தி, ECG, ஆக, வாய், கருப்பை வாய்ப் புற்றுநோய்ப் பரிசோதனைகள் நடைபெற்றன.

RC **ராசிபுரம் ராயல்** — RID 2982

விவசாயக் குடும்பம் ஒன்றிற்கு, ரூ.22,000 விலையுள்ள, பால் கொடுக்கும் பசு ஒன்றை உதவி ஆளுநர் K ரவி அவர்களுக்கு கொடையளித்தார்.

RC **நாசிக் கிரேப்சிட்டி** — RID 3030

நாசிக்-கில் உள்ள ஜெஷ்ட நக்ரிக் மித்ர மண்டலில், சிங்கர் தையல் இயந்திரத் தயாரிப்பு நிறுவனத்துடன் இணைந்து ஒரு திறன் மையம் அமைக்கப் பட்டுள்ளது.

RC **புதுக்கோட்டை** — RID 3000

அன்னவாசல், கலமாவூர் கிராமங்களில் உள்ள சிறப்பு இல்லத்துக்கு அரிசி, பிற மளிகைப் பொருட்கள் கொடையளிக் கப்பட்டன.

RC **சண்டிகர்** — RID 3080

பஞ்ச்குலாவில் உள்ள ஹரிப்பூர் கிராமத்தில் 30 HIV/எயிட்ஸ் நோயாளி களுக்கு ரேஷன் பொருட்கள் வழங்கப்பட்டு, கிராமத்து மக்களுக்கு மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டது.

செய்திகள்

RC **நபா கிரேட்டர்** — RID 3090

பாய் கஹன் சிங் நபா அரசுப் பெண்கள் பள்ளி மாணவிகளுக்கு ரூ.38,000 மதிப்புள்ள பள்ளிச் சீருடைகள் வழங்கப்பட்டன.

RC **புணே சிவாஜிநகர்** — RID 3131

Ezest தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதி உதவியுடன் லைட்ஹவுஸ் என்ற NGO உடன் இணைந்து மின் தளம் வழியாக 200 மாணவர்களுக்கு டிஜிட்டல் திறன்கள் கற்றுத்தரப்பட்டன.

RC **மொராடாபாத் நார்த்** — RID 3100

RC பூனா டௌன்-டவுன் ஆதரவுடன் நடத்தப்பட்ட LN-4 முகாமில், தேவையுள்ள 300க்கும் மேற் பட்டோருக்குச் செயற்கைக் கைகள் பொருத்தப் பட்டன.

RC **கரட்** — RID 3132

உண்டாலே-யில் உள்ள கிராமப்புற மருத்துவ மனையுடன் இணைந்து பொது மக்களுக்கு ஹெபடைடிஸ் பற்றிய விழிப் புணர்வை உண்டாக்கும் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

RC **கோரக்பூர் மிட்-டவுன்** — RID 3120

சென்ற ஆண்டு 65 கண் முகாம்கள் நடத்தப்பட்டு 16,000 நோயாளிகள் பலன் பெற்றார்கள். சுமார் 2,000 கண் புரை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன.

RC **தியோனர்** — RID 3141

Firstcry இணையக் கடையுடன் இணைந்து, மன்குர்ட் பகுதியில் உள்ள ஒரு சேரிக் குடியிருப்பில் 200 குழந்தை களுக்குப் புதிய ஆடைகள் வழங்கப்பட்டன.

RC உல்ஹாஸ்நகர் — RID 3142

ரக்ஷா பந்தனை முன்னிட்டு, மையக் காவல் நிலையத்தில், காவல் துறை யினருக்குச் சங்க உறுப்பினர் களும் ரோட்டராக்டர்களும் ராக்கி-களைக் கட்டினார்கள்.

RC கோட்டா சிட்டி — RID 3182

ரோட்டரியன்களும் ஆன்களும் அரை ஏக்கர் தரிசு நிலத்தில் வேளாண்மை செய்தார்கள், ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களுக்கு அரிசி மூட்டை களைக் கொடை யளிப்பார்கள்.

RC ஹூப்ளி ஈஸ்ட் — RID 3170

நலிந்த பிரிவைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் பல இடங்களுக்குச் சென்றுவர உதவுவதற்காக அவர்களுக்குச் சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.

RC கொச்சின் பீச்-சைட் — RID 3201

முன்னாள் A G Rtn ராஜகோபால் அவர்களுடைய நினைவு நாளை முன்னிட்டு, அடிப்படைப் பொருட்களைக் கொண்ட 55க்கும் மேற்பட்ட பொதிகள் ஏழைக் குடும்பங்களுக்குப் பரிசளிக்கப்பட்டன.

RC சாமராஜநகர் — RID 3181

ரோட்டரி கூடத்தில் மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக் கிழமை நடை பெற்று வரும் கண் முகாமில் சுமார் 2,630 நோயாளிகள் பரிசோதிக்கப் பட்டார்கள்.

RC மேட்டுப்பாளையம் பிரைம் — RID 3203

120க்கும் மேற்பட்டோர் மார்பகப் புற்று நோய்க்காகப் பரிசோதிக்கப் பட்டார்கள், 10 பேருக்குக் கூடுதல் பரிசோதனைகள் நடைபெற உள்ளன.

செய்திகள்

RC **ஒடயாஞ்சல்** — RID 3204

அட்டென்கானத்தில் உள்ள அரசு உயர் நிலைப்பள்ளி மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப் பட்டன.

RC **இம்ஃபால்** — RID 3240

மணிப்பூர் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற முகாமில் சுமார் 130 யூனிட் ரத்தம் திரட்டப் பட்டது.

RC **ஆலப்பி கிரேட்டர்** — RID 3211

சங்கத் தலைவர் கர்னல் விஜயகுமார் தலைமையிலான குழு வெள்ளத் தால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு மருந்துகளை வழங்கியது.

RC **பிலாஸ்பூர் மிட்-டவுன்** — RID 3261

IPDG சுனில் ஃபதக் முன்னிலையில், ரதன்பூரில் உள்ள சரஸ்வதி வித்யா மந்திர் பள்ளிக்கு ரூ.1.75 லட்சம் மதிப்புள்ள 3 கணினித் தொகுதிகள், கல்விப் பொருட்கள் நன்கொடையளிக்கப் பட்டன.

RC **விருதுநகர் எலைட்** — RID 3212

பெண்கள் விடுதி ஒன்றுக்கு ரூ. 9,000 செலவில் தையல் இயந்திரங்கள், நாற்காலிகள் நன்கொடை யளிக்கப் பட்டன.

RI **மாவட்டம்** 3262

DG பிரவுதத்தா சுபுதி ரோட்டரியன் களுக்கு உடல் பரிசோதனை வழங்குவதற் கான தள்ளுபடி அட்டைகளை அப்போலோ மருத்துவமனை யுடன் ஓர் MoUல் கையொப்பமிட்டார்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

The **ROTARY ACTION PLAN**

INCREASE OUR ABILITY TO ADAPT

A CONVERSATION WITH NICKI SCOTT

"We can achieve harmony and amplify the sound if we all play the same tune instead of a staccato selection of solos."

Learn what your club can do at

rotary.org/actionplan

MEET NICKI SCOTT. A change-management consultant and a member of the Rotary Club of The North Cotswolds, England, Scott helped develop our Action Plan as part of Rotary's Strategic Planning Committee. She is the 2022-23 vice president of Rotary International.

Q. Why is increasing our ability to adapt one of the priorities of the Action Plan?

NICKI: Everyone, and every organization, is looking to make a greater societal impact. It's an enormous opportunity for Rotary to be a thought leader and a sought-after partner. But if we want to lead in a time of accelerating change, we need to become — and to be seen as — more agile and relevant.

Q. What are the challenges?

NICKI: As an organization, we're very fragmented and hierarchical. We have rules, officers, titles, and committees instead of teams. The more administrative layers you have, the more removed you are from the actual work.

We need to look at leadership as something anyone at any age can own. You don't need 40 years of experience before you can significantly contribute. Remember, Paul Harris was only 36 when he started Rotary.

Q. Where are you seeing opportunities?

NICKI: Before the pandemic, a large percentage of Rotary members didn't really think or see beyond their club. They didn't have a sense of themselves as a global network of change-makers. During the pandemic, people were joining virtual meetings in different districts and countries and seeing for the first time all the things Rotary was doing.

We're capitalizing on this momentum. I worked with a team in Great Britain and Ireland that started a Rotary global hub, an online platform that connects people to clubs but also gives them the opportunity to participate based on causes rather than location. And their involvement can be episodic rather than tied to a weekly meeting at a specific time. It is proving very successful in both attracting new and retaining existing Rotarians.

I also see Rotary doing more to build on the work of others, to share leadership. In Great Britain and Ireland, we host Volunteer Expo, an event where all kinds of people and organizations can come together and collaborate. We don't have to reinvent the wheel every time.

Q. What structural changes will increase Rotary's ability to adapt?

NICKI: More regional autonomy is key. What might work for one region might not be a cultural fit for another.

We can be much more regionally focused without losing the ideals of a global organization, or losing the power of a global brand. We can achieve harmony and amplify the sound if we all play the same tune instead of a staccato selection of solos.

Q. What makes you most optimistic?

NICKI: Rotary has something powerful to offer. There are a lot of well-meaning organizations out there, but good intentions don't always translate to results. Rotary has the infrastructure and the integrity that people are looking for, and the connections in communities to know what is really needed. We know how to get the job done. We are people of action.

Rotary

பொருளாதார வல்லுநர்களின் ஆராய்ச்சி

TCA ஸ்ரீனிவாச ராகவன்

நான் 16 வயதிலிருந்தே பொருளாதாரத்தில் ஆர்வம் உள்ள மாணவனாக இருந்தேன். மேலும் பொருளாதாரத்தின் மீதான எனது ஈடுபாடு 55 ஆண்டுகள். நான் MA படித்து முடித்த பிறகு, முதன் முறையாக ஒரு பிரிட்டிஷ் புத்தக வெளியீட்டு நிறுவனத்தில் பொருளாதார ஆசிரியராக சேர்ந்தேன். சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்த வேலை சலிக்கவே, பொருளாதாரத்தில் நிபுணத்துவம் பெற்ற பத்திரிகையாளரானேன். பொருளாதார நிபுணர்கள் எப்போதும் மனச்சோர்வுடனும், இருண்ட வாழ்க்கை கண்ணோட்டத் திலேயே இருப்பார்கள். ஆஸ்கர் வைல்டு, எங்களுக்கு எல்லாவற்றின் விலை பற்றி தெரிந்திருந்தாலும் அவற்றின் மதிப்பு தெரியாது என்பார். ஆனால், உண்மையில் அவர்களுக்கும் நகைச்சுவை உணர்வு உண்டு. துரதிருஷ்டவசமாக அதை அவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் சொல்ல விரும்புவதை விநோதமான வழியில் வேடிக்கையாக வெளிப்படுத்தவே விரும்புவார்கள். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், எல்லாவற்றையும்விட குடிப்பழக்கம் பற்றி அவர்கள் செய்த சில விசித்திரமான ஆராய்ச்சிகளை சுருக்கமாக தொகுத்து சொல்கிறேன். போதையில் இருக்கும் பொருளாதார நிபுணர் சோகமாக இருந்தாலும் அவரால்தான் வேடிக்கையாகவும் சிந்திக்க முடியும். இந்த பொருளாதார நிபுணர்கள் மதுவுக்கு எதிராக பழிவாங்கும் போக்கில் செயல்படுகிறார்களோ என்று தோன்றும். அமெரிக்க பொருளாதார வல்லுநர்கள் செய் அல்லது செத்துமடி என்ற அணுகுமுறையில் அறிவுத்திறனை வெளியிடுவதில் முன்னணியில் உள்ளனர்.

ஒரு ஆராய்ச்சி இப்படிக் கூறுகிறது. மதுபானங்களின் விலை அதிகரித்து காணப்படும்போது நுகர்வோர் எத்தனாலை குறை வாகக் குடிப்பார்கள். வாவ் யாரால் இப்படி ஊகிக்க முடியும்? மற்றொரு முடிவு, அமெரிக்காவில் வெள்ளையர்களைவிட கருப்பர்கள் குறைந்த அளவில் மதுபான விருந்தில் பங்கேற்கிறார்கள் என்பதுதான். வெள்ளையர்களுக்கும் அவர்களுக்கும் பல்வேறு மாறுபாடுகள் இருப்பதால் அவர்களின் பங்கேற்பை விளக்க முடியாது. ஆனாலும் விலை மற்றும் விளம்பரம் பெண்களை அதிகம் ஈர்க்கும்.

மூன்றாவது எனக்கு உண்மை யிலே பிடித்திருந்தது. இது இளம் வயதினரின் அளவுக்கு அதிகமான குடிப்பழக்கம் பற்றியது மற்றும் ஒரு தசாப்தத்திற்கு பிறகு அவர்கள் வேலை தேடும் வாய்ப்புகளின் தாக்கம் பற்றியது. இதில் பெண் களுக்கு நல்ல செய்தி. அவர்களுக்கு இளம் பருவத்தில் குடிப்பது மற்றும் இளம் வயது ஊதியம் தொடர்பில்லாதது. மேலும் கல்விச் சாதனைகள் நிலையாக இருந்தால் வேலையின்மையின் எதிர்மறையான விளைவுகள் மறைந்துவிடும். ஆனால், ஆடவர்களுக்கு இது கெட்ட செய்தி. வேலையின்மையின் விளைவுகள் மற்றும் நேர்மறையான ஊதியங்கள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இளம் வயதினர் அதிகம் குடிப்பதால் அவர்களிடமிருந்த அறியப்படாத திறமைகள் வெளிப்படுகிறது. இதனால் அவர்கள் முதலாளிகளால் வெகுமதி அளிக்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறார்கள் என்று பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர். இது உண்மையா?

நான்காவது உண்மையிலேயே அற்புதமானது. தனிநபர் குடிப் பழக்கத்தை குறைப்பதன் மூலம் சிலர் குடிப்பழக்கத்தை கைவிட்டு விட்டு விரைவில் இறக்க நேரிடும் சாத்தியத்தை ஆராய்கிறது. சில தரவுகளின் அடிப்படையில் குடிப் பழக்கத்தை ஒரு சதவீதம் குறைப்பதன் மூலம் இறப்பை நீண்ட காலம் தள்ளிப்போடலாம் என்பது தேவையில்லாதது என்கின்றனர் சிலர்.

ஐந்தாவதாக குறிப்பிடப்படுவது, பீர்கள் மீதான அதிக வரி விதிப்பு தாக்குதல் சம்பவம் குறைய வழிவகுக்கும் என்பது. ஆனாலும் பாலியல் பலாத்காரம் அல்லது கொள்ளை சம்பவங்களுக்கு வழிவகுக்காது.

ஆறாவது மதுபான கொள்கைகள் (உதாரணமாக பீர் மீதான வரிகள், மதுவிற்பனை சட்டங்கள், குடித்து விட்டு வாகனம் ஓட்டுதல்) வளர் பருவத்தினர் மற்றும் இளைஞர்களிடையே பால்வினை நோய் மற்றும் எய்ட்ஸ் பரவும் விகிதத்துடன் தொடர்புடையது. பீர்க்கு அதிக வரிவிதித்தால் ஆண்களிடையே பால்வினை நோய் பாதிப்பு விகிதம் குறையும்.

ஏழாவது குடிப்பழக்கத்துக்கும் குடும்ப வன்முறைக்கும் இடையிலான தொடர்பை ஆராய்கிறது. பீர் உள்ளிட்ட மதுபானங்கள் மீதான வரிகளை அதிகரிப்பதன் மூலம் குடும்ப வன்முறையை குறைக்க முடியும்.

எட்டாவது விஷயம் குடிபோதை யில் பாலியல் செயல்பாட்டின் விளைவை ஆராய்கிறது. பதின் வயதினர் மற்றும் இளைஞர் களிடையே ஆல்கஹால் பயன்பாடு பாலியல் உறவு வேண்டுமா வேண்டாமா என்பதை தீர்மானிப்பதில்லை என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். எனினும் ஆல்கஹால் பயன்பாடு பாலியல் செயல்பாட்டில் ஈடுபடுபவர்களிடையே கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்துவதை குறைக்கலாம்.■

ADVT.

Rotary

VISAKHA VISTA

New horizon

Rotary Institute - 2022

Zone 4,5,6,7

IMAGINE ROTARY

9th to 11th December, 2022

REGISTER HERE

rotaryinstitute2022.com

Venue

Radisson Blu Resort

Visakhapatnam, Andhra Pradesh

GETS/GNTS

30th Nov to 1st Dec, 2022

W Abu Dhabi- Yas Island
United Arab Emirates

TRF Seminar

8th Dec, 2022
3:00 PM to 10:30 PM
Visakhapatnam

DG Mid-Year Review Meet
District Trainers Seminar
Women in Rotary
Rotaractors Seminar

9th Dec, 2022 10:00 AM to 1:00 PM
Visakhapatnam



JENNIFER E. JONES
CHIEF GUEST
ROTARY INTERNATIONAL PRESIDENT 2022-23

Dr. MAHESH KOTBAGI
CONVENOR
ROTARY INTERNATIONAL DIRECTOR 2021-23

KISHORE KUMAR
CHAIRMAN
PAST DISTRICT GOVERNOR 3020

CONTACT

PDG Ch. Kishore Kumar
Chairman | +919849487870

PDG Dr. E.K. SAGADHEVAN
Chairman - Promotion | +919994477725

Email
rotaryinstitute2022@gmail.com

Registered No. TN/CCN/677/2022-2024 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

FORMERLY **ICG**

IIS (deemed to be **UNIVERSITY**) **JAIPUR**

UNDERGRADUATE PROGRAMMES

- **B.A.**
- **B.A. Hons.**
- **B.Sc.**
- **B.Sc. Hons.**
- **B.Com.**
- **B.Com. Hons.**

SPECIALIZED PROGRAMMES

- **B.Com. Hons.** (Proficiency in Chartered Accounting/ Proficiency in Company Secretaryship) Specialized programmes and separate academic calendars for aspirants of CA & CS.
- **B.Com. Hons.** (Applied Accounting and Finance) Accredited by ACCA, UK.

UG - PROFESSIONAL PROGRAMMES

- **B.A.** (J.M.C.)
- **B.F.A.**
- **B.C.A.**
- **B.Sc. Hons.** (Forensic Science)
- **B.Sc. Hons.** (Data Analytics and Artificial Intelligence)
- **B.Sc. Hons.** (Home Science)
- **B.Sc.** (Fashion Design)
- **B.Sc.** (Jewellery Design & Technology)
- **B.B.A.**
- **BBA** (Aviation and Tourism Management)

BACHELOR OF VOCATION (B.Voc.) PROGRAMMES*

- **B.Voc.** (Office Management and Secretarial Practices)
- **B.Voc.** (Banking and Financial Services)
- **B.Voc.** (Entrepreneurship and Business Innovation)
- **B.Voc.** (Digital Marketing)

*UGC Approved

CO-EDUCATIONAL PROGRAMMES
@ IISU Block, ISIM Campus, Mahaveer Marg, Mansarovar

- **B.Sc. Hons.** (Multimedia & Animation)
- **B.C.A.** (Bachelor of Computer Applications)
- **B.B.A.** (Bachelor of Business Administration)
- **B.Lib.I.Sc.** (Bachelor of Library and Information Science)
- **M.A.** (Digital Media and Communication)
- **M.C.A.** (Master of Computer Applications)
- **M.B.A.** (**Dual Specialization, Trimester based**)- Marketing, Finance, Production and Operation Management HR, IB, IT

INTEGRATED PROGRAMMES

- **B.A. B.Ed.***
- **B.Sc. B.Ed.***
- **B.Sc. M.Sc.** (Nano Science & Technology)

*NCTE Approved

SHORT TERM COURSES

- **Cyber Security and Cyber Law (Online)**
- **Certificate Course in Textile Design**

POST GRADUATE PROGRAMMES

- **M.A.-** English, History, Economics, Psychology, French, Sociology, Geography, Mathematics, Political Science, Statistics, International Relations, Public Administration
- **M.Sc.-** Zoology, Chemistry, Microbiology, Botany, Biotechnology, Psychology, Environmental Science, Geography, Mathematics, Physics, Economics, Statistics
- **M.Com. -** Accounting & Taxation, Business Studies, Financial Studies

PG - PROFESSIONAL PROGRAMMES

- **M.A.-** Journalism & Mass Communication
- **M.A. /M.Sc.** (Yogic Sciences)
- **M.A./M.Com./M.Sc.** (Fashion Design)
- **M.A./M.Com./M.Sc.** (Jewellery Design)
- **M.F.A. -** Applied Art (Graphic Design/Illustration), Print Making, History of Art, Painting, Sculpture (Portraiture, Creative Sculpture)
- **M.S.W.** (Master of Social Work)
- **M.Sc. Home Science -** Clothing and Textiles, Foods and Nutrition, Human Development
- **M.B.A. (Semester Based)** Human Resource Management; International Business; Retail Management; Tourism & Travel Management; Finance; Advertising & Brand Management; Business Analytics; Innovation, Entrepreneurship and Venture Development

MBA/MCA AICTE Approved

RCI APPROVED PROFESSIONAL DIPLOMA IN CLINICAL PSYCHOLOGY

RESEARCH PROGRAMMES

- **Ph.D.:** Admission through Research Entrance Test.
- **D.Sc./D.Litt.**

CAREER ORIENTED & SKILL DEVELOPMENT PROGRAMMES, 3-LEVEL CERTIFICATE/ DIPLOMA/ADVANCED DIPLOMA ALONG WITH DEGREE PROGRAMMES

Scholarship for Meritorious/ National Level Sports Achievers

PREPARATORY CLASSES
along with UG/PG programmes

- Civil Services
- NET
- USCMA

DISTINGUISHING FEATURES

- Hostel Facilities Available
- NCC
- Placement Support
- NSS
- Wi-Fi Enabled Campus
- Sports
- Extension Activities
- Extra & Co-Curricular Activities
- Conveyance Facility, covering all parts of Jaipur including remote areas

FOR MORE INFORMATION :

Gurukul Marg, SFS, Mansarovar, Jaipur-302020
Rajasthan (INDIA)

+91 141 2400160, 2397906/07
Toll Free No.: 1800 180 7750

admissions@iisuniv.ac.in

www.iisuniv.ac.in